# தமிழரசு

டிசம்பர் 2004






தமிழ்நாடு மின்சாரவாரியம்
தூத்துக்குடி அனல் மின்நிலையம்
வெள்ளி விழா
(08.12.2004) புதன் கிழமை
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு மின்சார வாரியம்

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
கார்த்திகை – மார்கழி
மலர்:36 இதழ்: 6
டிசம்பர் 2004
விலை ரூ.10

## இந்த இதழில்...

★ கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் – நிதி உதவி ... 2
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை (28.12.2004)

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் கொடிநாள் செய்தி (டிசம்பர் 7) ... 8

★ சமூகக் கோளாறுகளைச் சுட்டிக் காட்டுங்கள்: அதே நேரத்தில் சமூகமே கோளாறானது என்பது போல் காட்டி விடாதீர்கள் (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் உரை) ... 9

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் உலக எய்ட்ஸ் தினச் செய்தி ... 13

★ காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை) ... 14

★ சென்னையில் பன்னாட்டுத் தரத்தில் மென்பொருள் வளாகம் ... 16

★ தூத்துக்குடி மாவட்ட அரசு விழா ... 17

★ உடல் ஊனமுற்றோருக்கான தேசிய விருதுகள் ... 22

★ அச்ச உணர்வு இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதே காவல் துறையின் முக்கிய நோக்கம்
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் உரை) ... 25

★ 2004–2005ஆம் ஆண்டுக்கான இரண்டாம் துணை மதிப்பீடுகள் ... 30

★ திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் நன்கொடை ... 32

★ சட்டப்பேரவையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை (22.11.2004) ... 33

★ தேனி மாவட்ட அரசு விழா ... 37

★ கிருஷ்ணகிரி மாவட்ட அரசு விழா ... 41

★ இந்தியாவிலேயே முதன்முதலாக 365 நாட்களும் இயங்கும் கடவுச்சீட்டு மையங்கள் ... 46

★ யானைகள் புத்துணர்வு முகாம் ... 48

★ தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகள் பிரகாசமடைந்துள்ளன!
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்) ... 49

★ புதிய வீராணம் திட்டம் – **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களின் தொலைநோக்குப் பார்வை ... 57

★ சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்தநாள் விழா ... 62

★ பெரம்பலூர் மாவட்ட அரசு விழா ... 65

★ முக்கடல் சங்கமத்தில் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா ... 71

★ படமும் செய்தியும் ... 74

★ தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா ... 79

முதலாம் பக்க அட்டை : **தேனி மாவட்ட அரசு விழா**
இரண்டாம் பக்க அட்டை : **தூத்துக்குடி மாவட்ட அரசு விழா**
மூன்றாம் பக்க அட்டை : **திருநெல்வேலி மாவட்டத்தில் காற்றாலை தொடக்க விழா**
நான்காம் பக்க அட்டை : **கிருஷ்ணகிரி மாவட்ட அரசு விழா**

*ஆசிரியரும் வெளியிடுபவரும்:* **வ. கனகராஜ்**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com





# கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் - நிதி உதவி

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விரைந்து சென்று ஆறுதல்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
(28.12.2004)

**த**மிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளை முன் எப்போதும் இல்லாத அளவிலான பேரிடர் ஒன்று திடீரென பெரும் சீற்றத்தோடு **26.12.2004** அன்று தாக்கியது. இதன் தாக்கம் மிகப்பரந்த அளவில் இருந்தது. இதனால் அனைத்துக் கடற்கரைப் பகுதி நெடுகிலும் அமைந்திருந்த கிராமங்களும் நகரங்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டன. இதுபோன்ற ஒரு இயற்கைப் பேரிடரை இதுவரை நாம் கண்டதே இல்லை. இந்தப் பேரிடரின் காரணமாக, மிகப் பெரும் அளவில் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி **3925** நபர்கள் உயிரிழந்துள்ளனர். லட்சோப லட்சம் மக்கள் வீடுகளை இழந்து விட்டனர். இந்தப் பேரிடர் தமிழ்நாடு முழுவதிலும் கடலோரப் பகுதிகளின் பொருளாதாரத்தை முற்றிலுமாக சேதப்படுத்தி நசித்துவிட்டது. இப்பேரிடர், மீனவர்களின் வாழ்க்கையையே நாசத்திற்கு உள்ளாக்கி விட்டது. மீனவர்கள் தங்களின் வீடுகளையும், உடைமைகளையும், வாழ்வையும் இழந்து விட்டனர். இந்தோனேசியா கடல் பகுதியில் ஏற்பட்ட நில அதிர்ச்சியைத்



தொடர்ந்து எழுந்த சுனாமி அலைகளால் விளைந்த மரணங்கள் மற்றும் நாசங்கள் என்னைச் சோகக் கடலில் ஆழ்த்தியுள்ளன.

26.12.2004 அன்று ஏற்பட்ட பேரிடர் பற்றிய விவரங்களை அறிந்த உடனேயே, தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள மாநில அரசு இயந்திரத்தை நான் முடுக்கி விட்டேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட நிருவாகத்துடன் தொடர்பு கொண்டு காவல் துறையினர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையினர், வருவாய்த்துறையினர், மருத்துவ மற்றும் சுகாதாரப் பணிகள் துறை மற்றும் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதை நான் உறுதிப்படுத்தினேன். முன்னெச்சரிக்கை இல்லாமல் திடீரென நிகழ்ந்துவிட்ட இந்த சம்பவத்தினால் பெரும் அதிர்ச்சி ஏற்பட்ட போதிலும், அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த நிருவாக அமைப்புகள் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் மிகுந்த அக்கறையுடனும் அர்ப்பணிப்பு உணர்வோடும் உடனடியாக ஈடுபட்டனர். தமிழ்நாடு அரசின் மாவட்ட நிருவாகம் மேற்கொண்ட பணிகளுக்கு ராணுவம், கப்பற்படை, விமானப்படை மற்றும் கடலோர எல்லை பாதுகாப்புப் படை ஆகிய அமைப்புகள் பேருதவி புரிந்தன. தமிழக அரசு மேற்கொண்ட இந்த அசாதாரணமான முயற்சியின் பயனாக, பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களையும் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தி, நிவாரண முகாம்களில் உணவு வழங்கிட முடிந்தது. அதே நேரத்தில், போர்க்கால அடிப்படையில் தேடுதல் பணிகளும், மீட்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. அநேகமாக அனைத்துச் சடலங்களும் மீட்கப்பட்டு விட்டன. சில சடலங்கள் கடற்கரை ஓரங்களில் இன்னமும் ஒதுங்கி வருகின்றன. இது மிகக் கொடூரமான ஒரு சோக நிகழ்வு என்பதில் ஐயமில்லை. எனவே, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அனுதாபத்தையும் நமது வருத்தங்களையும் தெரிவிப்பதில் நாம் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும்.

நான், உடனடியாக, 26.12.2004 அன்று ஹெலிகாப்டர் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டேன். கோடியக்கரை முதல் சென்னையின் வட பகுதியில் அமைந்துள்ள எண்ணூர் வரை அனைத்துப் பகுதிகளையும் நான் பார்வையிட்டேன். கோடியக்கரை, வேளாங்கண்ணி, அக்கரைப்பேட்டை, நாகப்பட்டினம், நாகூர், கடலூர், மரக்காணம், கல்பாக்கம், மாமல்லபுரம், நீலாங்கரை, கொட்டிவாக்கம், பெசன்ட் நகர், சீனிவாசபுரம், பட்டினப்பாக்கம், மெரினா கடற்கரை, துறைமுகம், காசிமேடு, எண்ணூர் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட பேரழிவுகளை நான் பார்வையிட்டேன். இவ்வாறு ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டபோது, கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர்களுக்கு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வது பற்றி குறிப்பான உத்தரவுகளை மீண்டும் பிறப்பித்தேன்.

மீண்டும், 27.12.2004 அன்று சென்னை ஆளுநர் மாளிகையில் மத்திய உள்துறை அமைச்சர் திரு.சிவராஜ் பாட்டீல் அவர்களைச் சந்தித்த பிறகு நான் கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் புறப்பட்டுச் சென்றேன். கன்னியாகுமரி, மண்டைக்காடு, முட்டம் மற்றும் குளச்சல் ஆகிய பகுதிகளை ஹெலிகாப்டர் மூலம் ஆய்வு செய்தேன். கடல் அலைகளின் தாக்கத்தால் ஏற்பட்ட நாசங்களை நான் பார்வையிட்டேன். பாதிப்புகள் மிகவும் கடுமையாக இருந்தன. நாகர்கோவிலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களை கோட்டாறு மற்றும் வேப்பமோடு நிவாரண இடைவிடாத மழை பெய்து வருகின்ற போதிலும் நிவாரணப் பணிகளை முடுக்கி விடுமாறு அவர்களுக்கு நான் உத்தரவிட்டேன். சடலங்கள் அனைத்தும் மீட்கப்படுவதையும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் நிவாரண முகாம்களுக்குக் கொண்டு வரப்பட்டு உதவிகள் வழங்கப்படுவதையும் மாவட்ட நிருவாகம் உறுதிப்படுத்தி உள்ளது.

கடலூருக்குச் செல்லும் வழியில் பொறையார், பரங்கிப்பேட்டை, கடலூர் ஆகிய இடங்களில்



மையங்களிலும், காயம் அடைந்தவர்களை ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினேன். அவர்கள் இந்தச் சோகமான பேரிடர்களில் இருந்து மீண்டு புதிய வாழ்க்கையைத் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு அளிக்கும் என நான் அவர்களுக்கு உறுதி அளித்தேன்.

நான் 27.12.2004 அன்று மீண்டும் நாகப்பட்டினத்திற்குச் சென்றேன். பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து, மீண்டும் பாதுகாப்பான புது வாழ்க்கை அமைவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கை களையும் தமிழ்நாடு அரசு எடுக்கும் என்று நான் உறுதியையும், நம்பிக்கையையும் அளித்தேன். நாகப்பட்டினத்தில் உள்ள மாவட்ட மருத்துவமனைக்குச் சென்றேன். காயமடைந்து சிகிச்சை பெறுபவர்களிடம் நலம் விசாரித்தேன். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அரசு அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட பகுதிகளை ஹெலிகாப்டர் மூலம் பார்வையிட்டேன். நாகப்பட்டினத்திற்கும், கடலூருக்கும் இடைப்பட்ட இப்பகுதிகளில் ஏற்பட்ட சேதாரங்களை நான் ஆய்வு செய்தேன். கடலூரில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து அவர்கள் முழு மறுவாழ்வு பெற்று இந்தச் சோகத்தில் இருந்து மீண்டு புதிய வாழ்க்கையைத் தொடங்குவதை உறுதிப்படுத்து வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் என நான் உறுதி அளித்தேன்.

நான் பார்வையிட்ட பகுதிகள் அனைத்திலும் குடிசைகளும், நிலையான வீடுகளும்கூட இடிந்து தரைமட்டமாகி, மீன்பிடிப் படகுகள் உருக்குலைந்து கிடப்பதையும், பேருந்துகளும் பெரிய டேங்கர் லாரிகளும் கூட ஆங்காங்கே தூக்கி எறியப்பட்டு கவிழ்ந்து கிடப்பதையும் என்னால் காண முடிந்தது. இப்பகுதிகளில் அளப்பரிய சேதாரங்கள் ஏற்பட்டுள்ளன. சேதத்தின் அளவை முழுவதுமாக மதிப்பிடுவதற்குச் சில நாள் பிடிக்கும்.



★ தற்காலிக நடவடிக்கையாக குடிசை அமைத்திட ரூ.2,000/–

★ இக்குடும்பங்களை அவர்களுடைய சம்மதத்துடனும், ஒத்துழைப்புடனும் அருகில் உள்ள பாதுகாப்பான இடங்களுக்கு நிரந்தரமாக இடம் மாற்றி அவர்களுக்கு நிலையான வீடுகள் கட்டித் தர வகை செய்யும் தனியான மறுவாழ்வுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. இது பற்றிய அறிவிப்பு தனியாக வெளியிடப்படும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்திற்கும் மேற்சொன்ன நிவாரண உதவிகளை உடனடியாக வழங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டு இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ள ஒரு லட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கும் உடனடி நடவடிக்கையாக இந்த உதவித் திட்டத்திற்கு நான் ரூ.29.12 கோடி அனுமதித்து உத்தரவிட்டுள்ளேன். இத்துடன், தற்காலிக நடவடிக்கையாக குடிசைகள் அமைத்திட ரூ.20கோடி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டு உள்ளேன்.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்திற்கும் தேவையான நிவாரணங்கள் அளிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதுதான் நாம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டிய பணியாகும். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்தும் நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு அளித்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாவட்ட நிருவாகம் உறுதிப்படுத்தி உள்ளது. தேவைப்படுகிற வரை இந்த ஏற்பாடு தொடரும். உதவி தேவைப்படுகின்ற அனைவருக்கும் இந்த நிவாரண மையங்களில் உணவும், தங்கும் வசதியும் அளிக்கப்படும்.

கடலோரப் பகுதிகளில் வாழ்ந்து வந்த குடும்பங்கள் தங்கள் உடைமைகள் அனைத்தையும் இழந்துவிட்டன. அவர்கள் மீண்டும் புதிதாக வாழ்க்கையைத் தொடங்குவதற்கு ஏதுவான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில், பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றுக்கும் உடனடி நிவாரண உதவி தொகுப்பு (Relief Package) அளித்திட நான் ஆணையிட்டுள்ளேன். இந்த நிவாரண உதவித் தொகுப்பில் கீழ்க் கண்டவை அடங்கும்.

★ ஒரு வேட்டி, ஒரு சேலை மற்றும் இரண்டு போர்வைகள்

★ 60 கிலோ அரிசி

★ 3 லிட்டர் மண்ணெண்ணெய்

★ சமையலுக்குத் தேவையான பொருள்கள், பருப்பு, எண்ணெய் முதலியன வாங்குவதற்காக ரூ.1,000/–

★ பாத்திரங்கள் மற்றும் அடுப்பு வாங்குவதற்காக ரூ.1,000/–

பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்களுடைய உடைமைகளை முற்றிலுமாக இழந்து விட்டன. அவர்கள் மீண்டும் தங்களுடைய வாழ்க்கையைத் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தமிழ்நாடு அரசு வழங்கும். நான் அறிவித்துள்ள தொகுப்பு உதவித் திட்டம் இதற்கு பெரிதும் உதவும். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மீண்டும் வாழ்க்கையைத் தொடங்க ஏதுவாக துணிகள், உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் இதர அன்றாடத் தேவைகளுக்கான பொருட்களை வழங்க பொதுமக்கள் விரும்புவதாக எனக்கு ஏராளமான கோரிக்கைகள் வந்துள்ளன. சுனாமி அலைகள் இம்மக்களுடைய வீடுகளைத் தரைமட்டமாக்கி விட்டதால், இவர்கள் குடியிருக்க வீடுகள் அற்ற நிலையில் உள்ளனர். இவர்கள் இழந்த வீடுகளை மீண்டும் கட்டுவதற்கு வேண்டிய பொருட்களை வழங்குவதற்கு பல நன்கொடையாளர்கள் முன் வந்துள்ளனர். நான் 26.12.2004 அன்று ஏற்கெனவே தெரிவித்தவாறு இது ஒரு கொடூரமான மிகப் பெரிய சோக நிகழ்வாகும். ஆகவே, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மீண்டும் தங்கள் வாழ்க்கையைத் தொடங்கிடத் தேவைப்படும் உதவிகளைத் தாராளமாக வழங்க அனைவரும் முன் வரவேண்டும். இவ்வாறு தமிழ்நாட்டில் உள்ளவர்களால் நன்கொடையாக வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் அனைத்தும் அவர்கள் சார்ந்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அளிக்கப்படலாம். அவர்கள் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள ஆட்சித் தலைவர்களுக்கு



அவற்றை அனுப்பி வைப்பார்கள். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அப்பொருட்கள் விநியோகிக்கப் படுவதை அம்மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதிசெய்வர். நன்கொடையாளர் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்து, அப்பொருட்களை விநியோகம் செய்வதற்காக மாநில அரசிடம் வழங்க விரும்பினால், அவற்றை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் அவர்களிடம் வழங்கலாம். அவர் மாநில துயர் துடைப்பு ஆணையாளர் அவர்களின் மேற்பார்வையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அப்பொருட்கள் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வார். இவ்வாறு வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் அனைத்தையும் கையாளுவதற்காக மாநில நிவாரணப் பணிகள் ஆணையாளரின் அலுவலகத்தில் 044-28593990 என்ற எண்ணுள்ள தொலைபேசி வசதியுடன் ஒரு கட்டுப்பாடு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்பணியின் அளப்பரிய தன்மையைக் கருத்தில் கொண்டு, அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக நிதிஉதவி வரவேற்கப்படுகிறது என நான் ஏற்கெனவே அறிவித்துள்ளேன். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்திற்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலும், வெளிநாட்டிலும் உள்ள நல்லெண்ணமும், கொடை உள்ளமும் கொண்ட நபர்களும், நிறுவனங்களும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்குத் தாராளமாக நிதி உதவி வழங்கிடவேண்டும் என நான் மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகையாக ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என நான் ஏற்கெனவே அறிவித்துள்ளேன். இந்தச் சோகத்தின் கடுமையைக் கருத்தில் கொண்டும், மிகவும் அடிமட்ட நிலையில் உள்ள ஏழை எளிய மக்களே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதாலும், இந்தப் பேரிடரில் மரணம் அடைந்த ஒவ்வொரு நபருக்கும் ஒரு இலட்சம் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கிட நான் முடிவு செய்துள்ளேன்.

இந்தப் பேரிடரில் மீனவர்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையின் ஆதாரத்தையே இழந்து விட்டார்கள்.





தங்கள் உடைமைகள் அனைத்தையும் இழந்து விட்டார்கள். அவர்கள் உடனடியாகத் தங்கள் பிழைப்புக்குத் தேவையான ஊதியத்தை ஈட்டுவதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும். மீனவர்கள் மீண்டும் கடலுக்குள் சென்று மீன்பிடி தொழிலைத் தொடங்குவதற்கு ஏதுவாக உடனடி தொகுப்பு உதவித் திட்டம் ஒன்றுக்கு நான் அனுமதி வழங்கியுள்ளேன். இந்தத் தொகுப்பு உதவியில் பின்வருபவை அடங்கும்.

★ வள்ளங்களுக்கான 'செவுள் வலையை' (Gill Net) மாற்றுவதற்காக வள்ளம் ஒன்றுக்கு ரூ.20,000 என்ற வீதத்தில் 10,000 வள்ளங்களுக்கு மொத்தம் ரூ.20 கோடி வழங்கப்படும்.

★ மீன்பிடி வலைகளை மாற்றுவதற்காகக் கட்டுமரம் ஒன்றுக்கு ரூ.10,000 என்ற வீதத்தில் 20,000 கட்டுமரங்களுக்கு மொத்தம் ரூ. 20 கோடி வழங்கப்படும்.

★ வள்ளங்களைப் பழுது பார்ப்பதற்காக / மீண்டும் கட்டிக் கொள்வதற்காக வள்ளம் ஒன்றுக்கு ரூ.15,000 என்ற வீதத்தில் 10,000 வள்ளங்களுக்கு மொத்தம் ரூ.15 கோடி வழங்கப்படும்.

★ கட்டுமரங்களைப் பழுது பார்ப்பதற்காக / மீண்டும் கட்டிக் கொள்வதற்காகக் கட்டுமரம் ஒன்றுக்கு ரூ.5,000 என்ற வீதத்தில் 20,000 கட்டுமரங்களுக்கு மொத்தம் ரூ.10 கோடி வழங்கப்படும்.

மீனவர்கள் உடனடியாக மீன்பிடித் தொழிலைத் தொடங்குவதற்காக உடனடி மதிப்பீட்டின் அடிப்படையில் ரூ.65 கோடி செலவில் இந்தத் தொகுப்பு உதவிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விரிவான மதிப்பீட்டின் அடிப்படையில் தேவையான அனைவருக்கும் இந்த உதவிகள் அளிக்கப்படும். இந்தப் பணியை உடனடியாக மேற்கொள்வதற்கு வசதியாக மீன்வளத்துறை இயக்குநருக்கு இந்த நிதி வழங்கப்படும். பாதிப்புக்கு உள்ளான வெளியே மோட்டார் பொருத்தப்பட்ட படகுகள், விசைப் படகுகள் மற்றும் மீன்பிடி இழுவை வலைகள் (Trawl Nets) ஆகியவை தொடர்பாக, விரிவான தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் தனியான ஒரு தொகுப்பு உதவித் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

தற்போது நான் அனுமதித்துள்ள உடனடி நிவாரணப் பணிகளுக்கு ரூ.153.37 கோடி செலவாகும். வீடுகளை மீண்டும் கட்டுதல், படகுகள், மீன்பிடி வலைகள் வழங்குதல் ஆகியவை உள்ளிட்ட நிரந்தர மறுவாழ்வு நடவடிக்கைகளுக்கு பல நூறு கோடி ரூபாய் தேவைப்படும். விரிவான ஆய்வுப் பணிகள் முடிந்த பிறகு மறுவாழ்வு மற்றும் மறு சீரமைப்புக்கான கூடுதல் தொகுப்பு உதவித் திட்டம் பற்றி நான் அறிவிப்பேன்.

தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இந்த அளப்பரிய துயரத்தைக் கருத்தில் கொண்டு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காகத் தமிழ்நாட்டிற்குச் சிறப்புத் தொகுப்பு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களையும் மத்திய உள்துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொண்டுள்ளேன். ☐

# மாண்புமிகு
# தமிழக முதலமைச்சர் அவர்களின் கொடிநாள் செய்தி
## (டிசம்பர் – 7)

நம் தாய்த் திருநாட்டின் எல்லைகளை இரவு பகலாக காத்து வருபவர்கள் நமது முப்படை வீரர்கள். இமயத்தின் பனிமுகடுகளிலும், வடகிழக்கு எல்லைப் பகுதியின் அடர்ந்த காடுகளிலும், நீண்ட நெடிய கடல் நெடுகிலும் தம் இன்னுயிரைப் பணயம் வைத்து, கண் இமையாமல் காவல் புரியும் முப்படை வீரர்கள் செய்த தியாகங்களைப் போற்றி நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் டிசம்பர் 7–ஆம் நாள் கொடி நாளாக அனுசரிக்கப் படுகிறது.

நாட்டின் எல்லைகளை மட்டும் அல்லாமல் இறையாண்மையைக் காப்பதிலும் முன்நிற்பவர்கள் முப்படை வீரர்கள். அந்த முப்படை வீரர்களின் நலம் காப்பதில் எம்மாநிலத்தையும் விட முன்நிற்பது நமது மாநிலம். நாடு காக்கும் பணியில் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட இராணுவ வீரர்களின் குடும்பங்களைக் காத்திடுவதும், வீர மரணம் எய்திய போர் வீரர்களின் குடும்பங்களுக்கு இயன்ற உதவிகளை அளித்திடுவதும் நாட்டு மக்களின் கடமையாகும்.



இந்த இனிய வேளையில் முப்படை வீரர்கள் மற்றும் முன்னாள் படை வீரர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களின் சேவைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், கொடிநாள் நிதிக்கு நன்கொடையினை வாரி வழங்கும்படி எனதருமை தமிழக மக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

* * *

# சமூகக் கோளாறுகளைச் சுட்டிக்காட்டுங்கள் : அதேநேரத்தில் சமூகமே கோளாறானது என்பதுபோல் காட்டிவிடாதீர்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு தமிழ்த் திரைப்பட உலகின் நட்சத்திரங்களுக்கும், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும் **2000,2001** மற்றும் **2002** ஆகிய **3** ஆண்டுகளுக்கான தமிழக அரசின் திரைப்பட விருதுகளை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நீல வானத்து நட்சத்திரங்கள் எல்லாம் நிலத்துக்கு வந்ததைப் போல் தமிழ்த் திரையுலகத்தைச் சேர்ந்த நீங்கள் எல்லாம் இந்தப் பல்கலைக்கழக மண்டபத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். உங்களை எல்லாம் ஒருசேரக் காண்பது மகிழ்ச்சி! உங்களோடு பேசுவது பெருமகிழ்ச்சி! உங்களுக்கு விருதுகள் வழங்குவதோ மிகப் பெரும் மகிழ்ச்சி!

தமிழ்த் திரைப்படத் தொழிலுக்கு ஊக்கம் கொடுத்து திரைப்படத் துறையினருக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு, திரைப்பட விருதுகளை வழங்கி வருகிறது. அதன்படி இன்றைக்கு **2000, 2001** மற்றும் **2002** ஆகிய ஆண்டுகளுக்கான சிறந்த திரைப்படங்களுக்கான விருதுகளையும், சிறந்த இயக்குநர்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகைகள் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறும்படங்களின் சிறந்த இயக்குநர், நடிகர், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கும் விருதுகளை வழங்குகிறேன். மேலும், தமிழ்த் திரைப்பட உலகில் சாதனை படைத்துவரும் பெருமக்களுக்குக் கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகளையும் வழங்குகிறேன். இவ்வாறு மொத்தம் **136** பேருக்கு விருதுகளை வழங்குகின்ற முத்தான வாய்ப்பு இன்று கிடைத்தது குறித்து நான் மகிழ்கிறேன்; பெருமிதம் அடைகிறேன்.

திரைப்படத் தொழிலினை வளங் கொழிக்கும் தொழில் என்றுதான் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எத்தனை பொருளாதாரப் பூகம்பங்களைச் சந்தித்த பின்பு திரைப்படம் மக்கள் மன்றத்துக்கு வருகிறது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

அது மட்டுமா?

மக்களின் கவலையைப் போக்கி, களிப்பை ஊட்டும் திரைப்படக் கலைஞர்களின் வாழ்வில்தான் எத்தனை ஏற்றத் தாழ்வுகள்?



ஒரு மருத்துவரிடம் நோயாளி ஒருவர் வந்தார். "எனக்கு மனக் கவலை மிக அதிகமாக இருக்கிறது ஏதாவது மருந்து கொடுங்கள்" என்று கேட்டார்.

மருத்துவர் சொன்னார். "மனக்கவலை என்பது மருந்துகளால் தீராது. அப்படித் தீர்க்கவும் முடியாது. உங்களுக்கு நான் நல்லவழி ஒன்று கூறுகிறேன். வாய்விட்டுச் சிரியுங்கள், வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்று பழமொழி இருக்கிறது. எனவே சிரியுங்கள்: சிரித்துக் கொண்டே இருங்கள்: உங்கள் மனக்கவலை மாறும்" என்று மருத்துவர் சொன்னார்.

"எப்படிச் சிரிப்பது? "எனக்கு இருக்கும் கவலைகளை நினைத்தால் சிரிக்கத்தான் முடியுமா? எப்படி நான் சிரிப்பது?" என்றார் வந்தவர்.

"கவலைப்பட வேண்டாம்! இந்த நாட்டிலே மிகச் சிறந்த நகைச்சுவை நடிகர் ஒருவர் இருக்கிறார். அவர் பெயர் க்ரிமால்டி (Grimaldi) அவர் இப்போது நம் நகரில்தான் தங்கி இருக்கிறார். அவரிடம் போங்கள். அவர் சிரிக்க வைப்பார். எப்படிப்பட்ட கவலையும் பறந்து போகும். பிறரைச் சிரிக்க வைப்பதில் அவருக்கு நிகர் அவர்தான். அவரைச் சந்தியுங்கள். உடனே போங்கள்!" என்று மருத்துவர் சொன்னார்.

உடனே வந்த நபர் விக்கி விக்கி அழ ஆரம்பித்தார்.

டாக்டருக்குப் பயமாய்ப் போய் விட்டது. நாம் ஏதாவது தப்பாகப் பேசிவிட்டோமோ என்று அச்சப்பட்டார்.

அவர் கேட்டார்! "ஏன் அழுகிறீர்கள்? நகைச்சுவை நடிகர் க்ரிமால்டியைப் பார்க்கத் தானே நான் சொன்னேன்? அதில் என்ன தவறு? அதற்கேன் அழுகிறீர்கள்?" என்று கேட்டார்.

வந்த நபர் அழுகையை நிறுத்தாமல் டாக்டரின் கைகளைப் பிடித்துக் கொண்டு சொன்னார்.

"டாக்டர்! நான் தான் அந்த க்ரிமால்டி! எந்த நகைச்சுவை நடிகரை நீங்கள் பார்க்கச் சொன்னீர்களோ அந்த நகைச்சுவை நடிகரே நான்தான்" என்று அவர் சொன்னார். அப்போது டாக்டருக்கு மனக்கவலை அதிகமாகிவிட்டது.

எப்படிப்பட்ட கருத்தாழம் மிக்க வேடிக்கை கதை இது! பார்த்தீர்களா?

இப்படி தங்கள் நிலை எப்படி இருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் தங்களுடைய ரசிகர்களை மகிழ்வூட்டத் துடிக்கிறவர்கள்தான் திரைப்படக் கலைஞர்கள்! திரைப்பட இயக்குநர்கள்! திரைப்படத் தொழில்நுட்பக் கலைஞர்கள்!

ஒவ்வொரு திரைப்படத்துக்குப் பின்னும் ஒரு சரித்திரம் ஒளிந்திருக்கிறது. ஆனால், தங்கள் சொந்தக் கவலையைப் பற்றி நினைக்காமல் மக்கள் கவலையைப் போக்குகின்ற மகத்தான சமூக மருத்துவர்கள் தான் திரைப்படக் கலைஞர்கள்.

அப்படிப்பட்ட பெருமக்களாகிய உங்களது தொழிலே அழிவடைந்துவிடுமோ என்ற நிலை வந்தபோது உடனடியாக நடவடிக்கை எடுத்தேன். தமிழ்த்



திரைப்படத்துறைக்கு உயிர் கொடுக்கும் பணி எவ்வளவு அவசியமானது, எவ்வளவு அவசரமானது என்பதை உங்களில் ஒருவராகிய, உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னால்தானே உணரமுடியும்?

ஆகவேதான், திருட்டு விசிடி–யைத் தடுத்து நிறுத்தினேன்! கேளிக்கை வரி விதிப்பு முறையில் மாற்றங்கள் செய்தேன்! திரையரங்குகளின் பராமரிப்புக் கட்டணத்துக்குக் கேளிக்கை வரி இல்லாமல் செய்தேன்!

திரையரங்குகளின் வசதிகளுக்கும், தூய்மைக்கும் உறுதியளிக்கும் வகையில் அவற்றைக் கண்காணிக்க ஆணையிட்டேன். பொதுமக்களுக்குக் கூடுதல் கட்டணச் சுமை ஏற்பட்டுவிடாதபடி, இந்த மாற்றங்களைக் கொண்டு வந்தேன். மேலும், பொது இடங்களில் திரைப்படப் படப்பிடிப்புகள் நடத்துவதற்கான கட்டணத்தைப் பெரும் அளவில் குறைத்தேன். குறைந்த செலவிலான திரைப்படங்களுக்கு வழங்கப்படும் மானியத்தை 7 இலட்சம் ரூபாயாக உயர்த்தினேன்.

இவற்றின் விளைவாக, திரையரங்குகள் திருமண மண்டபங்களாகவும், வணிக வளாகங்களாகவும் மாறிவந்த அவலம் இன்று மறைந்து வருகிறது. திருட்டு விசிடி கடைகள் புத்தகக் கடைகளாகவும், வேறு கடைகளாகவும் புதிய பரிணாமம் எடுத்து வருகின்றன.

இந்த மாற்றங்கள் எல்லாம் தமிழ்த் திரை உலகில் புதிய எழுச்சியை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன். அந்த எழுச்சி புதிய சாதனைகளைத் தேசிய அளவிலும், உலக அளவிலும் படைக்க உதவும் என்றும் நான் நம்புகிறேன்.

ஜீவனுள்ள கலைப்படைப்புகளை வழங்குங்கள். ஒரு திரைப்படம் உயிர்த்துடிப்புள்ளதாக அமையும் போது அது



காலங்களைத் தாண்டி வாழும் காவியம் ஆகிறது. அப்போது அது திரைப்படம் அல்ல; திரைப் பாடம்! குழந்தைகள் முதல் வயோதிகர் வரை அனைவரையும் வசீகரிக்கக் கூடிய மிக வலிமையான ஊடகம் திரைப்படம்.

சாமானிய மக்களிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் சக்தி திரைப்படத் துறையைத் தவிர வேறு எந்தத் துறைக்கும் இல்லை என்பதை நினைவில் வையுங்கள்.



'எப்படிச் சொல்வது?' என்னும் கலையை, எவரைக் காட்டிலும் அதிகம் அறிந்தவர்கள் நமது தமிழ்த் திரைப்பட இயக்குநர்கள். அதை 'எப்படிப் படைப்பது?' என்பதில் மிகுந்த திறமை படைத்தவர்கள் நமது தொழில்நுட்பக் கலைஞர்கள்.

ஆனால், 'எதைச் சொல்வது?' என்பதிலும் அக்கறை இருக்க வேண்டும்.

கலை உலகப் பெருமக்களாகிய உங்களுக்குச் சமூக அக்கறை அதிகம் வேண்டும் என்று இந்த நாடு எதிர்பார்க்கிறது. எனவே, சமூக அக்கறையோடு இருங்கள். சமூக அக்கறையோடு படைப்புகளைத் தாருங்கள்.



வன்முறையைத் திரைப்படங்கள் மூலம் வளர்க்காதீர்கள். அது ஆபத்தானது! ஆதாய ஆசையில் ஆபாசத்தை வளர்த்து விடாதீர்கள். அது அபாயகரமானது!

சமூகத் தீமைகளைச் சாடுங்கள். சமூகத்தில் மலிந்து கிடக்கும் மூட நம்பிக்கைகள், பெண்ணடிமைத்தனம், சாதி வேற்றுமை ஆகியவற்றைத் தகர்த்து எறியுங்கள். ஆனால் உடைப்பது மட்டுமே கடமை என்று இருந்து விடாமல் உருவாக்க வேண்டியதும் நமது கடமைதான் என்பதை உணர்ந்து செயல்படுங்கள்.

காவல்துறையைக் கேவலமாகச் சித்தரிக்காதீர்கள். அது காக்கின்ற கரங்களைப் பலவீனப்படுத்தும் – அதனால் சமுதாயம் பாதிப்படையும்.

சமூகக் கோளாறுகளைச் சுட்டிக் காட்டுங்கள்! அதேநேரத்தில், சமூகமே கோளாறானது என்பது போல் காட்டி விடாதீர்கள்! உங்களுடைய சமூகப் பொறுப்பு, மிகப் பெரியது என்பதை உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் இந்த வேளையில் சுட்டிக் காட்ட வேண்டியது எனது கடமை என்று கருதுகிறேன்.

இந்தியாவிலேயே எல்லாத் துறையிலும் முதல் மாநிலம் தமிழகம் என்ற நிலைமையை நான் உருவாக்கியே தீருவேன். அந்தப் புனிதப் பணியில் என் அன்புக்குரிய சகோதர, சகோதரிகளாகிய நீங்கள் அனைவரும் எனக்கு உறுதுணையாக இருப்பீர்கள் என்று உறுதியாக நான் நம்புகிறேன்.



இன்று விருது பெற்ற அனைவரையும் பாராட்டுகிறேன். இன்னும் பல விருதுகளை நீங்கள் பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

விருது பெறாதவர்கள் அடுத்த முறை விருது பெற இப்பொழுதே எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். விருது பெறாதவர்கள் திறமையற்றவர்கள் என்று பொருள் அல்ல. உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் அளப்பரிய ஆற்றல் உள்ளது. அந்த ஆற்றலைப் பயன்படுத்தி அடுத்த முறை வெற்றி பெற வேண்டும். விருது பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் சாதனைச் சரித்திரம் படைக்க உங்கள் அன்புச் சகோதரியின் வாழ்த்துகளைத் தெரிவித்து,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
**3–12–2004** அன்று நடைபெற்ற
தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள்
வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# உலக எய்ட்ஸ் தினச் செய்தி



**ஆ**ண்டுதோறும் டிசம்பர் திங்கள் முதல் நாள் உலக எய்ட்ஸ் நாளாக அனுசரிக்கப்படுகிறது. இன்றைய உலகின் மிகக் கொடியதொரு நோயிலிருந்து மனித குலத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு நினைவூட்டாக இது அமைகிறது. எய்ட்ஸ் நோயால் இளம் வயதினரே அதிக அளவில் பாதிக்கப்படுவதால், இக்கொடிய நோயிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

பெண்கள், சிறுமிகள், எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் (Women, Girls, HIV and AIDS) என்பது இந்த ஆண்டு எய்ட்ஸ் தினத்தின் கருப்பொருள் ஆகும். குடும்பத் தலைவரை எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோய் பாதித்தால், அவர் மூலம் அவரது மனைவிக்கும், கருவில் இருக்கும் குழந்தைக்கும் இந்நோய் பரவுகிறது. எனவே, அனைத்துப் பெண்களும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் சம்பந்தமான தடுப்பு, கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்ற இன்றியமையாத தகவல்கள் பற்றி நன்கு அறிந்து இருக்க வேண்டியதும், நோயிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் திறன் பெற்றவர்களாக இருக்க வேண்டியதும் அவசியமாகும்.

இந்தக் கொடிய நோயிலிருந்து பெண்களையும், குழந்தைகளையும் காப்பதற்காக செயல்படுத்தப்பட்டு வரும் 'தாய் சேய் மேவா திட்டத்தின்' காரணமாக, இதுவரை 2,300 எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட தாய்மார்கள் 1,500–க்கும் மேற்பட்ட எச்.ஐ.வி. இல்லாத குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளனர். மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் அயராத உழைப்பினால் இது சாத்தியமாகியுள்ளது. அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயினைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் நோய் தாக்குண்ட நபர்களை அரவணைத்துப் பராமரித்தல் ஆகியவற்றில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும், எய்ட்ஸ் இல்லாத தமிழகத்தை உருவாக்க துணை நிற்க வேண்டும் என்றும் இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

விழிப்புணர்வு ஏற்படுத்துவோம்!
எச்.ஐ.வி. பரவாமல் தடுப்போம்!

❖ ❖ ❖

**வா**னிலே விமானங்கள் மோதாமல் இருப்பதற்காக, ஒரு திசையில் செல்லும் விமானங்கள் ஒற்றைப்படை ஆயிர அடி உயரத்திலும் (5,000, 7,000, 9,000 அடி உயரம்) எதிர்த் திசையில் செல்லும் விமானங்கள் இரட்டைப்படை ஆயிர அடி உயரத்திலும் (6,000, 8,000, 10,000 அடி உயரம்) செல்லும்.



# காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்






திருநெல்வேலி மாவட்டம் செட்டிகுளத்தில் இன்று நடைபெறும் இந்த விழாவில், என் அன்புக்குரிய உங்களை எல்லாம் காண்பதற்கும், சுஸ்லான் நிறுவனத்தின் 2 மெகாவாட் காற்றாலையைத் தொடங்கி வைப்பதற்கும் வாய்ப்புக் கிடைத்தது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சக்திகளில் தலைசிறந்த சக்தி, மின் சக்தி. மின்சாரத்தைப் பயன்படுத்தி நாம் பெறும் பயன்கள் ஏராளம்; நாம் பெறும் வசதிகளும் ஏராளம். மின்சாரம் இல்லாத உலகத்தை இன்று நாம் நினைத்துக் கூடப் பார்க்க இயலாது. இன்றைக்கு உலகையே ஒளிமயம் ஆக்கிக் கொண்டிருப்பது மின்சாரம்.

மின்சாரத்தை உற்பத்தி செய்ய நிலக்கரியைப் பயன்படுத்தும் அனல் மின் நிலையங்களையும், நீரைப் பயன்படுத்தும் புனல் மின் நிலையங்களையும் நாம் உருவாக்கி இருக்கிறோம். மேலும், அனல் மின் நிலையத்திற்கான நிலக்கரியைப் பெறுவதற்கு, நாம் வட மாநிலங்களையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. அங்கேயும் கூட, நிலம் உள்ளவரை நிலக்கரியும் இருக்கும் என்று சொல்ல இயலாது. 'சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும்' என்பது, நம் தமிழ் மொழியில் உள்ள பழமொழி. எனவேதான், மரபு சாராத எரிசக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது.

மரபு சாராத எரிசக்தியைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் முயற்சிகளில், நாம் முனைப்போடு செயல்பட்டு வருகிறோம். அப்படிப்பட்ட முயற்சிகளில் முக்கியமானதுதான், காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் முயற்சி ஆகும்.

காற்று எல்லா இடங்களிலும் வீசுகிறதே, அதனால் எல்லா இடங்களிலும் காற்றாலைகளை அமைத்து, மின் உற்பத்தி செய்து விட முடியுமா? முடியாது! காற்றின் அளவு குறிப்பிட்ட அளவுக்குக் குறையாமல் இருந்தால்தான், காற்றாலையை நிறுவி மின்சாரம் தயாரிக்க இயலும்.

தமிழ்நாட்டில் பாலக்காடு கணவாய்ப் பகுதி, செங்கோட்டைக் கணவாய்ப் பகுதி, மற்றும் ஆரல்வாய்மொழிப் பகுதியில் காற்றின் வேகம் மணிக்கு **18** முதல் **25** கிலோ மீட்டர் அளவுக்கு உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. எனவேதான், இங்கெல்லாம் காற்றாலை நிறுவப்படுவதை எனது அரசு ஊக்குவித்து வருகிறது.

பல்வேறு துறைகளில் இந்தியாவிலேயே முதல் இடம் வகித்து வரும் தமிழ்நாடு, காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்வதிலும், தொடர்ந்து இந்தியாவிலேயே முதல் இடம் வகித்து வருகிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

நான் முதலமைச்சராக முதலில் பொறுப்பேற்பதற்கு முன்னால் – அதாவது, 1991–ஆம் ஆண்டு வரை, தமிழ்நாட்டில் 102 காற்றாலைகள் நிறுவப்பட்டன. அதன் மொத்த நிறுவுதிறன் 19 மெகா வாட் ஆகும். ஆனால், 1991 முதல் 1996 ஏப்ரல் வரை எனது ஆட்சிக் காலத்தில் 538 மெகாவாட் மொத்த நிறுவுதிறன் கொண்ட 1,929 காற்றாலைகள் நிறுவப்பட்டன. 1996 மே முதல் 2001 ஏப்ரல் மாதம் வரை– அதாவது, முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 256 மெகாவாட் மொத்த நிறுவுதிறன் கொண்ட 859 காற்றாலைகள் மட்டுமே நிறுவப்பட்டன. ஆனால், நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற மே 2001 முதல் தற்போது வரை, 854 மெகாவாட் மொத்த நிறுவுதிறன் கொண்ட 1,439 காற்றாலைகளை எனது அரசு நிறுவி இருக்கிறது. அதாவது, தற்போதுள்ள காற்றாலைகளின் நிறுவுதிறனில், 83.5 சதவிகிதம் எனது தலைமையிலான அரசால்தான் நிறுவப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட காற்றாலையின் மொத்த நிறுவுதிறன் 1,667 மெகாவாட் ஆகும். இது, இந்தியாவின் மொத்தக் காற்றாலை நிறுவுதிறன் ஆன 3,080 மெகாவாட் திறனோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, 54 விழுக்காடு ஆகும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சாதனைகளுக்கு எல்லாம் காரணம், காற்றாலை மின் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு வழங்கி வரும் சலுகைகளே ஆகும்.

தமிழ்நாடு அரசும், தமிழ்நாடு மின் வாரியமும், காற்றாலையின் உற்பத்தியை யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் 70 காசு என்ற விகிதத்தில் கொள்முதல் செய்கிறது. மேலும், காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்பவர்கள், தாங்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தைத் தங்களுடைய தொழிற்சாலைகளுக்கும், தங்களுடைய சார்பு நிறுவனங்களுக்கும் உபயோகித்துக் கொள்ள அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்பவர்களுக்கு, வீலிங் (Wheeling) கட்டணமாக 5 விழுக்காடு கழிக்கப்படுகிறது. தமிழ்நாடு மின் வாரியக் கட்டமைப்பில் மின் இழப்பு சுமார் 18 விழுக்காடாக உள்ளது. இதைக் கருத்தில் கொள்ளாமல், காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்பவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில், 5 விழுக்காடு மட்டும் உற்பத்தியில் கழிக்கப்படுகின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுல்லாமல், சேமிப்பு (Banking) முறையும் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிப்பவர்களுக்கு வழங்கப்படுகின்றது. காற்று உள்ள போது உற்பத்தி செய்யும் மின்சாரத்தை, மற்ற காலங்களில் தங்களுடைய தொழிற்சாலைக்கு அதே ஆண்டில் பயன்படுத்திக் கொள்ள அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தமிழ்நாடு மின்வாரியக் கட்டமைப்புக்குக் கொண்டு வருவதற்கு ஏதுவாக, 100 கோடி ரூபாய் மதிப்பிலான 20 துணை மின் நிலையங்கள் நிறுவப் பட்டுள்ளன. காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை, மின்வாரியக் கட்டமைப்புக்குக் கொண்டு வர, மேலும் 176 கோடி ரூபாய் மதிப்பிலான உள் கட்டமைப்பு வசதிகளை, மின்வாரியம், அடுத்த இரண்டு ஆண்டுகளில் நிறுவும் என்பதையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று, சுஸ்லான் கம்பெனியின் 2 மெகாவாட் காற்றாலையை நான் தொடங்கி வைத்ததில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த 2 மெகாவாட் காற்றாலையை சுஸ்லான் நிறுவனம் மட்டும்தான் நிறுவி உள்ளது என்பதையும், இது ஆசியாவிலேயே அதிகபட்சத்திறன் கொண்டதாகும் என்பதையும் அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்த ஆண்டில், சுஸ்லான் நிறுவனம் 400 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது என்று அறிகிறேன். சுஸ்லான் எடுத்து வரும் இந்த ஆக்க பூர்வமான முயற்சிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு மின்சார வாரியம் இங்கு உற்பத்தியாகும் மின்சாரத்தை எடுத்துச் செல்வதற்குத் தேவையான அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலீட்டுக்கு இணக்கமான தமிழ்நாடு அரசின் கொள்கைளைப் பயன்படுத்திக் கொண்டு, மரபு சாரா முறைகளின் மூலம் மின் உற்பத்தி செய்ய முன்வர வேண்டும் என்று தொழில் நிறுவனங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

சுஸ்லான் நிறுவனத்திற்கு எனது பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!
என்று கூறி, விடை பெறுகிறேன்.
நன்றி, வணக்கம்.

**8.12.2004 அன்று திருநெல்வேலி மாவட்டம் செட்டிகுளத்தில் சுஸ்லான் நிறுவனத்தின் 2 மெகாவாட் காற்றாலையைத் தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை**

* * *

# சென்னையில் பன்னாட்டுத் தரத்தில் மென்பொருள் வளாகம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைச் சத்யம் கம்ப்யூட்டர் சர்வீஸ் நிறுவனத்தின் தலைவர் ராமலிங்கராஜு சென்னை தலைமைச் செயலகத்தில் 17.11.2004 அன்று சந்தித்தார். அவருடன் அந்நிறுவனத்தின் அதிகாரிகள் முரளி, ஆத்மராஜ் ஆகியோரும் இருந்தனர்.

இச்சந்திப்பின்போது சத்யம் நிறுவனத்தின் வளர்ச்சியை ராமலிங்கராஜு மாண்புமிகு முதலமைச்சருக்கு எடுத்துரைத்தார். 1987–இல் நிறுவப்பட்ட இந்நிறுவனம் உலக அளவில் பன்னாட்டு நிறுவனமாக வளர்ந்துள்ளது. இப்போது 45 நாடுகளில் 18 ஆயிரம் கம்ப்யூட்டர் வல்லுநர்களைக் கொண்டு வளர்ந்து வருகிறது. இதுவரை 350 பன்னாட்டு வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள இந்நிறுவனம் விரைவில் 500 வாடிக்கையாளர்களைப் பெறவுள்ளது.

சென்னையில் மட்டும் சத்யம் கம்ப்யூட்டர் நிறுவனம் 7 கிளைகளைக் கொண்டுள்ளது. 3500 வல்லுநர்கள் இந்த அலுவலகங்களில் பணியாற்றுகின்றனர். சென்னையில் உள்ள பன்னாட்டுத் தரம் வாய்ந்த கம்ப்யூட்டர் வல்லுநர்களைக் கொண்டு சத்யம் நிறுவனம் அதன் ஏற்றுமதி தலைமை அலுவலகத்தை இங்கேயே நிர்மாணித்துள்ளது. 1997–இல் சென்னையில் கிளையைத் தொடங்கிய இந்நிறுவனம் அப்போது ரூ.2 கோடி மென்பொருள் ஏற்றுமதி செய்தது. இப்போது கடந்த மார்ச் 2004 வரை ரூ.154 கோடிக்கு மென்பொருள் ஏற்றுமதி செய்த நிறுவனமாக வளர்ந்துள்ளது.

மிக விரைவில் சென்னையில் இருந்து மட்டும் ரூ.400 கோடிக்கு மென்பொருள் ஏற்றுமதி செய்ய இலக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது பன்னாட்டுத் தரத்தில் கல்வி மையத்துடன் கூடிய மிகப்பெரிய மென்பொருள் வளாகம் ஒன்றை உருவாக்க சத்யம் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அதற்காக 100 ஏக்கர் நிலப்பரப்பைத் தமிழக அரசு ஒதுக்கித் தரவேண்டும் என்று ராமலிங்கராஜு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். இந்தப் புதிய மையம் உருவானால் 15 ஆயிரம் கம்ப்யூட்டர் வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அப்போது அவர் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சத்யம் நிறுவனத்தின் இந்தப் புதிய முயற்சியை வரவேற்று வாழ்த்தினார்கள். இந்த முயற்சிக்குத் தமிழக அரசு எல்லா விதத்திலும் ஒத்துழைப்பு நல்கும் என்று உறுதியளித்தார்கள். மேலும், சத்யம் நிறுவனம் தமிழகத்தில் சமூக வளர்ச்சித் திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் அப்போது அவர்கள் வலியுறுத்தினார்கள்.

இந்தச் சந்திப்பின்போது தமிழக அரசின் வளர்ச்சித்துறை ஆணையர் மற்றும் நிதித்துறை செயலாளர் என். நாராயணன், இ.ஆ.ப., மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை செயலர் விவேக் ஹரிநாராயன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். □

# தமிழ்நாட்டில் மின் தட்டுப்பாடு வராமல் தடுக்க பல்வேறு மின் திட்டங்கள்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்




தென்னிந்தியாவின் தலை வாயில் என்று அழைக்கப்படும் தூத்துக்குடி நகரில் இன்று நடைபெறும் மகத்தான அரசு விழாவில் என் அன்புக்குரிய மக்களாகிய உங்களை எல்லாம் காண்பதிலும், உங்களைக் கண்டு ஒரு சில வார்த்தைகள் பேசுவதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய தினம் தூத்துக்குடி அனல் மின் நிலைய வெள்ளி விழாவில் பங்கேற்று உங்கள் முன்னிலையில் ஒப்பற்ற மின் திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்து, முடிவுற்ற திட்டங்களைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி தூத்துக்குடியின் நீண்ட நெடிய வரலாற்றுச் சிறப்புக்குப் புதிய பெருமைகளைச் சேர்த்துள்ளேன்.

'இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே
எந்திரங்கள் வகுத்திடுவீரே'

என்று பாடினார் இந்த மண்ணிலே எட்டயபுரத்திலே பிறந்த எழுச்சிக் கவிஞர் பாரதியார்.

ஆயிரம் தொழில்கள் செய்யலாம். ஆனால், அவ்வாறு தொழில் வளம் பெருக வேண்டும் என்றால் அதற்கு அவசியமாகத் தேவைப்படுவது மின்சாரம்.

தமிழகத்தின் முதல் அனல் மின் நிலையம் சென்னை அருகில் எண்ணூரில் 60 மெகாவாட் திறனில் 1970–ஆம் ஆண்டு இயக்கி வைக்கப்பட்டது. தூத்துக்குடியில் 210 மெகாவாட் திறனுடைய மின் உற்பத்தி நிலையம் 1979–ஆம் ஆண்டு ஜூலை மாதம் மின் உற்பத்திக்கு இயக்கி வைக்கப்பட்டது. பின்னர் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறனுடைய மேலும் நான்கு இயந்திரங்கள் நிறுவப்பட்டன. தூத்துக்குடி அனல் மின் நிலையம் 25 வருட காலமாக செவ்வனே இயங்கி இன்று வெள்ளி விழா காண்கின்றது. இன்றைய நிலவரப்படி தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 26 மில்லியன் யூனிட்டுகள் என்றும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சராசரி மின் உற்பத்திச் செலவு யூனிட் ஒன்றுக்கு 180 காசுகள் என்று உள்ள போது, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்திச் செலவு யூனிட்

ஒன்றுக்கு 170 காசுகள் மட்டுமே என்றும் அறிகிறேன். இது பாராட்டத்தக்க செயல்பாடு ஆகும்.

நமது அனல் மின் நிலையங்கள் சிறப்புடன் செயல்பட்டு மத்திய அரசின் தேசிய விருதுகளைப் பெற்று வருகின்றன. மேட்டூர் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள் 2000–ஆம் ஆண்டு முதல் 2003–ஆம் ஆண்டு வரையிலான 4 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து தங்கப் பதக்கங்கள் வென்றுள்ளன. வட சென்னை அனல் மின் நிலையம் 2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கான தங்கப்பதக்கங்களையும், 2003–ஆம் ஆண்டுக்கான வெள்ளிப்பதக்கத்தையும் வென்றுள்ளது.

இந்தச் சாதனைகள் எல்லாம் தற்செயல் விளைவுகள் அல்ல. நமது கூர்ந்த மதிக்கும், கடின உழைப்புக்கும் கிடைத்த பரிசுகளாகும்.

எத்தகைய கடுமையானச் சூழலை வெற்றி கொண்டு நாம் இந்தச் சாதனைகளை படைத்து இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

2001–ஆம் ஆண்டு என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிலைமை மிக மோசமாக இருந்தது. 2000–2001–ஆம் ஆண்டு வரையில் முந்தைய அரசு இழப்புகளை மானியங்கள் என்று காட்டி நிலைமையை மூடி மறைந்து அந்த மானியங்களை வழங்காமல் இருந்த காரணத்தால் 2001–2002ஆம் ஆண்டில் (–)4,851 கோடி ரூபாய் நஷ்டத்தை மின் வாரியம் எதிர்கொள்ள வேண்டி இருந்தது. முந்தைய அரசின் தவறான நிருவாகத்தின் காரணமாக மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் பிறரிடமிருந்து வாங்கப்பட்ட மின்சாரத்திற்கான உரிய தொகையை வழங்க முடியாத நிலைமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டது. பணியாளர்களுக்கான சம்பளம், நிலக்கரி வகையிலான செலவு மற்றும் இதரச் செலவுகள் போன்ற வாலாயமான செலவுகளுக்கும் பணம் வழங்க இயலவில்லை. சுருக்கமாகச் சொல்லப் போனால், என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்பாட்டையே அறவே நிறுத்தக்கூடிய ஒரு நிலைமைதான் நிலவியது. ஆனால், எனது அரசு எடுத்த உறுதியான பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக அந்த நிலைமையிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியம் மீண்டு எழுந்தது. முந்தைய தி.மு.க. அரசால் மத்திய அரசு நிறுவனங்களுக்கு வழங்கப்படாமல் விடப்பட்ட நிலுவைத் தொகை 1,962 கோடி ரூபாயைக் கொடுத்திட என்னுடைய அரசு ஏற்பாடு செய்தது. அது மட்டுமல்லாமல் நிருவாக சீர்திருத்த நடவடிக்கைகளையும் எனது அரசு மேற்கொண்டது. இந்த நடவடிக்கைகளின் பயனாக தமிழ்நாடு மின்சார வாரியம் புத்துயிர் பெற்றது என்பதை மன நிறைவோடும் மகிழ்ச்சியோடும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மின் கட்டமைப்பு, நான் முதலில் ஆட்சிப் பொறுப்பேற்ற 1991 முதல் 1996 வரையிலான எனது ஆட்சிக் காலத்தில் புதியதாக 1,300 மெகாவாட் அளவிற்கு நிறுவுதிறன் சேர்க்கப்பட்டது. 1996 முதல் 2001 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்ட திறன் 560 மெகாவாட் மட்டுமே ஆகும். ஆனால், 2001 முதல் இன்று வரை எனது ஆட்சிக் காலத்தில் 1,530 மெகாவாட் நிறுவு திறனான 9,394 மெகாவாட்டில் 30% எனது அரசால் நிறுவப்பட்டது ஆகும் என்பதை மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர 1,667 மெகாவாட் மின் நிறுவுதிறன் கொண்ட காற்றாலைகளும், 275 மெகாவாட் தொழிற்சாலை இணை உற்பத்தியும் (Co-Generation)ம் உள்ளது. இதன் பயனாக உச்ச மின் தேவையான 7,311 மெகாவாட் அளவை சுலபமாக நம்மால் நிறைவு செய்ய முடிகிறது. இந்த அளவு நிறுவுதிறன் அதிகரித்துள்ளதால் தான் மின்வெட்டு இல்லாத மாநிலமாக தமிழகம் இன்றைக்கு விளங்குகிறது.

இது மட்டுமல்லாமல் தமிழ்நாடு தொடர்ந்து காற்றாலை மின் உற்பத்தித் துறையில் இந்தியாவிலேயே முதல் இடம் வகித்து வருகின்றது என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டில் காற்றாலை மூலம் மின் உற்பத்தி 500 மெகாவாட் என நிர்ணயிக்கப்பட்டது. தற்சமயம் காற்றாலை மூலம் மின் உற்பத்தித் துறையில் இந்தியாவிலேயே முதல் இடம் வகித்து வருகின்றது என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டில் காற்றாலை மூலம் மின் உற்பத்தி மொத்தம் 810 மெகாவாட் அளவை எட்டியுள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட 310 மெகாவாட் கூடுதல் ஆகும். இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 250 மெகாவாட் அளவிற்கு காற்றாலைகள் நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வளர்ந்து வரும் மின் தேவையை ஈடு செய்யவும், தமிழகத்தில் என்றுமே மின் தட்டுப்பாடு வரக்கூடாது



என்பதைக் கருத்தில் கொண்டும், தூத்துக்குடியில் மேலும் 1,000 மெகாவாட் திறனுடைய ஒரு அனல் மின் நிலையத்தை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் கூட்டு முயற்சியில் நிறுவவும், வட சென்னையில் 1,000 மெகாவாட் திறனுடைய அனல் மின் நிலையத்தை தேசிய அனல் மின் கழகத்தோடு கூட்டு முயற்சியில் நிறுவவும் எனது அரசு திட்டமிட்டு இந்த நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. மேலும், நிலக்கரி மற்றும் எரிவாயு மூலம் மின் உற்பத்தி செய்யவும் புதிய திட்டங்களைத் தீட்டி வருகிறோம்.

இவ்வாறு தொலைநோக்கோடு செயல்பட்டு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிற அதே வேளையில், திட்டங்களின் பயன்கள் ஏழை எளிய மக்களுக்குச் சென்று சேர வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். விவசாயிகளுக்கும், குடிசைகளுக்கும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே விவசாயிகள் அனைவருக்கும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதி செய்துள்ள முன்னோடி அரசு உங்கள் அன்புச் சகோதரியின் அரசுதான். மேலும், வீட்டு உபயோகிப்பாளர்களின் கட்டணத்தை வெகுவாகக் குறைத்திடவும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எனது அரசு மானியம் வழங்கி வருகிறது. தமிழகத்திலுள்ள 1 கோடியே 16 இலட்சத்து 57 ஆயிரம் வீட்டு உபயோகிப்பாளர்கள் பயன் பெறும் வகையில், ஆண்டுக்கு 910 கோடி ரூபாய் மானியத் தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எனது அரசு வழங்கி வருகிறது. இத்தகைய நிவாரணத்தை இந்தியாவில் வழங்கி வரும் ஒரே ஒரு அரசு உங்கள் அன்புச் சகோதரியின் அரசுதான் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரப் பயனீட்டாளர்களின் நலன் பேணுவதில் எனது அரசு முன் நிற்கிறது என்பதையும் இங்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். புதிய கணினி அடிப்படையிலான மின்தடை நீக்கப் பணி மையத்தினை அதாவது Computer Power Failure Redressal Centre-ஐ நான் 12.11.2003 அன்று சென்னையில் தொடங்கி வைத்தேன். சென்னை மாநகரத்தில் உள்ள 18 இலட்சம் மின் நுகர்வோர்கள் இதனால் பயன் பெற்று வருகிறார்கள். இத்திட்டம் விரைவில் கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி மாநகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

மின் இணைப்புகளுக்கான மின் கட்டணப் பட்டியலைத் தயாரிப்பதிலும், மின் கட்டணத் தொகை வசூலிப்பதிலும் தொழிலாளர்களுக்கும் பொது மக்களுக்கும் உள்ள சிரமங்களைக் களைய மின் கட்டணப் பட்டியல் மற்றும் வசூல் முறை கணினிமயம் ஆக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

இதன் அடிப்படையில் ஒரு சில பிரிவு அலுவலகங்களில் மின் கட்டண வசூல் முறை பரிட்சார்த்தமாகக் கணினி மயம் ஆக்கப்பட்டது. இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதால் சென்னையில் உள்ள அனைத்துப் பிரிவு

அலுவலகங்களிலும், 5 மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் அமைந்துள்ள 600 விரிவு அலுவலகங்களிலும் மின்கட்டணப் பட்டியல் மற்றும் வசூல் முறையை சுமார் 120 கோடி ரூபாய் செலவில் கணினிமயம் ஆக்கும் திட்டத்தினை இன்று அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதனால் சுமார் 55 இலட்சம் மின் பயனீட்டாளர்கள் பயன் அடைவார்கள் என்பதையும், இத்திட்டம் கிராமப்புறங்களிலும் படிப்படியாக அமல்படுத்தப்பட உள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்கள் நலனையும் பயனீட்டாளர் நலனையும் போலவே மின் வாரியத் தொழிலாளர் நலத்திலும் பெரிதும் அக்கறை கொண்டுள்ளது எனது அரசு. எனவேதான் மின் வாரிய நிதி நிலைமையைச் சீரமைத்து அதன் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கிய தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டும் என்று முடிவெடுத்து அவர்கள் அனைவருக்கும் 1.9.2003 அன்று முதல், முன் தேதியிட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் இடைக்கால நிவாரணம் வழங்க அண்மையில் நான் ஆணையிட்டேன். மேலும், இந்த ஆண்டு தீபாவளிப் பண்டிகையின் போது, கடந்த ஆண்டில் வழக்கமான முறையில் 8.33 சதவிகித போனஸ் பெற்ற தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இந்த ஆண்டிற்கு 1.67 சதவிகித கருணைத் தொகையையும் சேர்த்து, மொத்தம் 10 சதவிகிதம் போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்க உத்தரவிட்டேன். தொழிலாளர்கள்பால் இந்த அரசு கொண்டுள்ள நம்பிக்கைக்கு ஏற்ப அவர்கள் தங்கள் முழுத் திறனையும் வெளிப்படுத்தி திறம்படப் பணியாற்றுவார்கள் என்பது உறுதி.

25 ஆண்டுகள் வெற்றிகரமாகச் செயல்பட்டு தூத்துக்குடி அனல் மின் நிலையம் இன்று வெள்ளி விழாக் கொண்டாடுகிறது. இந்த மகிழ்ச்சிகரமான வேளையில் பொறியாளர்களுக்கும் மற்றுமுள்ள பணியாளர்களுக்கும் அவர்களுடைய சிறந்த பணியைப் பாராட்டி அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்கத் தொகையாக 1,000 ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய அரசால் அனல் மின் நிலைய ஊழியர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர அனல் ஊக்கப் படி (Monthly Thermal Incentive Allowance) மற்றும் வருடாந்திர அனல் ஊக்க போனஸ் (Annual Thermal Incentive Bonus) ஆகியவற்றிற்கு மத்திய அரசால் நடப்பு ஆண்டில் இருந்து வருமான வரி விதிக்கப்படும் நிலை உள்ளது என்று தூத்துக்குடி அனல் மின் நிலைய ஊழியர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். தற்போது அனல் மின் நிலைய ஊழியர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர அனல் ஊக்கப் படி (Monthly Thermal Incentive Allowance) மற்றும் வருடாந்திர அனல் ஊக்க போனஸ் (Annual Thermal Incentive Bonus) ஆகியவற்றிற்கு வருமான வரி விதிக்கப்படும் என்று மத்திய அரசின் வருமானவரித்துறை சுட்டிக் காட்டி உள்ளதையடுத்து, அனல் மின் நிலைய ஊழியர்கள் பெற்று வரும் ஊக்கத் தொகையின் நிகர அளவு குறையும் என்ற உங்களது கவலையை நான் அறிவேன். அனல் மின் நிலைய ஊழியர்கள் பெறுகின்ற அனல் ஊக்கத் தொகைக்கு வருமான வரியிலிருந்து விலக்குப் பெற்றிட தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நான் உறுதி அளிக்க விரும்புகிறேன். அவ்வாறு வரி விலக்குப் பெற இயலவில்லை என்றால் அனல் மின் நிலைய ஊழியர்கள் தற்போது பெறுகின்ற அனல் ஊக்கத் தொகை எந்த விதத்திலும் குறையாத அளவிற்குக் கூடுதல் தொகையினை சேர்த்து வழங்க தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்று இந்த வேளையில் நான் உறுதி அளிக்க விரும்புகிறேன்.

தூத்துக்குடி அனல் மின் நிலைய வெள்ளி விழா நாளாகிய இன்று நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணிப்பதிலும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதிலும் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டத்தில் அமைந்திருக்கும் குத்தாலத்தில், சுமார் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள எரிவாயு சுழலி மின் திட்டத்தை இன்று நாட்டுக்கு அர்ப்பணிப்பதில் அளப்பரிய மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், 107 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப் பட்டுள்ள 26 புதிய துணை மின் நிலையங்களையும் இன்று நாட்டுக்கு அர்ப்பணிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

63 கோடி ரூபாய் செலவில் நாமக்கல் மாவட்டத்தில் நிறுவப்படும் கொல்லிமலை நீர் மின் திட்டம் ;

19 கோடி ரூபாய் செலவில் தேனி மாவட்டத்தில் நிறுவப்படும் வைகை சிறுபுனல் நீர் மின் திட்டம் ;

350கோடி ரூபாய் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் வழுதூரில் நிறுவப்படும் கூடுதல் 95 மெகா வாட் எரி வாயு சுழலி மின் திட்டம்;

35 கோடி ரூபாய் செலவில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிறுவப்படும் பவானி கதவணை–1 சிறுபுனல் நீர்மின் திட்டம்.



ஆகியவற்றுக்கு, இன்றைக்கு அடிக்கல் நாட்டியதில் நான் பெருமிதமும், பேருவகையும் அடைகின்றேன்.

தூத்துக்குடி மாவட்டத்திற்கு இதற்கு முன்னதாக 14.3.2003 அன்று வருகை தந்து உங்களை எல்லாம் நான் சந்தித்தேன். அன்றைய தினம் நடைபெற்ற அரசு விழாவில் 163 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினேன் என்பதையும், அதன் பின்னர் 11.2.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 84 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினேன் என்பதையும் இந்த நேரத்தில் நினைவு கூர்வதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அதன் தொடர்ச்சியாக இன்று மீண்டும் உங்களை எல்லாம் நேரில் சந்தித்து இந்த இனிய விழாவில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பாக 49 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிவுற்ற 2,116 பணிகளைத் திறந்து வைத்தும், 126 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 309 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயனாளிகள் அனைவரும் இந்த உதவிகளின் அடிப்படையில் சிறப்பாகத் தொழில் செய்து வாழ்க்கையில் நலமும், வளமும் பெற்றிட வேண்டும் என்று என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழா சீரும் சிறப்புமாக அமைந்திடப் பணியாற்றிய தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்திரசேகரன் அவர்களுக்கும், மின்சார வாரியத் தலைவர் திரு. ஸ்கந்தன் அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

8.12.2004 அன்று
தூத்துக்குடியில் நடைபெற்ற
தூத்துக்குடி அனல் மின் நிலைய
வெள்ளி விழா மற்றும்
தூத்துக்குடி மாவட்ட வளர்ச்சித்
திட்டப் பணிகள் தொடக்க விழாவில்
கலந்து கொண்டு மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரை



# உடல் ஊனமுற்றோருக்கான தேசிய விருதுகள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உடல் ஊனமுற்றோரின்பால் தனி அக்கறை கொண்டு, அவர்கள் வேலைவாய்ப்புப் பெறவும், சமூக நிலையில் உயர்ந்திடவும் மேற்கொண்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் விளைவாக, 2003–2004ஆம் ஆண்டிற்கான 14 தேசிய விருதுகளைத் தமிழ்நாடு பெற்று, ஊனமுற்றோருக்கு உறுதுணையாக இருப்பதில், முதன்மையான மாநிலம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

மத்திய அரசின், சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஊனமுற்றோரையும், ஊனமுற்றோருக்கு உதவிபுரிபவர்களையும் ஊக்குவிக்க தேசிய அளவிலான விருதுகளை வழங்கி வருகிறது. ஆண்டுதோறும் 12 பிரிவுகளின் கீழ் இவ்வாறு வழங்கப்படும் 70 தேசிய விருதுகளில், 2003–2004ஆம் ஆண்டுக்கு, சிறந்த பணியாளர் பிரிவில் 3 விருதுகள், சிறந்த தொழிலதிபர் பிரிவில் 4 விருதுகள், சிறந்த பணியமர்த்தும் பிரிவில் 2 விருதுகள் மற்றும் சிற்ந்த தனிநபர், சிறந்த நிறுவனம், சிறந்த திறன்மிகு நபர், சிறந்த திறன்மிகு குழந்தை, சிறந்த மாவட்டம் என மொத்தம் 14 விருதுகளைத் தமிழ்நாடு பெற்று சாதனை படைத்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநலம் குன்றியோர் நலனில் தனி அக்கறை கொண்டு அரசின் செயல்திட்டங்களில் ஊனமுற்றோர் நலனுக்கு முன்னுரிமை அளித்து வருகிறார்கள். ஊனமுற்றோர் நலனுக்கான அரசின் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்த 1992–1993ஆம் ஆண்டில் இதற்கென்று ஒரு தனித் துறையை உருவாக்கினார்கள். இதன்கீழ் மாவட்டங்கள்தோறும் அனைத்து வசதிகளும் கொண்ட அலுவலகங்களும், உள்கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்பட்டு உடல் ஊனமுற்றோரின் மறுவாழ்வுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதில் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. ஊனமுற்றோருக்கு உதவித் தொகை, ஊனமுற்ற வேலை வாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகை, ஊனமுற்றோருக்கான கல்வி உதவித் தொகை வழங்கல் முதலான பல முன்னோடித்

திட்டங்கள் தமிழ்நாடு அரசால் முனைப்போடு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஊனமுற்றோருக்கு உபகரணங்கள் வழங்குவதிலும் தமிழக அரசு முன்னோடியாகத் திகழ்கிறது. அதுமட்டுமன்றி, தேசிய அறக்கட்டளைச் சட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் இயங்கும் உள்ளூர் குழுக்கள் மனவளர்ச்சி குன்றியோருக்குப் பாதுகாவலர் நியமனத்தைச் சிறப்பாக செய்து வருவது மிகவும் பாராட்டைப் பெற்றுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு வழங்கி வரும் ஆக்கத்தினாலும், ஊக்கத்தினாலும், தமிழ்நாட்டில் 237 தனியார் சமூக சேவை நிறுவனங்கள் சிறப்புடன் செயல்பட்டு, உடல் ஊனமுற்றோருக்குச் சிறப்புக் கல்வி மற்றும் சிறப்புப் பயிற்சி ஆகியவற்றை அளித்து வருவதுடன், ஊனத்தை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உதவுகின்ற மையங்கள் மூலமாகவும் அரும்பணி ஆற்றி வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இவ்வாறு உளப்பூர்வமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக 2003–2004ஆம் ஆண்டில் தமிழ்நாடு மிக அதிக அளவில் விருதுகள் பெற்றுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில் அதாவது, 1995ஆம் ஆண்டில் இதே போன்று ஊனமுற்றோர் நலனுக்கான 14 தேசிய விருதுகளைத் தமிழ்நாடு பெற்றது என்பதும், அதன்பின் இந்த அளவு அதிக எண்ணிக்கையில் விருதுகள் பெறுவது 2003–2004ஆம் ஆண்டில்தான் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இதில், தமிழகத்தில் உள்ள பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம், ஊனமுற்றோக்கு உதவிகள் வழங்கி மறுவாழ்வு அளிப்பதில், இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாவட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்டுத் தேசிய விருது பெறுகின்றது என்பது பெருமைக்குரியது ஆகும்.

இந்த விருதுகள் அனைத்தும் 3.12.2004 அன்று புதுடில்லியில் நடைபெற்ற உலக ஊனமுற்றோர் தின விழாவில் மேதகு இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்களால் வழங்கப்பட்டது.

**2003–2004ஆம் ஆண்டில் தேசிய விருதுகள் பெற்றோர் பட்டியல் வருமாறு:**

| வ.எண். | விருது பெற்றவர் பெயர் | விருதின் வகை |
|---|---|---|
| 1. | டாக்டர். உஷா நாகராஜன், மதுரை. | சிறந்த பணியாளர் (கண் பார்வையற்றோர்) |
| 2. | திரு. எம்.முத்துசாமி, கரூர் மாவட்டம் | சிறந்த பணியாளர் (கை, கால் ஊனமுற்றோர்) |
| 3. | திரு. ஆம்புரோஸ் துரைராஜ், சென்னை | சிறந்த பணியாளர் (தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர்) |
| 4. | டைட்டன் இண்டஸ்ட்ரீஸ் லிட்., ஓசூர், தருமபுரி மாவட்டம் | சிறந்த தொழிலதிபர் |
| 5. | அன்னை ஜே.கே.கே. சம்பூரணி அம்மாள் அறக்கட்டளை, கொமாரபாளையம், நாமக்கல் மாவட்டம் | சிறந்த தொழிலதிபர் |
| 6. | சக்தி மசாலா (பி) லிட்., மாமரத்துப்பாளையம், ஈரோடு மாவட்டம் | சிறந்த தொழிலதிபர் |
| 7. | சேரன் மண்டல ஊனமுற்ற குழந்தைகளுக்கான கிறிஸ்துவ சங்கம், கிரே டவுன், கோயம்புத்தூர் | சிறந்த தொழிலதிபர் |
| 8. | திரு. ஜெயின் சிங், துணை இயக்குநர், உடல் ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு மையம், கிண்டி, சென்னை – 32. | சிறந்த பணியமர்த்தும் அலுவலர் |

| வ.எண். | விருது பெற்றவர் பெயர் | விருதின் வகை |
|---|---|---|
| 9. | திரு. டி. விஜயகுமார், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை. | சிறந்த பணியமர்த்தும் அலுவலர் |
| 10. | திரு. எஸ். சிவசங்கரன், வேலூர் மாவட்டம் | சிறந்த தனிநபர் விருது |
| 11. | மதுரம் நாராயணன் சிறப்பு குழந்தைகளுக்கான மையம், தி. நகர், சென்னை – 17. | சிறந்த நிறுவனம் |
| 12. | திரு. எஸ். அப்துல் ஹமீத், சென்னை – 18. | சிறந்த திறன்மிகு நபர் |
| 13. | மாஸ்டர் கே. ஜனார்தனன், த/பெ. பி.எஸ். கேசவன், இராமாபுரம், சென்னை. | சிறந்த திறன்மிகு குழந்தை |
| 14. | இராமநாதபுரம் மாவட்டம் | சிறந்த மாவட்டம் |

## புழு மீன்

இருநிலை வாழ்விகள் அதாவது நீரிலும், நிலத்திலும் வாழும் உயிரினங்களில் இன்று மூன்று வரிசைகளே உள்ளன. இவற்றுள் சாலியன்ஷியா வரிசையைச் சேர்ந்தவை தவளைகளும், தேரைகளும். யூரோடெலா வரிசையைச் சேர்ந்தவை ஸாலமண்டர்களும் நியூட்களும். அபோமி அல்லது சிசிலியன் வரிசையைச் சேர்ந்தவைகளுக்குக் கால்கள் கிடையாது. பார்ப்பதற்குப் புழுக்கள் போல் இருக்கும். இந்த வரிசையைப் பற்றி அதிக விவரங்கள் தெரியவில்லை. இதில் ஒரு சில இனங்கள் உள்ளன.

கால்களில்லாத இந்த வகையைச் சேர்ந்த உயிரினங்கள் மத்திய தென் அமெரிக்காவிலும், இந்தியா, ஆப்பிரிக்கா, ஸ்ரீலங்கா ஆகிய இடங்களிலும் பரவலாக உள்ளன. இவற்றை சிசிலியன் அல்லது குருட்டுப் புழுக்கள் என்று சொல்லுவார்கள். இலத்தீன் மொழிச் சொல்லான சீகஸ் என்பதற்கு குருடு என்று பொருள். ஈரப்பதமான இடங்களில் வளை தோண்டி வாழும். இதன் உடல் முழுவதும் சளி படர்ந்தாற் போலிருக்கும். மீன்களைப் போல செதில்கள் அதிலே பொதிந்திருக்கும். கண்கள் மிகச் சிறியது. இமைகளும் கிடையாது. கண்களுக்கும் மூக்குத் துவாரத்திற்கும் நடுவில் சிறிய உணர்க்கைகள் உள்ளன.

புழு மீன் என்றும் இலங்கை பாம்பு மீன் என்றும் குறிப்பிடப்படும் உயிரினம் இந்த வரிசையைச் சேர்ந்தது. இதன் உடல் அமைப்பு பாம்பு அல்லது புழுவைப் போல் இருப்பதாலும் மீனைப் போல் நீரில் வசிப்பதாலும் இதற்கு இந்தப் பெயர் வந்தது. இதன் உடல் கறுப்பாக இருக்கும். இதன் உணவு சிறு புழுக்கள். ஏறக்குறைய 50 செ.மீ. நீளம் வரை வளரக் கூடியது. தரையில் வளை தோண்டி வாழும். இனப் பெருக்கக் காலத்தில் பெண் பாம்பு மீன் நீர்நிலை ஓரங்களில் குழி தோண்டி முட்டைகளிட்டு அடைகாக்கும். முட்டையில் இருந்து வெளிவரும் இளரிகளுக்கு சிறிய பின் கால்களும், கால் பகுதியில் துடுப்பு போன்ற அமைப்பும், புறச் செவுள்களும் உண்டு. இவர்களின் வாழ்க்கை ஓடைகளில் தொடங்கும். அப்போது செவுள்கள் மூலம் சுவாசிக்கும். இவற்றுள் ஒரு சில முட்டைகளிடாமல் இளம் புழுக்களையே ஈனும். ✶

# அச்ச உணர்வு இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதே காவல்துறையின் முக்கிய நோக்கம்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்




தமிழ்நாடு காவல்துறைக்குப் பெருமை சேர்க்கும் நாளான இன்றைய விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். மொத்தம் ரூ.87 கோடிக்கும் அதிகமான செலவில் தமிழ்நாடு காவல்துறையின் அடிப்படை வசதிகளை மேலும் அதிகரிப்பதற்காக அடிக்கல் நாட்டி, தொடங்கி வைப்பதை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன். அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கும் வகையில் தமிழ்நாடு காவலர் பயிற்சிக் கழகமும் புதிய காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகமும் இரு முக்கியக் கட்டடங்களாக விளங்கும்.

இந்தியாவில் தொழில் முறையில் தனக்கென்று தனி இடத்தைப் பெற்றுள்ள தமிழ்நாடு காவல்துறை மேன்மேலும் சிறப்புற இயங்குவதற்கு எனக்கென்று ஒரு இலக்கைக் கொண்டுள்ளேன். இந்நாட்டிலேயே தமிழ்நாடு காவல்துறை முதலிடம் வகிக்க வேண்டுமென்பதே என்னுடைய அவா. இதற்காகவே, தமிழ்நாடு காவல்துறை தங்களுடைய தொழில்முறைத் திறமையை மேம்படுத்துவது மட்டுமின்றி, ஒழுங்குமுறை மற்றும் குழு மதிப்புணர்ச்சியையும் மேம்படுத்துவதைத் தவிர இத்துறையை நவீனப்படுத்துதல், அதற்குத் தேவையான சாதனங்களை வழங்குதல், பயிற்சியளித்தல், நலத் திட்டங்களைச் செயற்படுத்தல் ஆகியவற்றிற்கு நான் மிக முன்னுரிமை அளித்துள்ளேன். 2001 மே திங்களில் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து, இரண்டாவது முறையாக நான் உள்துறைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட வரை, காவல்துறைக்குக் கட்டடங்கள், சாதனங்கள், ஆயுதங்கள், பயிற்சி, வீட்டுவசதி ஆகியவற்றிற்கு வகை செய்ய என்னுடைய அரசு

ரூ.514.54 கோடி அனுமதித்துள்ளது. இவ்வாறு வரவு செலவுத் திட்டத்திலேயே நிதி ஒதுக்கியது தமிழ்நாடு காவல் துறை வரலாற்றிலேயே முன் எப்போதும் இராததாகும்.

ரூ.30 கோடி செலவில் தரமணியில் அமையவுள்ள புதிய காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டுவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம் தற்போது மிகப் பழமையான தொன்மை வாய்ந்த கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இதனை விரிவுபடுத்தவோ நவீனப்படுத்தவோ இயலாத வகையில் இக்கட்டடம் உள்ளது. காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலக புதிய வளாகம் தரமணியின் பிரதான பகுதியில் 24 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ளது. இது 3 இலட்சம் சதுர அடி கட்டடப் பரப்புடன், நவீன தகவல் தொழில் நுட்ப அடிப்படையிலான அடிப்படை வசதி மற்றும் புதுமையான தகவல் தொடர்பு வன் பொருட்களுடன், தமிழ்நாடு காவல்துறை போன்று மிக உயர்ந்த தொழில்நுட்பப் படையின் தலைமை அலுவலகத்திற்கு ஏற்ற வகையில் அமைந்திருக்கும். இக்கட்டடம் கட்டப்பட்டு முடிந்தவுடன் தமிழ்நாடு காவல் படையின் தலைமை அலுவலகம், இந்நாட்டிலேயே தலை சிறந்ததாக விளங்கும்.

ஒவ்வொன்றும் ரூ.3 கோடி செலவில் திருவண்ணாமலையிலும், விழுப்புரத்திலும் கட்டப்பட்ட மாவட்ட காவல் துறை அலுவலக வளாகங்கள் திருவண்ணாமலையில் ரூ.87.66 இலட்சம் செலவில் கட்டப்பட்ட ஆயுதப்படை வளாகம், முறையே ரூ.85 இலட்சம், ரூ.86 இலட்சம் செலவில் விழுப்புரத்திலும், இராமநாதபுரத்திலும் கட்டப்பட்ட வட்டார தடய அறிவியல் ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றைத் திறந்து வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்நாடு அமைதியுடன் வளத்துடனும் சொர்க்கமாகத் திகழ இயலும் வகையில் தமிழ்நாடு காவல்துறையை முற்றிலும் திறமையாகவும் சிறப்பான படையாக ஆக்குவதற்குத் தேவையான அடிப்படை வசதிக்காகப் போதுமான நிதி ஒதுக்கீடுகளை நான் தொடர்ந்து ஒதுக்குவேன்.

சட்டம் ஒழுங்கைத் திறம்படப் பராமரிப்பதற்கு நாம் உத்தரவாதம் அளிக்காவிடில், மாநிலத்தில் முன்னேற்றம் எதையும் நாம் எய்த இயலாது என்பது ஒரு நிதர்சனமான உண்மையாகும். அமைதி மற்றும் சமூகநல்லிணக்கத்தின் ஒரு சொர்க்கமாகத் தமிழ்நாட்டை ஆக்குவதில் நான் ஒருபோதும் எந்த வகையிலும் சமரசம் செய்து கொண்டது கிடையாது. இது ஏதோ ஒரு சந்தர்ப்பத்தின் அடிப்படையில் அல்ல. அமைதியைக் குலைக்க அல்லது பொது சட்டம் ஒழுங்கைக் கெடுக்க முயற்சி செய்கின்ற சமூக விரோத சக்திகள், தீவிரவாத மற்றும் அடிப்படைவாதச் சக்திகள் அனைத்தையும் தமிழக எல்லையை விட்டு அப்புறப் படுத்துவதற்குத் தீவிரக் கவனத்துடன், சளைக்காமல், திட்டமிட்ட முறையில் உங்களுடைய முயற்சிகளைச் செயல்படுத்தியதன் மூலம் இது எய்தப்பட்டுள்ளது. இந்த இலக்கை எய்துவதற்காகத்தான், தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்துதல், ஆயுதங்கள் மற்றும் சாதனங்களை மேம்படுத்துதல், கட்டடங்கள் மற்றும் பயிற்சியளித்தல் ஆகியவற்றிற்கு வரவு–செலவுத் திட்டத்தில் தாராளமாக நிதியொதுக்கம் செய்வதன் மூலம் தமிழ்நாடு காவல் படையை திறம்பட்ட முறையில் நவீனப்படுத்துவதற்கு நான் திட்ட மிட்டுள்ளேன்.

மாநிலத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களும் தற்போது கணினிமயமாக்கப்பட்டுள்ளது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். காவல் நிலையம் அளவில் பயன்படுத்துவதற்காக 1,365 வீடியோ கேமராக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீ உயர் அலை (VHF) மற்றும் மொபைல் தகவல் தொடர்பு சாதனங்களை வழங்குவதன் மூலம் தகவல் தொடர்பு வசதிகளை நாங்கள் திட்டமிட்ட முறையில் வலுப்படுத்தியுள்ளோம். மாநிலத்தில் உள்ள நுண்ணலை தகவல் பரிமாற்ற முறை கணினிமயமாக்கப்பட்டுள்ளது. பயனற்றவை என்று கழித்து ஒதுக்கப்பட்ட வண்டிகளை மாற்றிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக புதிய வண்டிகள் வாங்கப்படும் முறையான திட்டம் மட்டுமின்றி, காவல்துறை வாகனங்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது.

இருப்பினும், காவல் படையை நவீனமயமாக்குவது, அதிக நிதிகளை ஒதுக்குவது அல்லது புதிய தொழில் நுட்பத்தை அளிப்பது மட்டுமின்றி, தமிழில் 'காவலர்' என்ற சொல்லுக்கான உண்மையானப் பொருளை அவர்கள் பின்பற்றுவதற்குத் தேவையானவற்றை அவர்களுக்கு வழங்குவதுதான் என்று நான் நம்புகிறேன். காவலர் என்பதற்கு சட்டத்தைப் பாதுகாப்பவர் மற்றும் மக்களைப் பாதுகாப்பவர் என்று பொருளாகும். பாதுகாவலர் என்ற கடமையில், காவல்துறையினர் வீரம் மற்றும் கடுமை ஆகியவற்றைப் பெற்றிருப்பதுடன், கனிவும் பரிவும் அவர்களிடம் ஒருங்கே காணப்பட வேண்டும். தொழில் முறையில் தயாரிக்கப்பட்ட ஒரு பாடத்திட்டம் மற்றும் முறையான பணியிடை பயிற்சித் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் கடுமையான பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் அறிவுத் திறனை வளர்த்துக் கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் இந்தப் பண்புகளை அவர்களுக்கு அளிக்க முடியும். இந்தக் காரணத்தினால்தான், ரூ.48கோடி செலவில், ஊனமாஞ்சேரி கிராமத்தில் தமிழ்நாடு காவலர் பயிற்சிக்



கழகத்தை ஏற்படுத்த நான் முடிவு செய்தேன். புதிதாகப் பணியில் சேர்த்துக் கொள்ளப்படும் காவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளித்தல், ஏற்கெனவே பணியிலுள்ள ஏனைய காவல்துறை பணியாளர்களுக்குப் பணியிடை புத்தாக்கப் பயிற்சியளித்தல் ஆகிய பல தரப்பட்டத் தேவைகளை நிறைவு செய்யும் இந்த அதிநவீன காவலர் பயிற்சிக் கழகத்திற்கு அடிக்கல் நாட்டுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பயிற்சிக்கழகம், பல்வேறு பதவித் தரங்களைச் சேர்ந்த காவல்துறையின் 800 பணியாளர்களுக்கு ஒரே நேரத்தில் உலகத்தரம் வாய்ந்த பயிற்சியளிக்கும் தனிப்பட்ட வசதிகளையும், பயிற்சி பெறுபவர்களுக்கான இடவசதி, பயிற்சி பெறும் பணியாளர்களுக்கான குடியிருப்பு வளாகம் ஒன்று, கடை வளாகம் ஒன்று, ஒரு மருத்துவமனை மற்றும் மருந்தகம், நவீன உடற்பயிற்சிக் கூடம் ஒன்று ஆகிய அடிப்படை வசதிகளைக் கொண்டதாக இருக்கும். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பயிற்சிக் கல்லூரி, கலை நயத்துடனும், பயன்பாட்டிற்கு ஏற்ற வடிவமைப்புடனும், கற்றுச் சூழலுக்கு உகந்த முறையில், பன்னாட்டுத் தரங்களுக்கு ஏற்ப 132.92 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படும். இது, இந்தியாவில் உள்ள காவல்துறை பணியாளர்களுக்கான பயிற்சிக் கல்லூரிகளில் முதன்மையானதாக விளங்கும் என்பதில் எனக்கு எவ்விதச் சந்தேகமும் இல்லை.

பொது சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது மிகவும் சிக்கலான நடவடிக்கையாக மாறியுள்ளது என்பதை நாம் அனைவரும் அறிவோம். தீவிரவாதம் மற்றும் அடிப் படைவாதம், தொலைதூரங்களில் இருந்து இயங்கச் செய்வதன் மூலம் பொது இடங்களில் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தல், திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தும் கும்பல்கள் ஆகியவை காவல்துறையினர் முன்னிலையில் உள்ள புதிய சவால்கள் ஆகும்.

தகவல்–தொழில்நுட்பவியல் புரட்சியானது, கணினி வழிக்குற்றங்கள் என்ற புதிய தொற்று நோய் உண்டாக்கும் நச்சுக் கிருமியை உருவாக்கியுள்ளன. அதனால் குற்றமும், குற்றவியலும் மிகவும் நவீன மயமாகியுள்ளன. புதிய உத்திகளும், முற்றிலும் சீரமைக்கப்பட்ட பயிற்சித் திட்டமும் மட்டுமே அத்தகைய பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுக்க, காவல்துறையைத் தயார்படுத்த முடியும். தமிழ்நாடு காவலர் பயிற்சிக் கழகமானது, அது தொடங்கப்பட்ட நாளிலிருந்து, மன அழுத்தத்தை நீக்குவதற்கான பயிற்சித் திட்டங்களுடன், கணினி பயிற்சி, வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்தல், நவீன ஆயுதங்களைக் கையாளுதல், சிறப்பு அதிரடி நடவடிக்கைகள், நெருக்கடி நிலைமைகளை எதிர்கொண்டு தீர்வு காணல், அதிகாரிகளின் பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்து வைக்கும் திறமைகள் ஆகியவற்றிற்கு ஏற்ற உடல்தகுதி மற்றும் திறன் உருவாக்கம் ஆகியவை குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். இக்கழகம், காவல் படையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளவர்களுக்கு பல அடுக்கு கொண்ட பயிற்சித் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துவதோடு மட்டுமன்றி, நவீன யுகத்தில், காவல்துறையினர் புதியச் சவால்களை

எதிர்கொள்வதற்கு, காவல்துறையின் வெவ்வேறு மட்டத்திலுள்ள அதிகாரிகளையும் தயார்படுத்த வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

காட்டுக் கொள்ளையன் வீரப்பனுக்கு எதிரான நடவடிக்கைகளின்போது தங்கள் இன்னுயிரை ஈந்த தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் காவலர்களின் நினைவைப் போற்றும் வகையில், தமிழ்நாடு காவலர் பயிற்சிக் கழகத்தின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் நினைவிடம் ஒன்று கட்டப்படும் என்று நான் அறிவித்துள்ளேன். சிறப்பு அதிரடிப்படையானது, என்னுடைய தெளிவான மற்றும் உறுதியான ஆணையைப் பின்பற்றியும், நான், அவர்களுக்கு அளித்த மனப் பூர்வமான ஆதரவைத் தொடர்ந்தும், கொலை, கொள்ளை, வனச் செல்வங்களை அழித்தல் ஆகியவற்றின் மூலம் தமிழ்நாட்டை சுமார் 20 ஆண்டு காலம் பீடித்திருந்த பயங்கரமான சகாப்தத்தை, சிறந்த பயிற்சி மற்றும் திறமையுடன் மிகக் கவனமாகத் திட்டமிட்டு நமது சிறப்பு அதிரடிப் படையினர் செவ்விய முறையில் நிறைவேற்றிய அதிரடி நடவடிக்கைகள், முடிவுக்குக் கொண்டு வந்தன. வீரப்பனை வீழ்த்திய துணிகரமான மற்றும் திடீர் தாக்குதல், தேசிய அளவில், தமிழ்நாடு காவல் துறையின் புகழைப் பாராட்டச் செய்ததோடு, தமிழ்நாடு காவல்துறைக்கு பெயரும் புகழும், பெருமையும் பெற்றுத்தந்துள்ளது. எனவே, தமிழ்நாடு காவலர் பயிற்சிக் கழகத்தில் ஒரு நினைவிடம் அமைப்பது பொருத்தமானதாக இருக்கும். அப்போது தான், காவலர் பயிற்சிக் கழகத்தின் வாயிலுக்குள் நுழைகிற தமிழ்நாடு காவல் படையைச் சேர்ந்த ஒவ்வொரு ஆணும், பெண்ணும் மற்றும் அதிகாரியும், இந்த வீரர்களின் துணிகரமான தியாகத்தைப் பற்றி அறிந்து கொள்வர். அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதோடு, அதே போன்ற துணிகரமான, தியாகச் செயல்களைத் தாமும் செய்வதற்கு உத்வேகம் பெறுவர்.

பெண்களுக்கு உரிமை அளித்தல், பெண்கள் தவறாகப் பயன்படுத்தப்படாத சமுதாயம் ஒன்றையும், பெண்கள் குற்றம் மற்றும் பாதிப்புக்கு ஆளாக்கப்படுதல் ஆகியவற்றுக்கு எதிராக முழு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கிற குற்றவியல் நீதி வழங்கும் முறை ஒன்றையும் உருவாக்குதல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, காவல் நிலையங்களை, பெண்களுக்கு நேசக்கரம் நீட்டுவதாகச் செய்ததன் மூலம் மாநிலத்திலுள்ள அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் முற்றிலும் புதிய புத்தாக்கப்பயிற்சி ஒன்றை நான் அளித்தேன். 1992ஆம் ஆண்டில் நான் முதன்முதலாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் தொடங்கி வைத்தேன். இன்று, நமது மாநிலத்திலுள்ள 188 காவல்துறை துணைக் கோட்டங்கள் அனைத்து மகளிர் காவல் நிலையத்தைக் கொண்டுள்ளன. நமது மாநிலத்தில் தற்போது வழக்கமாக உள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் காவல்துறை பெண் உதவி ஆய்வாளர் ஒருவர், நிலை II–ஐச் சேர்ந்த பெண் காவலர்கள் இருவர் ஆகியோரை நியமிக்குமாறு நான் உத்தரவிட்டுள்ளேன். இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத வகையில், தமிழ்நாட்டில் முதன்முதலாக அனைத்து மகளிர் காவல்படையை ஏற்படுத்துவதற்காக, அனைத்து மகளிர் அதிரடிப்படை ஒன்றையும், அனைத்து மகளிர் காவல் படையணி ஒன்றையும் தொடங்க நான் நடவடிக்கைகள் எடுத்துள்ளேன். மனிதாபிமானம் மிக்கவராக, பரிவு காட்டுபவராக, கருணையுடன் பாதுகாப்பவராக, ஆபத்தில் உதவுகிற நண்பனாக, மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு ஆலோசனை அளிப்பவராக, தமிழ்நாட்டின் அனைத்து மகளிர் காவல்நிலையங்களில் காவல் துறையினர் செயல்பட வேண்டும் என்பது என்னுடைய எண்ணமாகும்.

எழும்பூர், வேப்பேரி, அயனாவரம், வடபழனி, இராயப்பேட்டை, தேனாம்பேட்டை மற்றும் உயர்நீதி மன்ற வளாகம் ஆகிய இடங்களில் புதிதாக ஏழு அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, சென்னை காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் திறந்து வைப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். சென்னை காவல் துறை ஆணையர் அலுவலகம், தற்போது, 27 சரகங்கள் ஒவ்வொன்றிலும் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்றைக் கொண்டிருக்கும். சென்னை மாநகருக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு, பாதுகாப்பு நிறைந்த மாநகர் என்ற நற்பெயரைப் பெற்றுத் தருவதில் இவை உதவும் என நான் நம்புகிறேன்.

காவல்துறைக்கு எண்ணற்ற நலத் திட்டங்களை நான் அறிவித்து, செயல்படுத்தியுள்ளேன் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். ரூ.224.75 கோடி செலவில், காவலர்களுக்கான வீட்டுவசதித் திட்டம் மட்டுமின்றி, வீரதீரச் செயல்களில் கொல்லப்பட்ட அல்லது கடுமையாகக் காயமுற்ற அதிகாரிகள், ஆண் காவலர்கள் மற்றும் பெண் காவலர்களுக்கான உதவித் தொகையையும் உயர்த்த நான் நடவடிக்கை எடுத்துள்ளேன். காவல்துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கும் எண்ணற்ற கல்வித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இது போலவே, காவல்துறை பணியாளர்களுக்கு முற்போக்கான சுகாதாரத் திட்டம் ஒன்றும் என்னால் அறிமுகப்

படுத்தப்பட்டது. காவல்துறையினர் எவ்வித சவால்களையும் எதிர்கொண்டு செயல்படவும், காவல்துறையின் எத்தகைய கடுமையான பணிகளையும் விருப்பத்துடன் தாங்களே முன்வந்து ஏற்று, தங்களுடைய கடமையைத் தியாக உணர்வுடன் ஆற்றவும் இயலும் வகையில், நம்முடைய காவல் துறையின் ஒழுக்க – நேர்மையுணர்வை தொடர்ந்து பின்பற்றவும் நான் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன்.

தன்னிகரற்ற கடமைப் பற்றுணர்வு, தனிச் சிறப்பிற்குரிய வீரச் செயல்கள், தொழில்முறை பண்புகள் ஆகியவற்றைப் புலப்படுத்தக்கூடிய சூழ்நிலைகளில் தமிழ்நாடு காவல்துறை குறிப்பிடத்தக்க சாதனையை எய்தி எப்போதும் சிறப்பான பணியை ஆற்றியுள்ளது. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் பெண்களுக்குரிய பிரச்சினைகளில், நீங்கள் மிகுந்த கவனத்துடன் செயலாற்ற வேண்டும். அச்ச உணர்வு இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதும், மக்களிடையே பாதுகாப்பு உணர்வை வலுப்படுத்துவதும் உங்களுடைய முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். மனித நேயம், நியாயம், செயல் திறன்மிக்க காவல்துறைக்கு முன் மாதிரியாக நம் மாநிலத்தை உருவாக்க நீங்கள் கடுமையாகப் பணியாற்ற வேண்டும்.

ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியையும், முன்னேற்றங்களையும் எய்துவதன் மூலம், எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கி, நாட்டிலேயே தமிழ்நாடு மாநிலத்தை முதன்மை மாநிலமாக உருவாக்குவதே என் நோக்கமாகும். சட்டம் – ஒழுங்கை முறையாகப் பராமரிப்பதே இதற்கான அடித்தளமாகும். இந்நோக்கத்தை நடைமுறையில் செயல்படுத்துவதற்கு, தமிழ்நாடு காவல்துறை அதிகாரிகளும், ஆண், பெண் காவலர்களும் தளராத ஒத்துழைப்பையும், பற்றுறுதியையும் அளிக்க வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன். காவல்துறையினரின் உயரிய செயல் பாடுகளையும், தொழில்முறை பண்புகளையும் கொண்டு, நீங்கள், மக்களின் நம்பிக்கைக்குரிய தோழனாகவும், ஏழை எளிய மக்களின் பாதுகாவலனாகவும் திகழ்ந்து, ஒட்டுமொத்த நாட்டிற்கும் முன் மாதிரியான ஒரு காவல்துறையை உருவாக்குவீர்கள் என நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
**10.11.2004** அன்று காவல்துறை
தலைமை இயக்குநர் அலுவலகம் மற்றும்
காவலர் பயிற்சிக்கழகம் அடிக்கல் நாட்டு
விழா மற்றும் பல்வேறு காவல் துறை
அலுவலகக் கட்டடத் திறப்பு விழாவில்
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.



## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தி

எங்கும் கிறிஸ்துமஸ் திருநாள் கொண்டாடப் படும் இந்த இனிய நன்னாளில் கிறிஸ்தவப் பெருமக்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை உரிதாக்கிக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கிறிஸ்துவின் பிறப்புக்கு முன் என்றும், கிறிஸ்துவின் பிறப்புக்குப் பின் என்றும் காலம் பிரிக்கப்படுகிறது. இந்த இணையற்ற சிறப்புக்கு காலத்தை வென்று நிற்கும் அவரது கருணையே காரணம் !

இரக்கத்தின் வடிவம் இயேசு பெருமான்!

அன்பே அவரது மொழி !

அன்பே அவரது வழி !

அந்த அருளாளரின் வாக்கும் வாழ்வும் அன்றும் இன்றும் என்றும் அகிலத்தை அற வழியில் நடத்தும் ஆற்றல் பெற்றவை. வன்முறையால் வதைப்படும் இந்த வையம் அவரது வழி நின்றால் உய்யும்.

இயேசு பெருமான் பிறந்த இந்தப் பெருநாளில்,

தவழட்டும் அமைதி !

அதனால் தழைக்கட்டும் இன்பம் !

எனது அன்புக்குரிய தமிழக கிறிஸ்தவப் பெருமக்கள் அனைவருக்கும் என் இனிய கிறிஸ்துமஸ் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

# 2004-2005ஆம் ஆண்டுக்கான இரண்டாம் துணை மதிப்பீடுகள்



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2004–2005–ஆம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை, இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூ.60.35 கோடி நிதி ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், ரூ.53.12 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூ.7.23 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2004–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27–ஆம் நாளன்று இந்த நிதியாண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்று "புதுப்பணிகள்" குறித்துச் செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப்பெறவும், எதிர்பாராச்செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

மீனவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, 20 மீட்டர் நீளத்திற்குக் குறைவான மீன்பிடி விசைப் படகுகளுக்கு வழங்கப்படும் உயர்வேக டீசல் எண்ணெய் குறித்த மத்திய ஆயத் தீர்வையை ஈடுசெய்வதற்காக, மானியமாக அரசு ரூ.1.83 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச்செலவு நிதியிலிருந்து, முன்பணமாக ரூ.1.83 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண்.7 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம்" என்ற தலைப்பின் கீழ் ரூ.1.83 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனைகளில் அளிக்கப்படும் மருத்துவ வசதிகளை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக, மதுரை, அரசினர் இராஜாஜி மருத்துவமனைக்குச் சாதனங்கள் வழங்குவதற்காக அரசு, ரூ.1.95 கோடி அனுமதித்துள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண்.18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை" என்பதன் கீழ் ரூ.1.95 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர பகுதிக்குள், 26 முக்கியமான சாலைப் பணிகளை மேற்கொள்ள அரசு ரூ.369.90 கோடி அனுமதித்துள்ளது. இந்தச் சாலைகளில் போக்குவரத்துச் சீராக இயங்க இது பெரிதும் துணை புரியும். இது ஒரு புதுப்பணி என்பதால் இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண்.20 – நெடுஞ்சாலைகள் துறை" என்பதன் கீழ் அடையாள நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

காட்டுக் கொள்ளையன் வீரப்பனையும் அவனது கும்பலையும் தீர்த்துக்கட்டும் பணியை வெற்றிகரமாக முடித்த சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த 757 காவல்துறை அதிகாரிகள் / காவலர்கள் ஒவ்வொரு வருக்கும் ரூ.3 இலட்சம் ரொக்கப் பரிசு வழங்க அரசு ரூ.22.71 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூ.22.71 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண். 21 – உள் துறை – காவல்" என்பதன் கீழ், ரூ.22.71 கோடி சேர்க்கப் பட்டுள்ளது.

அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ மனைகளில், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில், திருநெல்வேலியிலுள்ள அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிபள்ளத்திலுள்ள கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, தூத்துக்குடியிலுள்ள அரசு தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, வேலூரிலுள்ள அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மற்றும் தேனி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஆகியவற்றிற்குக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக் கட்டடங்களைக் கட்ட, அரசு ரூ.187.29 கோடி அனுமதித்துள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண்.38. பொதுப்பணித் துறை" என்பதன் கீழ் அடையாள நிதியொதுக்கமாக ரூ.6,000

**" மீனவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, 20 மீட்டர் நீளத்திற்குக் குறைவான மீன்பிடி விசைப் படகுகளுக்கு வழங்கப்படும் உயர்வேக டீசல் எண்ணெய் குறித்த மத்திய ஆயத் தீர்வையை ஈடுசெய்வதற்காக, மானியமாக அரசு ரூ.1.83 கோடி அனுமதித்துள்ளது. "**

சேர்க்கப்பட்டுள்ளது. பணி முன்னேற்றத்தின் அடிப் படையில் தேவையான நிதி ஒதுக்கப்படும்.

"அனைவருக்கும் கல்வி" திட்டத்தைச் செயற்படுத்த கூடுதலாக ரூ.15.61 கோடி தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண்.41. பள்ளிக் கல்வித் துறை" என்பதன் கீழ் அடையாள நிதியொதுக்கமாக ரூ.2,000 சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மறு நிதியொதுக்கம் மூலம் ஒதுக்கீடு செய்யப்படும்.

யானைகளுக்குப் புத்துணர்வூட்டும் முகாம்கள் நடத்துவதற்காக அரசு, 2004–2005ஆம் ஆண்டுக்கு ரூ.87 இலட்சம் அனுமதித்துள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண். 45. தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை" என்பதன் கீழ் ரூ.87 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004–2005ஆம் ஆண்டிற்கான இரண்டாவது துணை மதிப்பீடுகளை, இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுகிறேன்.

வணக்கம்!

மாண்புமிகு நிதியமைச்சர்
திரு. **சி. பொன்னையன்** அவர்கள்,
2004–2005ஆம் ஆண்டிற்கான
இரண்டாம் துணை மதிப்பீடுகளை,
சட்டமன்றப் பேரவை முன் வைத்து,
2004–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்
17–ஆம் நாளன்று ஆற்றிய உரை.

# திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நன்கொடை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2004–ஆம் ஆண்டிற்கான ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆகிய 3 மாதங்களுக்குரிய தமது சம்பளத் தொகை மொத்தம் ரூபாய் 30 ஆயிரத்தை, மூன்று திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக 6.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 2002–ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல், தமது சம்பளத்தை, தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும் 'அன்னதானத் திட்ட'த்திற்காக, ஒவ்வொரு மாதமும் ஒரு திருக்கோயிலுக்கு என நன்கொடையாக வழங்கி வருகிறார்கள்.



அதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2004–ஆம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்களுக்குரிய தமது சம்பளத் தொகை ரூ.30 ஆயிரத்தை, தலா ரூ.10 ஆயிரம் வீதம், திருச்சி மாவட்டம், குணசீலம் அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயில், சென்னை, திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருள்மிகு சுப்ரமணியசாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக வழங்கினார்கள். இந்த நன்கொடைக்கான காசோலைகளை, அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயில் பரம்பரை நிர்வாக அறங்காவலர் திரு. கே.ஆர். பிச்சுமணி அய்யங்கார், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலர் திரு. பாரதி, அருள்மிகு சுப்ரமணியசாமி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் திரு. ஆர்.முத்துசாமி ஆகியோரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 6.12.2004 அன்று நேரில் வழங்கினார்கள்.



★ ★ ★

# வீரப்பனின் கொடுமைக்கு முடிவு கட்டிய வெற்றிச் செயல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் சட்டப்பேரவையில் அளித்த அறிக்கை (22–11–2004)



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

*ஞாலம் கருதினும் கைகூடும் காலம்*
*கருதி இடத்தாற் செயின்*

என்பது வள்ளுவர் வாக்கு. வள்ளுவரின் அந்த வாய்மொழிக்கு இணங்க எப்போது செயல்படுவது, எப்படிச் செயல்படுவது, எந்த இடத்தில் செயல்படுவது என்று தீர்க்கமாகச் சிந்தித்து, திடமாகச் செயல்பட்டு தமிழ்நாடு காவல் துறை ஒரு மகத்தான வெற்றியை, ஒரு மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. காட்டுக் கொள்ளையன் வீரப்பனுக்கு ஒரு முடிவு கட்டியதுதான் அந்த மகத்தான வெற்றி!

வன வளங்களைக் கபளீகரம் செய்த பயங்கரக் காட்டுக் கொள்ளைக்காரன்– மனித உயிர்களை மலிவாகக் கருதிய கொலைகாரன் – யானைகளை இரக்கமின்றி கொன்று குவித்த அசுரன் – ஈவு இரக்கம் அறியாத வழிப்பறிக் கொள்ளையன் – தமிழ்நாட்டை மட்டும் அல்லாமல் கர்நாடகாவையும் கடந்த 20 ஆண்டுகளாகப் பீடித்திருந்த இழிவான சாபக்கேடு– இத்தகைய இழிவுகளின் இருப்பிடமாய்த் திகழ்ந்த வீரப்பன் கொடுமைகளுக்கு எல்லாம் 18.10.2004 அன்று ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. தமிழக அதிரடிப்படை மேற்கொண்ட துணிவான சாகச நடவடிக்கையால் அன்றைய தினம் வீரப்பனும் அவனது கூட்டாளிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

காட்டுக் கொள்ளையன் வீரப்பனை உயிருடன் பிடித்து, சட்டத்தின் முன் அவனை நிறுத்தி, அவன் செய்த தவறுகளுக்கு உரிய தண்டனை பெற்றுத் தர வேண்டும்; அவனுக்குப் பக்கபலமாகவும், பின் புலமாகவும் நின்றிருந்தவர்களை, அவனை வைத்துக் காசு பார்த்தவர்களை, மக்கள் மத்தியில் அடையாளம் காட்ட வேண்டும் என்பதுதான் எனது தலைமையிலான இந்த அரசின் எண்ணம். இதன் அடிப்படையில்தான், தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படையினர் உரிய வியூகங்கள் வகுத்து, தருமபுரியில் இருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் பாப்பாரப்பட்டிக்கும், தருமபுரிக்கும் இடையே நெடுஞ்சாலையில், வீரப்பனையும், அவனது கூட்டாளிகளையும் வழி மறித்தார்கள். அவர்கள் வந்து கொண்டிருந்த வாகனத்தில் இருந்து இறங்கி வந்து சரணடையுமாறு கூறினார்கள். ஆனால், வீரப்பனும், அவனது கூட்டாளிகளும், சுற்றி நின்ற அதிரடிப்படையினரை சுட்டுக் கொன்று விட்டுத் தப்பித்து விடலாம் என்ற எண்ணத்தில், சரணடைவதற்குப் பதிலாக துப்பாக்கியால் சுட ஆரம்பித்தார்கள். அதற்குப் பிறகும் கூட, அதிரடிப்படையினர் மேலும் ஒரு வாய்ப்புக் கொடுத்து சரணடையுமாறு மீண்டும் ஒரு எச்சரிக்கை விடுத்தனர். ஆனால், அந்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல், வீரப்பனும், அவனது கூட்டாளிகளும், தொடர்ந்து அதிரடிப்படையினர் மீது சுட்டதால், பதிலுக்கு அதிரடிப்படையினர் திரும்பச் சுட்டு, அவர்களை வெற்றி கொண்டார்கள். இந்தச் சாகச நடவடிக்கையின் போது, கொலைகாரன் வீரப்பனும்,

அவனது மொத்தக் கூட்டாளிகளாகிய சேத்துக்குளி கோவிந்தன், சந்திர கௌடா மற்றும் சேதுமணி ஆகியோரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த நடவடிக்கையில் காவல் துறையைச் சார்ந்த மூன்று பேர் காயமடைந்தனர்.

20 ஆண்டுகளாக, இரவும் பகலும் நடைபெற்று வந்த ஒரு போராட்டத்திற்கு, கொடியவன் வீரப்பனையும், அவனது கூட்டாளிகளையும் எதிர்த்து நடத்திய அசுர வேட்டைக்கு, தமிழ்நாடு காவல் துறையின் சிறப்புஅதிரடிப்படை மதி நுட்பத்துடன் வியூகங்கள் வகுத்து, தனது 20 நிமிட சாகசச் செயலால் ஒரு முடிவு கண்டது. ஆனால், இதற்கு இடைப்பட்ட காலத்தில் வீரப்பன் எத்தனை பேரைக் கொலை செய்தான்? அவன் மேற்கொண்ட கொள்ளைச் செயல்கள் எத்தனை? அவன் இழைத்த கொடுமைகள்தான் எத்தனை, எத்தனை?

கொடியவன் வீரப்பனால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 124! அவனால் அழிக்கப்பட்ட யானைகளோ ஆயிரத்திற்கும்மேல்! கடத்தப்பட்ட சந்தனக் கட்டைகளின் மதிப்போ பல கோடி ரூபாய்க்கும் அதிகம்! இந்தக் குற்றங்களுக்காக அவன் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளோ, தமிழகத்தில் 102, கர்நாடகாவில் 70 என்பதே தீயவன் வீரப்பன் எப்பேர்ப்பட்ட கொடுமைக்காரனாகத் திகழ்ந்தான் என்பதை எடுத்துக்காட்டும்.

இவற்றை எல்லாம் பொறுப்புள்ள எந்த அரசால்தான் சகித்துக் கொள்ள இயலும்? எனவேதான், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது, 1993–ஆம் ஆண்டில், பயங்கரக் கொள்ளைக்காரன் வீரப்பனும், அவனுடைய கூட்டாளிகளும் ஏற்படுத்தி வந்த இன்னல்களுக்கு ஒரு முடிவு கட்டும் வகையில், சிறப்பு அதிரடிப்படையை உருவாக்கினேன். எப்படியாவது வீரப்பனின் கொடுமைக்கு முடிவு கட்டிவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் சிறப்பு அதிரடிப்படைக்கு ஊக்கம் அளித்தேன். உற்சாகம் கொடுத்தேன். அவர்கள் சர்வ சுதந்திரமாகப் பணியாற்ற வாய்ப்பு அளித்தேன். எனது முந்தைய ஆட்சிக் காலம் முடிவடைந்த 1996–ஆம் ஆண்டு மே மாதம் வரையில், வீரப்பனைப் பிடிக்கும் முயற்சிகள் தொய்வு இன்றி தொடரப்பட்டன. இதன் விளைவாக, வீரப்பனின் நடவடிக்கைகள் முடக்கப்பட்டன; அவனுடைய கூட்டாளிகளின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது. செயல்பட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டான் வீரப்பன்.

ஆனால், 1996ஆம் ஆண்டு அமைந்த தி.மு.க. அரசு, சிறப்பு அதிரடிப் படையின் நடவடிக்கைகளை நிறுத்தி அதனைச் செயல் அற்றதாகச் செய்தது. 2001–ஆம் ஆண்டு நான் மீண்டும் தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை, சிறப்பு அதிரடிப்படை செயல்படா நிலைக்கு ஆளாக்கப்பட்டிருந்தது.

நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனே, தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படைக்குப் புத்துயிர் அளித்து, அதை உயிர்த் துடிப்புள்ளதாக ஆக்கினேன். நான் 2001இல் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு தான், தமிழக சிறப்பு அதிரடிப்படைக்கும், கர்நாடக அதிரடிப்படைக்கும் சுமுகமான அணுகுமுறை ஏற்பட்டது. நவீன ரக துப்பாக்கிகள், புதிய வகைக் கருவிகள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றைச் சிறப்பு அதிரடிப்படைக்கு வழங்கினேன். உளவுத் தகவல்களைச் சரியாகவும், உடனுக்குடனும் பெற்றிட நுண்ணறிவுப் பிரிவைப் பலப்படுத்தினேன். இத்தனைக்கும் மேலாக, கொடியவன் வீரப்பனைப் பிடிப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அதிரடிப்படை முற்றிலும் சுதந்திரமாகச் செயல்பட அனுமதித்தேன்.

இவ்வாறு வீரப்பனை வெற்றி கொள்வதற்கான ஒவ்வொரு அம்சத்தையும் தீர்க்கமாக ஆராய்ந்து, தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படைக்குத் தேவையான வசதிகளை எல்லாம் வழங்கி, அதற்கான இலக்கையும் நிர்மாணித்துத் தந்தேன்.

வீரப்பனைப் பிடிப்பதற்காக நான் இவ்வாறு மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையையும் தமிழ்நாட்டின் எதிர்க்கட்சிகள் கேலி செய்தன. ஆனால், நான் உறுதியாக இருந்தேன். அந்தப் பயங்கர கொள்ளையனைப் பிடிக்கும் முயற்சியில் நான் சற்றும் தளர்வடையவில்லை. தமிழ்நாடு காவல்துறையின் திறமையிலும், அதன் அர்ப்பணிப்பு உணர்விலும், அசைக்க முடியாத நம்பிக்கையோடு இருந்தேன்.

துணிவிலும், சாகசத்திலும் இணையற்ற தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை வீரர்கள், எனது அந்த நம்பிக்கைக்கு உயிர் கொடுத்தார்கள். அதனை உண்மையாக்கினார்கள்.

பசி நோக்காது, கண் துஞ்சாது, கருமமே கண்ணாய் கடமையிலே கருத்தாய்ப் பணியாற்றி தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படையினர் இன்றைக்கு வெற்றி பெற்றுள்ளார்கள். இன்றைக்கு, இந்த

வெற்றிக்குப் பாராட்டு கிடைக்கிறது. ஆனால், அன்றைக்கு ? பாராட்டு வேண்டாம். வெறும் ஊக்கம் கொடுத்திருந்தால் கூடப் போதும். ஆனால், அப்படிச் செய்யவில்லை சிலர், மாறாக, ஏளனம் செய்தார்கள்! எள்ளி நகையாடினார்கள். வீரப்பனைப் பிடிக்க மேற்கொண்ட அனைத்து நடவடிக்கை களையும் கேலியும், கிண்டலும் செய்தார்கள்! இதற்கு எல்லாம் பதிலாக, 2003–2004ஆம் ஆண்டுக்கான காவல் துறை மானியக் கோரிக்கை மீது சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதங்களுக்குப் பதில் அளிக்கும் போது, நான் எனது இலட்சியத்தைத் தெளிவாக வெளியிட்டேன்.

“ வீரப்பனைப் பிடிப்பது ஒன்று தான் பாக்கி. அதையும் விரைவில் செய்து முடிப்போம்'' என்று அன்றைக்கு சட்டமன்றத்தில் நான் முழக்கமிட்டேன். அன்று நான் சொன்னதைச் சொன்னபடி செயல்படுத்தி, தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் வீரப்பனின் கொடூர வரலாற்றுக்கு ஒரு முடிவு கட்டினார்கள்.

இதற்கு அடிப்படை, தமிழ்நாடு காவல் துறையின் திறமையிலும், அதன் அர்ப்பணிப்பு உணர்விலும் எனக்கு எப்போதும் இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கைதான்! தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படையினரின் ஆற்றல் மீது யார் வேண்டுமானாலும் நம்பிக்கை இழந் திருக்கலாம். அவர்கள் மீது அவர்களுக்கே கூட ஒரு கால கட்டத்தில் நம்பிக்கை குறைந்து போய் இருக்கலாம். ஆனால், உடல் தகுதி, மன உறுதி ஆகியவற்றின் அடிப்படையில் வீரப்பனைப் பிடித்தே தீருவது என்னும் அவர்களது ஆர்வத்தினை அடையாளம் கண்டு சிறப்பு அதிரடிப்படைக்கான வீரர்களைத் தெரிவு செய்த எனக்கு மட்டும், சிறப்பு அதிரடிப் படையினர் மீது எள்ளளவும் நம்பிக்கை குறைய வில்லை. தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை வீரர்களும் அந்த நம்பிக்கைக்கு உயிர் கொடுத்து, கடும்பசிக்கும், கொடும் நோய்க்கும் மனம் தளராது, கொத்துகிற பாம்புக்கும், கொட்டுகிற தேளுக்கும் பயப்படாது, அடாத பணிக்கும், விடாத மழைக்கும் அயராது, குள்ளநரி வீரப்பனின் கொடுமைகளுக்கெல்லாம் கொஞ்சமும் அஞ்சாது, 2004 அக்டோபர் 18–ஆம் நாள் கொடுமையைக் கொன்று, அமைதியை மீட்டுத் தந்தார்கள்.

சிறப்பு அதிரடிப்படையின் தலைவர் திரு.கே.விஜயகுமார், தன்னுடைய வீர உணர்வையும், விழுமிய திறத்தையும் வெளிப்படுத்தி, அதிரடிப்படை வீரர்களின் ஆற்றலை ஒருமுகப்படுத்தி, மதி நுட்பத்துடன் சிறந்த உத்திகளைக் கையாண்டு, சரித்திரத்தில் இடம் பெறும் இந்த மாபெரும் வெற்றியை ஈட்டித் தந்தார்.

சிங்கமாக இருந்தால் அதன் குகைக்குள்ளே சென்று அதனை சந்திக்கலாம். அங்கே வீரம் இருந்தால் போதும். அதுவே காட்டு எலியாக இருந்தால் அதனை அதன் வளையிலிருந்து வெளிக் கொணர்ந்து பொறியிலே சிக்க வைத்துத் தான் பிடிக்க வேண்டும். அங்கே வீரத்துடன் விவேகமும், தந்திரமும் வேண்டும். அப்படி காட்டுக்குள்ளே இருந்த வீரப்பனை நாட்டுக்குள் வரவழைத்து, சரண் அடைந்திட ஒன்றுக்கு இரண்டு முறை எச்சரிக்கை விடுத்து, அதனை வீரப்பன் ஏற்றுக் கொள்ளாதது மட்டும் அல்ல, 124 உயிர்களைப் பறித்த தனக்கு இவர்கள் எம்மாத்திரம் என்ற துணிவில் துப்பாக்கியால் சுட்ட போது, துள்ளி வரும் தோட்டாக்களுக்கு அஞ்சிடாமல் வீரத்துடன் திருப்பிச் சுட்டு, வீரப்பனின் கொடுமைகளுக்கு தமிழ் நாடு சிறப்பு அதிரடிப் படைத் தலைவரும், காவல்துறை கூடுதல் இயக்குநருமான திரு. விஜயகுமாரும் அவரது குழுவினரும் ஒரு முடிவு கட்டினார்கள்.

தங்களது குடும்பங்களை விட்டு பல ஆண்டுகள் பிரிந்து, தங்களது இல்லத்தின் வசதிகளைத் துறந்து, தங்களது பாதுகாப்பை பொருட்படுத்தாது அபாயகரமான பணியை விரும்பி மேற்கொண்டு, தமிழகம் மட்டும் அல்லாமல், கர்நாடக மக்களும் அமைதியுடன் வாழ வழி அமைத்துக் கொடுத்தமைக்காக, தமிழக மக்களின் நன்றி உணர்வை பிரதிபலிக்கும் வகையில், அதிரடிப்படைத் தலைவர் முதலாக, அதன் கடைசி காவலர் வரை – அதிகாரிகள் முதலாக, சமையல்காரர் மற்றும் ஏவலர் வரை – அனைவருக்கும் ஒருபடி பதவி உயர்வு, தலா 3 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு, அவர்கள் விரும்பிய இடத்தில் வீட்டு மனை ஆகியவற்றை தமிழக அரசின் சார்பில் பரிசாக வழங்கி கௌரவப்படுத்தினேன்.

வீர சாகசச் செயல்கள் ஆற்றியமைக்கும், வீர விழுப்புண் பெற்றமைக்கும், அந்தப்பணியில் பங்கேற்றமைக்கும் மனமுவந்து பாராட்டி தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை அணிவித்தேன். தற்போது பணியாற்றுபவர்கள் மட்டும் அல்லாமல், இதற்கு முன்னர் சிறப்பு அதிரடிப்படையில் இருந்து வீரப்பனைப் பிடிப்பதற்கான அடித்தளம் அமைத்துக் கொடுத்த உயர் அதிகாரிகளையும், காவலர்களையும் மறந்து விடாமல், அவர்களுக்கும் தகுந்த மரியாதை செய்து கௌரவித்தேன். தமிழ்நாடு சிறப்பு

அதிரடிப்படையினருடன் இணைந்து பணியாற்றிய வனவர் முதல் வனத் தோட்டக் காவலர் வரையிலான வனத்துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கும் ஒரு படி பதவி உயர்வு, ரொக்கப் பரிசு ஆகிய பரிசுகள் வழங்கியும், வீரப்பதக்கங்கள் அணிவித்தும் கௌரவித்தேன்.

தமிழகக் காவல் துறைக்குப் பெரும் புகழைப் பெற்றுத் தந்த தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படையினருக்கு, தமிழக மக்களின் நன்றி உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில், பார் வியக்கும் வண்ணம் ஒரு பாராட்டு விழா நடத்தி, அந்த விழாவிலே இந்தப் பரிசுகளை எல்லாம் அவர்களுக்கு அளித்து, அதில் அவர்களது குடும்பத்தினர்கள் அனைவரையும் கலந்துகொள்ள வைத்து, அறுசுவை விருந்து தந்து பாராட்டி மகிழ்ந்தேன்.

அது மட்டுமின்றி, இளைய தலைமுறையினர் வீர உணர்வு பெற்று இந்த நாட்டுக்காகவும், இந்த நாட்டு மக்களுக்காகவும், தன்னலம் கருதாது உழைத்திட – தங்களது வாழ்க்கையில் தீரச் செயல்கள் புரிந்திட – தூண்டுகோலாகத் திகழும் வகையில், வீரப்பனைப் பிடிக்கின்ற பணியில் ஈடுபட்டு தங்களது இன்னுயிரை இழந்த தமிழக சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்களின் வீரத்தை நினைவு கொள்ளும் வகையில் நினைவுச் சின்னம் ஒன்றினை, வண்டலூர் அருகே ஊனமாஞ்சேரியில் புதிதாக அமைக்கப்பட உள்ள காவலர் பயிற்சிக் கழக வளாகத்தில் நிறுவிட ஆணையிட்டேன்.

இவ்வாறு தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை, அர்ப்பணிப்பு உணர்வுடன் போராடி, உலகளாவிய புகழைப் பெற்றுத் தந்தது. தமிழகக் காவல் துறை தரணியில் தன்னிகரற்ற காவல்துறை என்ற பெருமையைப் பெற்றுத் தந்தது.

இந்த வெற்றி, தமிழகக் காவல் துறை மீது, நான் வைத்திருக்கின்ற அசைக்க முடியாத நம்பிக்கைக்குக் கிடைத்த வெற்றி!

இந்த வெற்றி, எதிர்க்கட்சியினரின் ஏகடியங்களை ஒரு பொருட்டாக மதிக்காமல், வீரப்பனைப் பிடிப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்ட எனது மன உறுதிக்கும், சிறப்பு அதிரடிப்படையின் வீரத்திற்கும், விவேகத்திற்கும் கிடைத்த வெற்றி.

இந்த வெற்றி, சொன்னதைச் சொன்னவாறு செய்து முடித்த, எனது அரசிற்குக் கிடைத்த தனிப்பெரும் வெற்றி என்று கூறி அமைகிறேன். □

## இசை அரசி
## எம்.எஸ். சுப்புலட்சுமி மறைவு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
இரங்கல் செய்தி – 12.12.2004

இசை அரசி திருமதி. எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தியை அறிந்து நான் அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் அடைந்தேன்.

நம் காலத்தில் கர்நாடக இசையை வளர்த்த பெருமக்களில் திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களும் ஒருவர். எளிமை மற்றும் அடக்கத்தின் வடிவமாக விளங்கியவர் அவர். அவருடைய இசையின் இனிமையும், ஆன்மீகப் பண்பும் இலட்சக்கணக்கான இந்தியர்களுக்கு இறைவனோடு தொடர்பு கொள்ளும் இனிய வாய்ப்பை வழங்கின. மதுரை மாநகரில் பிறந்த இந்தத் தமிழகத்தின் தவப்புதல்வி, தமது தெய்வீக இசையின் உலகார்ந்த தன்மையால் புவி முழுமைக்கும் சொந்தமானவர். மகிழ்ச்சி, பக்தி மற்றும் தேச பக்தி ஆகிய உணர்வுகளை உருவாக்கும் ஆற்றல் பெற்றவை அவருடைய கீதங்கள். அந்த கீதங்களின் இனிமையைக் கேட்டுக் கேட்டு வளர்ந்தது அண்மைக் கால இந்தியத் தலைமுறை. அவருடைய குரலின் ஆன்மீக அழகும், உள்ளம் ஒன்றி அவர் பாடும் பாங்கும், அவருடைய கீர்த்தனைகளுக்கும், பஜனைப் பாடல்களுக்கும், தோத்திரப் பாடல்களுக்கும் ஒப்புவமை இல்லாத ஒரு புனிதத்தை அளித்தன. அது, சாதி, மதம், மொழி, வயது, ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு ஆகியவற்றை எல்லாம் கடந்து மக்களை மனம் உருக வைத்தது.



70 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட நீண்டதொரு இசை வாழ்வு கொண்ட திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள், பத்ம பூஷண், பத்ம விபூஷண் ஆகிய விருதுகள் முதல் ரேமன் மக்சாசே மற்றும் பாரத ரத்னா விருது வரை பல்வேறு பெருமைக்குரிய விருதுகளைப் பெற்றவர். எத்தனை விருதுகள் பெற்றிருந்தாலும், திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி என்னும் பெயர் 'கருணை' என்றும் 'தர்மம்' என்று பொருள்படும் என்று சொல்லப்படும் அளவுக்கு அவர் பெற்றிருக்கும் உலகளாவிய அங்கீகாரத்திற்கு ஈடாகாது. தான் ஈட்டிய பொருளை இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள அற நிறுவனங்களுக்கு வழங்கியவர் அவர்.

அவருடைய இழப்பு ஈடு செய்ய முடியாதது. அவருடைய இடம் இன்னொருவரால் நிரப்ப இயலாதது. உலகம் ஒரு பெரிய இசை அரசியை இழந்து விட்டது. அதை விட ஓர் உயரிய மனிதரை இழந்து விட்டது. ★

# சிறப்பான திட்டம், சிறப்பான ஈடுபாடு, சிறப்பான செயல்பாடு இவற்றால் சிறப்பான சாதனை

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்




**மே**ற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அழகுற அமைந்த தேனி மாவட்டத்தில், எனது தொகுதியான ஆண்டிபட்டியில் உள்ள திருமலாபுரத்தில், அமைக்கப்பட்டு உள்ள தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை துவக்கிவைத்து, வேலூர் மற்றும் கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்கான புதிய கட்டடங்களைத் திறந்து வைத்து, தேனி மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, உங்களுடன் சில கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள கிடைத்த இந்த இனிய வாய்ப்புக்காக அகமிக மகிழ்கிறேன்.

நான் தேனி மாவட்டத்திற்கு அரசு விழாக்களில் கலந்து கொள்வதற்காக, நான்காம் முறையாக இங்கு வந்துள்ளேன். முதலமைச்சர் என்ற முறையில், தமிழ்நாட்டில் உள்ள எல்லா தொகுதிகளும் எனது தொகுதிதான் என்றாலும், இந்தத் தொகுதி எனது சொந்தத் தொகுதி என்பதால், ஆண்டிபட்டித் தொகுதி மீது நான் கூடுதலாக அக்கறை கொள்வது இயல்புதானே! ஆகவே தான், என் அன்பிற்குரிய தொகுதி மக்களை அடிக்கடி பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவாக, மீண்டும் இந்த அழகிய மாவட்டத்திற்கு நான் வருகை புரிந்துள்ளேன்.

**16.9.2002 அன்று ஆண்டிபட்டி தொகுதியில் மேல்மங்கலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தேனி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி ஆண்டிபட்டியில் அமையும் வகையில், அதன் முன்னோடி நடவடிக்கையாக அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்திலேயே மருத்துவமனை கட்ட நான் அடிக்கல் நாட்டினேன். 4 மாடிகளுடன் கூடிய இந்த மருத்துவமனையும், மருத்துவக் கல்லூரிக்கான கட்டடங்களும் 12 கோடி ரூபாய் செலவில் பாங்குடன் கட்டி முடிக்கப்பட்டு, இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.**

300 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனையில் ஆய்வுக்கூடங்கள், மருந்துக் கிடங்கு, நிருவாக அலுவலகங்கள், நவீன வசதிகளுடன் கூடிய சமையலறை முதலான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் 46 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கான கூடுதல் கட்டடங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். மேலும், உபகரணங்களுக்காக 15 கோடியே 39 இலட்சம் ரூபாய் வழங்கி ஆணையிட்டுள்ளேன். அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய புதிய தேனி அரசு மருத்துவக் கல்லூரி 2005–2006ஆம் கல்வி ஆண்டு முதல் இயங்கத் தொடங்கும் என்பதையும், ஆண்டுதோறும் 100 மாணவ மாணவியர் மருத்துவக் கல்வி பயில வாய்ப்பாக இது அமையும் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உருவாக்கப்பட்டுள்ளதன் முக்கிய நோக்கமே ஆண்டிபட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்ந்து வரும் ஏழை எளிய மக்கள் பயன் அடைய வேண்டும் என்பதே ஆகும். இன்று நான் தொடங்கி வைத்துள்ள புதிய மருத்துவமனை, தேனி மாவட்ட மக்களின் உடல் நலன் காப்பதில் உறுதுணையாக இருக்கும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்த மருத்துவக் கல்வியின் மூலம் சிறந்த மருத்துவர்களை உருவாக்கினால்தான், அரசு மருத்துவமனைகளில் சீரிய மருத்துவ வசதிகளை அளிக்க முடியும். இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், மருத்துவக் கல்லூரிகளுக்கு உரிய வசதிகளை வழங்குவதற்கு எனது அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

வேலூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட 144 கோடியே 21 இலட்சம் ரூபாயும், இந்த மருத்துவக் கல்லூரிகளுக்கு உபகரணங்கள் மற்றும் அறைக் கலன்கள் வாங்க 38 கோடியே 72 இலட்சம் ரூபாயும் வழங்கி உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவிப்பதில் நான் மிகுந்த மன நிறைவு அடைகிறேன். ஒரே ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளுக்கு இவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்தது தமிழகத்தின் வரலாற்றில் இதுவே முதன் முறை ஆகும்.

**மருத்துவரின் பணி மகத்தானது. அதற்கு இணையே இல்லை.**

நல்லவன் ஆனாலும், கெட்டவன் ஆனாலும், புண்ணியவான் ஆனாலும், பாவி ஆனாலும், மருத்துவர் வேற்றுமை பாராட்டக்கூடாது. குற்றவாளியானாலும், கொலையாளியானாலும், பேத பாவம் பார்க்காமல் பணியாற்ற வேண்டியது ஒரு மருத்துவரின் கடமையாகும்.





"கடமையைச் செய்யவே உனக்கு அதிகாரம்" என்பது பகவத் கீதையின் வாசகம். இந்த பகவத் கீதை வாசகம் மருத்துவர்களுக்கு மிகவும் பொருந்தும். எந்தச் சூழ்நிலையிலும், தங்கள் பணியைச் சிறப்புறச் செய்ய வேண்டியது அவர்கள் கடமை.

அப்படி கடமையே கண்ணாக இருக்கும் மருத்துவர்களை – எந்தவித வித்தியாசமும் பாராமல் யாவருக்கும் பணி ஆற்றும் மருத்துவர்களை – நமது மருத்துவக் கல்லூரிகள் உருவாக்க வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு. எனது இந்த எதிர்பார்ப்பை மருத்துவ

மாணவ மாணவியர்களும், ஆசிரியர்களும் நிச்சயம் நிறைவேற்றுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் எப்போது வந்தாலும் வெறும் கையோடு வந்தது இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். கை நிறைய திட்டங்களோடும், நலத் திட்ட உதவிகளோடும் உங்களை ஒவ்வொரு முறையும் நான் சந்தித்திருக்கிறேன்.

தேனி மாவட்டத்தில் நான் முன்பு கலந்து கொண்ட மூன்று அரசு விழாக்களிலும், 86 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பில் 2,728 முடிவுற்ற பணிகளை துவக்கிவைத்து, 263 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 2,156 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, 10 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை 17,289 பயனாளிகளுக்கு வழங்கியுள்ளேன். இவற்றின் மொத்த மதிப்பு 360 கோடியே 27 இலட்சம் ரூபாய் என்பதை நினைவுபடுத்துவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய தினம், இந்த இனிய விழாவில், பல்வேறு அரசுத் துறைகளின் சார்பாக, 152 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 349 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்துள்ளேன். 64 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 274 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன். மேலும், பல்வேறு துறைகளின் சார்பாக, 6 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை 12,159 பயனாளிகளுக்கு வழங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் ஆண்டிபட்டி தொகுதியில் மட்டும் 103 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 124 பணிகளைத் திறந்து வைத்துள்ளேன். 55 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 136 பணிகளுக்கு அடிக்கல் நாட்டி உள்ளேன். மேலும், 1 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 2,831 பயனாளிகளுக்கு வழங்க உள்ளேன் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தேனி மாவட்டத்தில் வேளாண்மை தலையாய தொழிலாக விளங்குகிறது. வேளாண் தொழில் சிறக்க நீர் வளமும், பாசன வசதியும் நன்கு அமைய வேண்டும். தேனி மாவட்டத்தில் பாசன வசதியைப் பெருக்குவதற்காக ராயப்பன்பட்டி கிராமத்தின் அருகில் சண்முகா நதியின் குறுக்கே 14 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சண்முகா நதி நீர்த் தேக்கத் திட்டம் உருவாக்கப்பட்டு இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 79.57 மில்லியன் கன அடி கொள்ளளவு உள்ள காட்டாற்று நீர் தேக்கப்பட்டு, 18 கிலோ மீட்டர் நீளமுள்ள வாய்க்கால் மூலம் 8 கிராமங்களில் உள்ள 1,678 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.**



மேலும், ஆண்டிபட்டி வட்டத்திலும், உத்தம பாளையம் வட்டத்திலும், 1 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நான்கு புதிய குளங்கள் அமைக்க இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

மக்களுடைய குடிநீர்த் தேவைகளைப் போர்க்கால அடிப்படையில் நிறைவு செய்வதை எனது அரசு தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில், ஏற்கெனவே இம்மாவட்டத்தில் 10 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு கூட்டுக் குடிநீர் மற்றும் மின்விசை குடிநீர்த் திட்டங்கள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. 15.4.2002 அன்று ஆண்டிபட்டியில், 74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆண்டிபட்டி நகரம் மற்றும் தேனி, மதுரை மாவட்டங்களைச் சேர்ந்த 406 கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் ஆண்டிபட்டி – சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நான் அடிக்கல் நாட்டினேன். அத்திட்டம் நிறைவேற்றப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டதில் நான் மனநிறைவு அடைகிறேன். இதுவன்றி 8 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டங்களைத் திறந்து வைத்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நிருவாகத்தைச் செம்மைப்படுத்தவும், அரசுத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தவும், மக்கள் தேவைகளை அலுவலர்கள் உணர்வு பூர்வமாகப் புரிந்து செயல்படவும், பொதுமக்களிடம் அலுவலர்களும், பணியாளர்களும் நல்ல அணுகுமுறையினை வளர்த்துக் கொள்வதற்கும், அரசு அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பது இன்றியமையாதது ஆகும். ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் நிதிஉதவியுடன் 40 இலட்சம் ரூபாய்

மதிப்பீட்டில், தேனி மாவட்டத்தில் அரசு அலுவலர்களுக்காக செயல்படுத்த உள்ள பயிற்சித் திட்டத்தை இன்று துவக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதனால் இம்மாவட்டத்தைச் சேர்ந்த 5,460 அலுவலர்கள் திறன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

எந்தச் செயலையும் சிறப்பாகச் செய்ய வேண்டும்; அந்தச் செயல்பாட்டில் மற்றவர்களுக்கும் நமக்கும் வித்தியாசம் இருக்க வேண்டும் என்பதுதான் எனது இலட்சியம்.




வெற்றியாளர்கள் யார் ?

வித்தியாசமான செயல்களைச் செய்பவர்களா ? இல்லை!

வித்தியாசமாக செயல்களைச் செய்பவர்களே வெற்றியாளர்கள்.

ஒவ்வொரு செயலிலும் அந்தத் தனித்துவ முத்திரை இருக்க வேண்டும் என்று உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் நினைக்கிறேன்.

வழக்கமான முடிவுகள் மற்றும் வழக்கமான செயல்பாடுகளால் நாம் எதிர்பார்க்கும் புதுமையைக் கொண்டு வர முடியாது.

**சிறப்பான திட்டம், சிறப்பான ஈடுபாடு, சிறப்பான செயல்பாடு, இந்த மூன்றால் மட்டுமே சிறப்பான சாதனையை நாம் செய்திட இயலும் என்பது எனது நம்பிக்கை.**

பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்றைய தினம் நானே எனது கரங்களாலேயே வழங்கவேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்தாலும் நேரம் போதாது என்பதை நீங்களே அறிவீர்கள். ஆகவே, நலத்திட்ட உதவிகளை 10 பேர்களுக்கு மட்டும் இந்த மேடையில் நான் வழங்க இருக்கின்றேன். மற்ற பயனாளிகளுக்கு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அதிகாரிகளும் இங்கேயே இப்போதே வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெறுகின்ற நீங்கள், அவற்றை உங்கள் வாழ்வின் ஆதாரமாகப் பயன்படுத்தி உண்மையான உழைப்பால் உயர்வு பெற்று, செய்கின்ற தொழில்களில் மென்மேலும் உயரவேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இந்த விழா சீரோடும், சிறப்போடும் நடைபெற காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சுனீல் பாலீவால் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

8.12.2004 அன்று தேனி மாவட்டம்,
ஆண்டிபட்டியில் நடைபெற்ற
தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை
தொடக்க விழா, வேலூர், கன்னியாகுமரி அரசு மருத்துவக்
கல்லூரி மருத்துவமனைகளுக்கான புதிய கட்டடங்கள்
திறப்பு விழா மற்றும் தேனி மாவட்ட வளர்ச்சித்
திட்டப் பணிகள் தொடக்க விழாவில் கலந்து கொண்டு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரை

# உழைப்பும், உள்ளத்தில் ஊக்கமும் இருந்தால் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி பெறலாம்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்




இன்று சீரோடும் சிறப்போடும் நடைபெறும் கிருஷ்ணகிரி மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதிலும் என் அன்புக்குரிய மக்களாகிய உங்களைச் சந்திப்பதிலும் உங்களோடு சில சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்வதிலும் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

அண்மையில் தொடங்கப்பட்ட காரணத்தால் கிருஷ்ணகிரி மாவட்டம் தமிழகத்தின் கடைக்குட்டி மாவட்டம் என்ற தகுதியைப் பெறுகிறது. புதிய மாவட்டம் என்ற தகுதியைப் பெற்றது அண்மையில் என்றாலும் இந்தப் பகுதி வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே பெருமை படைத்த பழம் பெரும் பகுதி ஆகும் என்பதை நாம் மறந்து விட இயலாது.

தமிழகத்தின் முப்பதாவது மாவட்டம் என்ற சிறப்பினைப் பெற்ற கிருஷ்ணகிரி மாவட்டத்தை நான் 9.2.2004 அன்று தொடங்கி வைத்தேன். அவ்வாறு தொடங்கி வைத்து 10 மாத காலத்தில் மீண்டும் உங்களைச் சந்திப்பதற்கு உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் வந்திருக்கிறேன்.

மக்கள்தானே ஜனநாயகத்தின் ஆணி வேர்! அந்த மக்களுக்காக மாபெரும் திட்டங்களை உருவாக்குவதும், மக்கள் நலப் பணிகளில் முனைப்போடு ஈடுபடுவதும் ஒரு மக்கள் அரசின் கடமை என்பது உங்கள் அன்புச் சகோதரியாகிய எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

வெளிச்சம், விழிகளுக்கு எப்படி முக்கியமோ –

காற்று, நுரையீரலுக்கு எப்படி முக்கியமோ –

அன்பு, இதயத்திற்கு எப்படி முக்கியமோ –

அப்படி சுதந்திரம் ஆன்மாவுக்கு முக்கியம்!– என்று உலகச் சிந்தனையாளர்களில் ஒருவராகிய மேலை நாட்டு அறிஞர் இங்கர்சால் கூறுவார்.

What light is to the eyes - what air is to the lungs - what love is to the heart - liberty is to the soul of man! என்பது அவரது வாசகம்.

அந்தச் சுதந்திரத்தை மக்களாட்சிதான் மனிதனுக்கு வழங்குகிறது.

அந்த மக்களாட்சித் தத்துவத்துக்கு அடிப்படை எது ?

மக்களால் உருவாக்கப்படும் அரசுக்கும், மக்களுக்கும் இடையே இருக்கும் உறவுதான் அந்த அடிப்படை.

மக்களால், மக்களுக்காக உருவாக்கப்படும் மக்கள் அரசு, எந்த எந்த வழிகளில் எல்லாம் மக்களுக்கு நன்மை செய்யலாம் என்று சிந்தித்தபடி இருக்க வேண்டும்.

இந்த ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவதில் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு எப்போதும் முன் நிற்கிறது.

மாவட்டப் பரப்பு பெரிதாக இருக்கும்போது மக்களை நிருவாகம் அணுகுவதற்கும், மக்கள் நிருவாகத்தை அணுகுவதற்கும் அதிக காலம் பிடிக்கும். எனவே, மக்களுக்கும் நிருவாகத்துக்கும் இடையே நெருக்கத்தை வளர்க்க மாவட்டங்கள் சிறியவையாகவே இருக்க வேண்டியது அவசியம்.

இந்த அவசியத்தை நன்கு உணர்ந்த நான் கிருஷ்ணகிரியைத் தலைநகராகக் கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தை உருவாக்கினேன்.

**கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் புதியதாகத் துவக்கி வைத்து உரையாற்றிய போது அரசு அலுவலகங்கள் பல்வேறு இடங்களில் வாடகைக் கட்டடங்களில் செயல்படுவதால் மக்கள் சிரமத்திற்கு உள்ளாகக் கூடாது என்ற நோக்கில் மாவட்டப் பெருந்திட்ட வளாகம் அமைப்பதாக அறிவித்து அதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தேன். அதன்படி கிருஷ்ணகிரி – பெங்களூர் நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள 136.35 ஏக்கர் நிலத்தில் பெருந்திட்ட வளாகம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, 10 கோடி ரூபாய் செலவில் கட்டுமானப் பணிகளைத் துவக்க இன்று அடிக்கல் நாட்டுவதில் நான் பெருமிதம் கொள்கின்றேன்.**

இந்தப் பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட ஆட்சியரின் இல்லம் மற்றும் முகாம் அலுவலகம், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், காவலர் அணிவகுப்பு மைதானம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், பிற அரசு அலுவலகங்கள், சுற்றுலா இல்லம், குடியிருப்புகள் போன்றவை கட்டப்படும். இதனால் பொதுமக்கள் வெவ்வேறு இடங்களில் அரசு அலுவலகங்களைத் தேடி அலைய வேண்டிய அவசியம் இருக்காது; ஒரே இடத்தில் பல்வேறு அலுவலகங்களில் தங்களது பணிகளை நிறைவேற்றிக் கொள்ள இயலும் என்பதை மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் தெரிவித்துக் கொள்கிறேன். முதல் கட்டமாக, 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகமும், 2 கோடி ரூபாய் மதிப்பில் சுற்றுலா இல்லமும், 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாவட்ட ஆட்சியர் இல்லம் மற்றும் முகாம் அலுவலகமும் கட்டுவதற்கு இன்று அடிக்கல் நாட்ட உள்ளேன்.

9.2.2004 அன்று இதே இடத்தில் இம்மாவட்டத்தின் துவக்க விழா நடைபெற்றது. அன்றைய தினம் அந்த விழாவில், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 23 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்ட வளர்ச்சிப் பணிகளைத் துவக்கி வைத்தும், 25 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பில் வளர்ச்சிப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியும் உள்ளேன்.

**மீண்டும் இன்று, இந்த இனிய விழாவில் கிருஷ்ணகிரி மாவட்டத்து மக்கள் பயன் அடையும் வண்ணம், பல்வேறு அரசுத் துறைகள் சார்பாக, 26 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 1,200 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைக்கிறேன்.**



59 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 548 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்ட உள்ளேன். மேலும் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பாக, 13 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை 10,754 பயனாளிகளுக்கு வழங்க உள்ளேன். ஆக மொத்தம், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 99 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை நான் இன்று வழங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டங்களுக்கு நேரில் சென்று நான் மக்களைச் சந்திப்பதைக் கூடத் தாங்கிக் கொள்ள இயலாத மகானுபாவர்கள் தமிழகத்தில் உண்டு. இவர்களைப் பற்றி நினைக்கின்ற போது ஒரு கதை தான் எனக்கு நினைவுக்கு வருகிறது.

பாவம் செய்த ஒருவன் நரகத்துக்கு அனுப்பப்பட்டான். நரகப் பள்ளத்தாக்கில் இருந்து வந்த அவன் நடந்து கொண்டிருந்தபோது, பாதையில் ஒரு சிலந்திப் பூச்சி இருந்ததைப் பார்த்து, அதை மிதிக்காமல் கவனமாகச் சென்றான். பிற உயிரைக் கொல்லாமல் இருந்ததற்காக அவன் கணக்கில் கொஞ்சம் புண்ணியம் சேர்ந்தது. உடனே அந்தப் புண்ணியத்திற்கான பயனும் கிடைத்தது. நரகத்தில் இருந்து மேலே வருமாறு அவனை மேலே இருந்து அழைத்தார்கள்!



'எப்படி மேலே ஏறி வருவது?' என்று அவன் கேட்டான்.

'இதோ தொங்குகிறது பார் சிலந்தி இழை; இதைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறி வா' என்று சொன்னார்கள்.

அவனுக்கோ அவ நம்பிக்கை! 'இவ்வளவு மெல்லிசாக இருக்கும் இந்தச் சிலந்தி இழை நம்மைத் தாங்குமா? கையால் தொட்டதும் அறுந்து போகுமே இதை நம்பி எப்படி மேலே ஏறிச் செல்வது?' என்று யோசிக்கத் தொடங்கினான்.

அவனது தயக்கத்தைப் பார்த்து மேலே இருந்தவர்கள் 'தைரியமாக வா; இழை அறுந்து விடாது' என்று சொன்னார்கள்.

அவனும் சிலந்தி இழையைப் பிடித்து மேலே பாதி வரை ஏறி வந்து விட்டான். அப்போது திடீரென்று கீழே பார்த்தான். அவனைப் போலவே பல பேர் சிலந்தி இழையைப் பிடித்து மேலே வந்து கொண்டிருந்தார்கள்.

அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'புண்ணியம் செய்தது நான்! பலனைப் பெற வேண்டியது நான்! இவர்கள் எல்லாரும் வரப் பார்க்கிறார்களே!' என்று கோபித்து, கீழே இருந்தவர்களைக் காலால் எட்டி



உதைத்தான். எல்லாரும் கீழே விழுந்தார்கள்; அவனும் கூட திரும்பவும் நரகத்துக்குள் விழுந்து விட்டான். என்ன காரணம்?

எப்போது அவன் பொறாமைப்பட்டானோ, எப்போது சுயநலத்தால் மற்றவர்களை எட்டி உதைத்துக் கீழே தள்ளினானோ, அப்போதே சிலந்தி இழையும் அறுந்து விழுந்தது. அந்தச் சுயநலக்காரனும் கீழே விழுந்தான்.

சுயநலக்காரர்களுக்குப் பொறாமை எப்போதும் அதிகம். அப்படிப்பட்ட சுயநலக்காரர்களுக்குத் தமிழ்நாட்டில் பஞ்சமே இல்லை. அவர்களிடம் பொறாமைக்கும் பஞ்சம் இல்லை.

அப்படிப்பட்ட பொறாமைக்காரர்களின் வஞ்சகங்களை எல்லாம் பொருட்படுத்தாமல், உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் மாவட்டந்தோறும் பயணம் செய்து, அந்தந்தப் பகுதிகளின் சிறப்புத் தன்மைகளுக்கு ஏற்பத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் தட்ப வெப்ப நிலை மற்றும் மண் வளம் போன்றவை தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடிக்கு மிகவும் உகந்ததாக உள்ளன. இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்ப்பதில் மலர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஓசூர், தென்கனிக் கோட்டை பகுதிகள் மலர்ச் சாகுபடிக்கு மிகவும் ஏற்றவையாக உள்ளன. இங்குள்ள 14 தனியார் மலர் உற்பத்தி நிலையங்களில், பசுமை இல்லங்களில் ரோஜா, கார்னேஷன், ஜெர்பரா (Gerbera) போன்ற கொய் மலர்கள் உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் ஆண்டுக்கு 25 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கிறது. இம்மாவட்டத்தில் மலர் உற்பத்தியால் கிடைக்கும் பொருளாதார வாய்ப்பைக் கருத்தில் கொண்டு, ஓசூரைத் தலைமையிடமாகக் கொண்டு மலர் ஏற்றுமதி மண்டலத்தை அமைக்க நான் உத்தரவிட்டேன். அதன் அடிப்படையில், ஓசூர் ஏற்றுமதி மண்டலத்தில் 'டான்ஃப்ளோரா' அடிப்படைக் கட்டமைப்புப் பூங்கா – TANFLORA Infrastructure Park - 245 ஏக்கர் பரப்பில் நிறுவிட, 25 கோடி ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பூங்காவில் தனியார் மலர்ச் சாகுபடி நிறுவனங்கள் 50 எக்டேர் பரப்பில் பசுமை இல்லங்கள் அமைத்து ரோஜா மலர்களை உற்பத்தி செய்து 'டான்ஃப்ளோரா' நிறுவனத்தின் மூலம் ஏற்றுமதி செய்யும்.

'டான்ஃப்ளோரா' நிறுவனம் 3 எக்டேர் பரப்பளவில் மாதிரி அலகுகள் – model units – அமைக்க உத்தேசித்து, தற்போது ஒரு எக்டேர் பரப்பில் பணிகள் முடிக்கப்பட்டு ரோஜா மலர்கள் உற்பத்தி செய்யப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

'டான்ஃப்ளோரா' நிறுவனத்தின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 6 கோடியே 75 இலட்சம் பூக்கள் உற்பத்தி

செய்து ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஓசூர் மற்றும் தென்கனிக்கோட்டையிலுள்ள தனியார் கொய் மலர்ச் சாகுபடியாளர்களிடமிருந்து ஆண்டிற்கு 2 கோடியே 70 இலட்சம் மலர்கள் ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் இம்மாவட்ட மக்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். எனவே இங்குள்ள மலர்ச் சாகுபடியாளர்கள் ஏற்றுமதி வாய்ப்புள்ள மலர்களை உற்பத்தி செய்து பயன்பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மலர்ச் சாகுபடியில் மிக்க சிறப்புடன் விளங்கும் இந்த மாவட்டத்தில், ஓசூர் நகரத்தில் நடைபெற இருக்கும் 1–ஆவது சர்வதேச மலர்க் கண்காட்சியினை Video Conferencing மூலமாக இன்று துவக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அனைத்துக் குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது எனது அரசின் குறிக்கோளாகும். கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 10 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு குடிநீர்த் திட்டப் பணிகள் என்னால் ஏற்கெனவே முந்தைய அரசு விழாக்களில் திறந்து வைக்கப்பட்டன. இன்றைய தினம் மேலும் 12 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்காக அவற்றைத் திறந்து வைப்பதிலும், 2 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பில் கிருஷ்ணகிரி நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கும், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சின்ன காவாப்பட்டி மற்றும் 9 வழியோர கிராமங்களின் கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுவதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**உழைப்பும், உள்ளத்தில் ஊக்கமும் இருந்தால் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி பெறலாம். அப்படி வெற்றி பெற்றவர்களுடைய வரலாறுகள்தான், இன்றைக்கு உலக வரலாற்றையே உருவாக்கி இருக்கின்றன.**

அமெரிக்க குடியரசுத் தலைவராக இருந்த ஆப்ரகாம் லிங்கன் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்.

அவருக்குப் படிப்பதில் அபார ஆர்வம் இருந்தது. ஆனால் புத்தகம் வாங்கக் கூட அவரிடம் பணம் இல்லை. யாரிடமாவது புத்தகத்தை இரவல் வாங்கிப் படிப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஒரு நாள், ஒரு நண்பரிடம் புத்தகம் வாங்கி பின்னால் படிக்கலாம் என்று வீட்டுக் கூரையில் செருகி வைத்திருந்தார். அன்றைக்குத் திடீரென்று மழை பெய்தது. புத்தகம் முழுவதும் நனைந்து பாழாய்ப் போய் விட்டது. நண்பரிடம் ஆப்ரகாம் லிங்கன் விஷயத்தைச் சொன்ன போது, நண்பருக்குப் பயங்கரமான கோபம் வந்தது. 'புத்தகத்திற்குரிய விலையைக் கொடு' என்று கேட்டார். 'கொடுப்பதற்குப் பணம் இல்லை' என்று மிகுந்த வருத்தத்தோடு லிங்கன் சொன்னார். "அப்படியானால் என் மாடுகளுக்குப் புல் அறுத்துக் கொண்டு வந்து போடு" என்று நண்பர் சொன்னார்.

அவ்வாறே, 5 நாட்கள் தொடர்ந்து புல் அறுத்துக் கொண்டு வந்து மாட்டுத் தொழுவத்தில் போட்டார் லிங்கன். அவரைப் பார்த்துப் பரிதாபப்பட்ட நண்பர், "போதும், இனிமேல் புல் அறுக்க வேண்டாம்" என்றாராம்.

இப்படி, ஒரு புத்தகம் வாங்கக் கூட இயலாத வறுமையில் இருந்த ஆப்ரகாம் லிங்கன்தான், அமெரிக்க நாட்டின் இணையில்லாத குடியரசுத் தலைவராக ஆனார் என்பது வரலாறு.

எனவே, எந்தத் தடையையும் தடையாக நினைக்காமல் அதை முன்னேற்றத்திற்கான படி என்று நினைத்து ஊக்கத்தோடு உழைத்து வாழ்வில் நீங்கள் உயர்வு அடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை இன்றைய தினம் நானே எல்லாப் பயனாளிகளுக்கும் எனது கரங்களாலேயே வழங்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும் நேரம் போதாது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, மேடையில் 10 பயனாளிகளுக்கு மட்டும் நான் இந்த உதவிகளை வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அதிகாரிகளும், இங்கேயே இப்போதே உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயனாளிகள் அனைவரும் இந்த உதவிகளின் அடிப்படையில் சிறப்பாகத் தொழில் செய்து வாழ்க்கையில் நலமும், வளமும் பெற்றிட வேண்டும் என்று என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழா சீரும் சிறப்புமாக அமைந்திடப் பணியாற்றிய கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், திரு. மங்கத் ராம் சர்மா அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களை உரித்தாக்கிக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித்தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

15.12.2004 அன்று நடைபெற்ற
கிருஷ்ணகிரி மாவட்ட அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரை

# இந்தியாவிலேயே முதன்முதலாக 365 நாட்களும் இயங்கும் கடவுச்சீட்டு மையங்கள்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்




**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 10.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை – பூக்கடை, அண்ணா நகர் மற்றும் அடையாறு காவல்துறை துணை ஆணையாளர் அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட கடவுச் சீட்டு மையங்களைத் (District Passport Centres) தொடங்கி வைத்தார்கள்.

இந்த மூன்று மாவட்ட கடவுச்சீட்டு மையங்களும் கடவுச்சீட்டு (Passport) தேவைப்படும் பொதுமக்களுக்குத் தொடர்ந்து, தொய்வின்றி சேவையாற்றும் வகையில் ஆண்டின் 365 நாட்களும் இயங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, இந்த மையங்கள் விடுமுறை ஏதுமின்றி ஆண்டின் அனைத்து நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை இயங்கும்.

வருடத்திற்கு 365 நாட்களும் இயங்கும் மாவட்ட கடவுச்சீட்டு மையங்கள் இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில்தான் அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் கடவுச்சீட்டு பெறுவதில் உள்ள சிரமங்களைக் களைவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்கி, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 2002–ஆம் ஆண்டிலேயே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில், மாவட்ட கடவுச்சீட்டு மையங்கள் தொடங்கப்பட்டன. சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகரங்களில் மத்திய அரசின் பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகம் வாயிலாக இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

சென்னை பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகத்தில், தற்போது ஒவ்வொரு மாதமும் ஏறத்தாழ 4,000 முதல் 4,500 வரையிலான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவை ஆய்வு செய்து சரி பார்க்கப்படுவதற்காக சென்னை மாநகரக் காவல் துறைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்வளவு விண்ணப்பங்களும் ஒரே இடத்தில் பெறப்படுவதால், பொது மக்களுக்கு ஏற்படும் சிரமத்தைக் குறைக்கும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலி**தா அவர்களிடம் **6.12.2004** அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் (TAMIN) சார்பில் **2003–2004–**ஆம் ஆண்டுக்கான ஈவுத் தொகை (Dividend) **54** இலட்சம் ரூபாய் மற்றும் நியமனக் கட்டணம் (Nomination Charges) **11.54** கோடி ரூபாய் ஆக மொத்தம் **12** கோடியே **8** இலட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் வழங்கினார். அப்போது, தமிழக அரசின் தொழில் துறைச் செயலாளர், திரு. ரமேஷ்ராம் மிஷ்ரா இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. என். கோவிந்தன் இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

வகையில் சென்னை மாநகரக் காவல் துறை, சென்னை பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகத்துடன் இணைந்து, சென்னை மாநகரில் பூக்கடை, அண்ணாநகர் மற்றும் அடையாறு ஆகிய மூன்று இடங்களில் கடவுச் சீட்டு விண்ணப்பங்களைப் பொது மக்கள் சமர்ப்பிக்கும் வகையில், இம் மூன்று இடங்களிலும் உள்ள காவல் துறை துணை ஆணையாளர் அலுவலகங்களில் மாவட்ட கடவுச்சீட்டு மையங்களை அமைத்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், **10.12.2004** அன்று தலைமைச் செயலகத்தில் இந்த மூன்று மாவட்ட கடவுச்சீட்டு மையங்களைத் திறந்து வைத்து, மத்திய அரசின் பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகமும், மாநில அரசின் சென்னை மாநகரக் காவல் துறையும் ஒருங்கிணைந்து செயல்படுத்தும் இந்தப் புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

பொதுமக்கள் தங்களது கடவுச்சீட்டு விண்ணப்பங்களை, வீண் அலைச்சல் இன்றி, இனி தாங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள கடவுச்சீட்டு மையங்களிலேயே சமர்ப்பிக்கலாம். இதன் மூலம், விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் இடங்களில் நெரிசல் வெகுவாகக் குறைவதுடன், விண்ணப்பதாரர்கள் வெகு நேரம் காத்திருக்க வேண்டிய தேவையும் இருக்காது.

சென்னை மாவட்ட கடவுச்சீட்டு மையங்கள் ஒவ்வொன்றும் ஒரு உதவி ஆணையாளரின் பொறுப்பில் இயங்கும். பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகத்தால் திறம்பட பயிற்சி அளிக்கப்பட்ட பெண் காவலர்கள் இம் மையங்களில் பணியாற்றுவார்கள். பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகமும், சென்னை மாநகரக் காவல் துறை அலுவலகமும் கடவுச்சீட்டுத் தொடர்பான பணிகளை மேற்கொள்ள எந்நேரமும் தகவல் தொடர்பு நிலையத்தின் மூலம் கணினி இணைப்பில் இருக்கும் என்பது இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் ஆகும்.

ஒரு மத்திய அரசு அமைச்சக அலுவலகமும், மாநில அரசின் கீழ் செயல்படும் காவல் துறையும் எந்த நேரமும் கணினி அமைப்பிலிருந்து தகவல்களைப் பரிமாறிக் கொண்டு, பொது மக்களுக்கு சேவையாற்றுவது என்பது இதுவே முதன் முறையாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், e-Governance எனும் மின் ஆளுமையில் காட்டி வரும் அளவற்ற ஈடுபாட்டின் காரணமாகவே இது சாத்தியமாகியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள சென்னை மாவட்ட கடவுச்சீட்டு மையங்கள் மூலம் புதிய கடவுச்சீட்டுகள் பெறவும், ஏற்கெனவே பெற்றுள்ள கடவுச் சீட்டுகளைப் புதுப்பித்துக் கொள்ளவும் முடியும். விசா அங்கீகாரம் உள்ள கடவுச் சீட்டுகளையும் இம்மையங்களிலேயே புதுப்பித்துக் கொள்ளலாம்.

இந்த நிகழ்ச்சியில், தமிழக அரசின் உள்துறை செயலாளர் திருமதி. ஷீலா ராணி சுங்கத், இ.ஆ.ப., அவர்கள் காவல் துறை தலைமை இயக்குநர் திரு. ஐ.கே. கோவிந்த், இ.கா.ப., அவர்கள், சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளர் திரு. ஆர். நடராஜ், இ.கா.ப., அவர்கள் பிராந்திய கடவுச் சீட்டு அலுவலர் திரு. மதிவதனன் மற்றும் இணை ஆணையர் திரு. சி. சைலேந்திர பாபு ஆகியோர் உடனிருந்தனர். ✱

# யானைகள் புத்துணர்வு முகாம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவுப்படி, இந்த ஆண்டுக்கான தமிழ்நாட்டிலுள்ள யானைகள் புத்துணர்வு முகாம் முதுமலை வனவிலங்குச் சரணாலயத்தில் 18.11.2004 அன்று தொடங்கியது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.சி.ராமசாமி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு. ஆர்.வைத்திலிங்கம் மற்றும் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. அ.மில்லர் ஆகியோர் பங்கேற்றனர். 18.11.2004 அன்று தொடங்கப்பட்ட இந்த முகாம் 4.1.2005 வரை மொத்தம் 48 நாட்கள் நடைபெறும்.

தமிழகத்தின் திருக்கோயில்கள், மடங்கள், தனி நபர்கள் மற்றும் வனத்துறை பராமரிப்பில் உள்ள அனைத்து யானைகளின் உடல் நலமும், மன நலமும் பேணப்படும் வகையில் ஆண்டுக்கு ஒரு முறை, ஒரு மாத கால அளவிற்கு நல வாழ்வு முகாம் நடத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2003–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவுப்படி, தமிழக அரசின் இணையற்ற திட்டமான, யானைகளுக்கான புத்துணர்வு முகாம் 2003–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16–ஆம் நாள் தொடங்கி ஒரு மாத காலம் நடைபெற்றது. இந்த முகாமில் மொத்தம் 100 யானைகள் கலந்து கொண்டன. வழக்கமாக ஆற்றிவரும் வேலை பளுவிலிருந்து முழு ஓய்வும், ஒரு மாத காலம் வழங்கப்பட்ட ஊட்டச் சத்துள்ள உணவும் அந்த யானைகளுக்குப் புத்துணர்ச்சி அளித்ததுடன், அவை மீண்டும் தங்களது வழக்கமான பணிகளை உற்சாகத்துடன் மேற்கொள்ள வகை செய்தன.

கடந்த ஆண்டில் நடைபெற்ற யானைகளுக்கான இந்தப் புத்துணர்வு முகாம் மாபெரும் வரவேற்பைப் பெற்றதையடுத்து, இந்த ஆண்டும் (2004) யானைகளுக்கான இத்தகைய புத்துணர்வு முகாமை நடத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள். இதன்படி முதுமலை வன விலங்கு சரணாலயம் தெப்பக்காட்டில் யானைகளுக்கான புத்துணர்வு முகாம் தொடங்கப்பட்டது.

18.11.2004 அன்று தொடங்கப்பட்ட இந்த முகாமில் பங்கேற்கும் யானைகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 16.11.2004 மற்றும் 17.11.2004 ஆகிய நாட்களில் லாரிகள் மூலமாக மிகுந்த பாதுகாப்புடன் முகாமிற்கு அழைத்து வரப்பட்டன. இந்த முகாமில் திருக்கோயில் யானைகள், மடங்கள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான யானைகள், வனத் துறையைச் சேர்ந்த யானைகள் ஆக மொத்தம் 112 யானைகள் பங்கேற்றுள்ளன.



கடந்த ஆண்டைப் போலவே, முகாமில் பங்கேற்றுள்ள அனைத்து யானைகளுக்கும், உடல் நலமும், மன நலமும் பேணும் வண்ணம் அவற்றுக்கு முழுமையான ஊட்டச் சத்து கொண்ட உணவினை அளித்து, அவற்றுக்கு அமைதியும், ஓய்வும் அளிக்கும் வகையில் பராமரிக்க, சிறப்பான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

★ ★ ★

# தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகள் பிரகாசமடைந்துள்ளன!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்



மத்திய திட்டக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர், டாக்டர் எம்.எஸ். அலுவாலியா அவர்களே!

மத்திய திட்டக் குழுவின் மாண்புமிகு உறுப்பினர்களே! மூத்த அதிகாரிகளே!

திருத்தி அமைக்கப்பட்டுள்ள மத்திய திட்டக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2005–2006ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் ஆண்டுத் திட்டம் குறித்து விவாதித்து, முடிவு செய்வதற்காக நாம் இங்கு கூடியுள்ளோம். பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் குறித்த இடைக்கால மதிப்பீடு பற்றி சில கருத்துகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள நான் ஆசைப்படுகிறேன். பெங்களூரில் அண்மையில் நீங்கள் கூட்டிய கூட்டத்தில், இதனை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் எண்ணியிருந்தேன். ஆனால், அப்போது தமிழ்நாட்டின் சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நடைபெற்றதால் அதில் கலந்துகொள்ள வேண்டிய தவிர்க்கவியலாத சூழ்நிலை எனக்கு ஏற்படவே, பெங்களூரில் நடைபெற்ற கூட்டத்தில் என்னால் பங்கேற்க இயலாமல் போய்விட்டது.

பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் குறித்த இடைக்கால மதிப்பீட்டின் அடிப்படையில் பார்க்கும்போது, நாம் வளர்ச்சி விகிதத்தை மேலும் அதிகரித்து, வறுமையை விரைந்து குறைக்க முயலவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

அந்நியச் செலாவணி இருப்பின் ஒரு பகுதியை, மிகுந்த கவனத்துடன் பயன்படுத்தி அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள வளர்ச்சிப் பணிகளை மீண்டும் நாம் துரிதப்படுத்த வேண்டும் என்ற துணைத் தலைவர் அவர்களின் கருத்தை நான் வரவேற்கிறேன். இக் கருத்தை மேலும் ஆராய்ந்து எதிர்காலத்தில் வளர்ச்சிப் பணிகள் மேலும் துரிதமாக நடைபெறத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் முதலீடு செய்ய விரும்பும் மாநிலங்களுக்கு இந்நிதியை அளிக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

2005–2006ஆம் ஆண்டு பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நான்காவது ஆண்டாகும். பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கண்காணிக்கத்தக்க இலக்குகளை எய்துவதிலும், பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக நான் நிர்ணயித்த ரூ.40,000 கோடி என்ற திட்டமிட்ட ஒதுக்கீட்டை எய்துவதிலும் தமிழ்நாடு சிறப்பாகச் செயல்பட்டு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. 2000–2001ஆம் ஆண்டு இறுதியில் இம் மாநிலத்தைக் கவ்வியிருந்த சிக்கலான நிதி நெருக்கடியிலிருந்து மீண்டு, இன்றைக்கு நாங்கள் இந்நிலையை எட்டியுள்ளோம் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்பதில் ஐயமில்லை.

ஒவ்வோராண்டுக்கும் வரையறுக்கப்படும் திட்ட ஒதுக்கீட்டை நாங்கள் எய்தியுள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டை, தொடர்ந்து எய்திவரும் ஒரு சில மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்று என்பதை நீங்கள் அறிவீர்கள். இதனை உறுதிப்படுத்த நாங்கள் 2003ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை பற்றிய பொறுப்புடைமைச் சட்டத்தைச் செயல்படுத்தியுள்ளதுடன், இச்சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள நடுத்தர கால நிதி சீரமைப்புத் திட்டத்தையும் செயற்படுத்தி வருகிறோம். நாங்கள் சொன்னதைச் செய்வோம் என்பது உங்களுக்குத் தெரியும்.

பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட இடைக்கால மறு ஆய்வு, விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு நாம் புதிய உத்திகளை வகுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இதனையும் நாங்கள் செயல்படுத்தத் தொடங்கிவிட்டோம். இதற்கான உத்தியில், வேளாண்மை வளர்ச்சிக்குப் புத்தெழுச்சி ஊட்டுதல் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் விரைவான வளர்ச்சி காண்பதற்கு ஏதுவான முதலீட்டுச் சூழலை உருவாக்குதல் நிதி நிலைமையைச் சீரமைத்து நிலைப்படுத்தல், இவற்றுக்கெல்லாம் மேலாக வறுமைக் குறைப்பை உறுதி செய்தல் ஆகியவையும் அடங்கும். இம் முக்கிய நோக்கங்களைக் கருத்தில் கொண்டு எங்களுடைய பொருளாதார உத்திகளைச் சீரமைத்துள்ளோம்.

முதல்நிலைத் துறைகளுக்கு புதிய உத்வேகம் அளிக்க வேண்டியது நமது முதலாவதும் தலையாயதுமான பணியாகும். தமிழ்நாடு தொடர்ந்து மூன்றாண்டுகள் வறட்சியைச் சந்திக்க நேர்ந்தது. இதனால், விளைச்சலும் வருவாயும் கடுமையாகக் குறைந்தன. இந்த ஆண்டில், இதுவரையில், வடகிழக்குப் பருவ மழை நன்கு பெய்துள்ளதால், முதல்நிலைத் துறைகள் புத்தெழுச்சி பெற்று நல்ல வளர்ச்சியை அடையும் என்று நம்புகிறோம். நபர் ஒருவருக்குக் கிடைக்கும் தண்ணீர் அளவு நமது நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் மிகவும் குறைவாக இருக்கிறது. இத்தகைய நிலையில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட வறட்சி மற்றும் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையின் பாதிப்பு ஆகியவற்றால் கிடைத்த அனுபவம் என்னை, நம்முடைய சாகுபடி உத்தியை மாற்றியமைக்கச் செய்தது. தண்ணீர் குறைவாகத் தேவைப்படுகிற சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு மற்றும் காட்டாமணக்கு போன்ற மாற்றுப் பயிர்களை பயிரிட வேண்டுமென்று நான் மிகவும் வலியுறுத்தி வருகிறேன். மற்றும் இதனோடு இணைந்து உயிரி எரிபொருள் தயாரிப்புத் திட்டத்திற்கும் நான் முக்கியத்துவம் அளித்து வருகிறேன். இந்தப் பயிர் பல்திறப்படுத்தல் திட்டத்தின் கீழ் தோட்டக்கலையில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு மதிப்புக் கூட்டலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

தற்போது தரிசாகவுள்ள சுமார் இரண்டு மில்லியன் எக்டேர் நிலத்தையும் நிரந்தரமாகத் தரிசாக இருக்கும் நிலங்களையும் படிப்படியாகச் சாகுபடியின் கீழ் கொண்டுவருவதற்காக தரிசு நில மேம்பாட்டு அடங்கல் திட்டம் ஒன்றையும் நான் தொடங்கி வைத்துள்ளேன். இவ்வாண்டில், இத்திட்டத்தின் கீழ் நல்ல முன்னேற்றம் ஏற்படும். முதல்நிலைத் துறைக்கான எங்களது புதிய உத்திகளில் பயிர்களைப் பல்திறப்படுத்தல், பண்ணை உற்பத்தியைப் பெருக்குவதற்கான புதிய தொழில்நுட்ப உத்திகள், புதிய நடைமுறைகளை விரைந்து ஏற்று பின்பற்றுவதற்காகத் தகவல் தொடர்பு உத்திகளை

உருவாக்குதல், கிடைக்கக்கூடிய தண்ணீரைத் திறமையாகப் பயன்படுத்துதல் மற்றும் மேம்பட்ட அங்காடி வாய்ப்புகள் ஆகியவை அடங்கும்.

போதிய நன்னீர் கிடைக்காதது, உற்பத்தி பெருக்கத்திற்கு ஒரு முக்கியத் தடையாக உள்ளது. தமிழ்நாடு, தனது மேற்பரப்பு நீர்வளம் முழுவதையும் பயன்படுத்தி விட்டது. எனவே, எந்தவொரு பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களையும் புதிதாக மேற்கொள்ள வாய்ப்பு இல்லை. இந்தப் பின்னணியில்தான் தமிழ்நாட்டில் அமைந்துள்ள பாரம்பரிய நீர் ஆதாரங்களைப் புதுப்பித்துச் சீரமைக்க இயலும் வகையில் விரைவுபடுத்தப்பட்ட பாசனப்பயன் திட்டம் தொடர்பான வழிகாட்டிக் குறிப்புகள் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று நான் மீண்டும் மீண்டும் கூறி வருகிறேன்.

16.9.2004 அன்று நான் மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்தபோது அவரிடமும் நான் இது குறித்து விவாதித்துள்ளேன். மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்கள், இதில் தலையிட்டு, விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்பாட்டுத் திட்டத்தின்கீழ் (AIBP) தற்போது நடப்பிலுள்ள வழிகாட்டிக் குறிப்புகள் காரணமாக, தண்ணீர்ப் பற்றாக்குறையால் வாடும் தமிழ்நாடு போன்ற மாநிலம் புறக்கணிக்கப் படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட வேண்டுமென்றும், கேட்டுக் கொள்கிறேன்.

வழிகாட்டிக் குறிப்புகள் திருத்தியமைக்கப் படுவதோடு, இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கு ஆண்டு ஒன்றுக்கு குறைந்தது ரூ.200 கோடியாவது ஒதுக்கப்பட வேண்டுமெனவும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நதிகள் இணைப்புத் திட்டத்தை விரைவில் தொடங்க வேண்டுமென்பதில் நானும் மிகவும் ஆர்வமாக இருக்கிறேன். இப்பணியை தீபகற்ப நதிநீர்க் கட்டமைப்பிலிருந்து தொடங்கலாம். முதலாவதாக, மகாநதியை, தமிழ்நாட்டிலுள்ள குண்டாறு நதியுடன் இணைக்கலாம். இத்தகையத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் சீன நாடு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது.

உயிரி எரிபொருள் திட்டத்திற்கு ஆக்கம் அளித்து பயிர் பல்திறப்படுத்தல் திட்டத்திற்கு ஊக்கமளிக்க வேண்டியதன் அவசியத்தையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உயிரி எரிபொருள் உற்பத்தியை ஊக்குப்படுத்த ஊக்க உதவித் தொகுப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென நான் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குக் கடிதமெழுதியுள்ளேன். இத்திட்டத்திற்கான தொழில் நுட்பம் மற்றும் மூலதனப் பொருள்களின் இறக்குமதி குறித்த தீர்வை விதிப்பிலிருந்து விலக்களித்தல்; உயிரி எரிபொருள் தொழிலை மின் உற்பத்தித் துறையைப் போன்று அடிப்படைக் கட்டமைப்பு வசதித்துறைக்கு நிகராகக் கருதி அவற்றிற்கு அளிக்கப்படும் அதே போன்ற சலுகைகளை அளித்தல் உயிரி எரிபொருளுக்கு மத்திய ஆயத்தீர்வை விதிப்பிலிருந்து விலக்கு அளித்தல் மற்றும் இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருள்களுக்கு இறக்குமதித் தீர்வையிலிருந்து விலக்களித்தல் ஆகியவை இதில் அடங்கும்.

உயிரி எரிபொருள் திட்டத்திற்கு உயரளவு ஊக்கமளித்து, பெட்ரோலியப் பொருட்களின் விலை அடுத்தடுத்து உயர்ந்துகொண்டே போவதால் ஏற்படும் நெருக்கடிக்கு, நீண்டகாலத் தீர்வு காணப்பட வேண்டும். விரைவிலே, ஊக்க உதவித் தொகுப்புத் திட்டம் ஒன்றை அறிவிக்க ஏதுவாக, இது குறித்து முனைப்புடன் பரிசீலிக்க வேண்டுமாய், நான் மத்திய திட்டக் குழு துணைத் தலைவரை கேட்டுக் கொள்கிறேன்.

உற்பத்தித் துறைக்குப் புதிய உத்வேகத்தை அளிக்க வேண்டும் என்று அண்மையில் நீங்கள் வெளியிட்டுள்ள கருத்தை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். தமிழ்நாட்டிற்காக, 2003ஆம் ஆண்டு புதிய தொழில் கொள்கை ஒன்றை நான் வகுத்துள்ளேன். மாநில அளவில் தொடங்கி சீர்திருத்தங்களை மேற்கொள்ள வகைசெய்யும் இக்கொள்கை தரமான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், போதிய அளவு மின்சக்தி அதன் நம்பகத் தன்மை மற்றும் அதன் தரம் செயலாற்றலை ஊக்குவிக்கும் தொழிலாளர் சீர்திருத்தங்கள் நடைமுறை கால அளவையும் செலவையும் குறைக்கின்ற வகையில் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல், நிருவாகச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல், மாநில அளவில் வரி சீர்திருத்தங்கள் செய்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இந்த அம்சங்கள் ஒவ்வொன்றிலும் திட்டவட்டமான முன்னேற்றம் கண்டு வருகிறோம். இச்சீர்திருத்தங்களால் நல்ல பயன்களும் விளைந்துள்ளன என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகச் சந்தையில் மற்ற நாடுகளோடு நாம் போட்டியிட வேண்டுமானால், அதற்கு உலகத் தரத்திலான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மிகவும் அவசியமாகும். பொதுத் துறையில் தொடர்ந்து பெரிய அளவில் முதலீடுகள் செய்யப்பட வேண்டியது அவசியமே என்றாலும் பொதுத்துறை தனியார் துறை கூட்டுப் பங்கின் மூலம் முதலீடுகளையும் நாங்கள் ஊக்குவித்து வருகிறோம். இதுபோன்ற பல முன் முயற்சிகளில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. மாநில அரசு

நாட்டிலேயே மிக அதிகபட்சமாக, தமிழ்நாட்டில்தான் மொத்த மின்சாரத்தில், 61 சதவிகிதம் அளவை மானிகள் பொருத்தப்பட்டு வழங்கப்படுகின்றன. மின் அனுப்புகை மற்றும் மின் விநியோகம் வகையிலான இழப்புகள், நாட்டிலேயே இங்குதான் மிகவும் குறைவு. இவ்வாறு சாதனை படைக்கப்பட்டிருந்தும், விரைவுபடுத்தப்பட்ட மின் சக்தி மேம்பாட்டுச் சீர்திருத்தத் திட்டத்தின் (APDRP) கீழ் வழங்கப்படும் நிதியுதவி கணிசமாகக் குறைக்கப்பட்டிருப்பது எனக்கு வியப்பை அளிக்கிறது.



மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் பெறுகின்ற கடன்களுக்கு உச்சவரம்பு விதித்து பொதுத் துறை நிறுவனங்களின் முதலீடு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய கடன் உச்சவரம்பைக் கணக்கிடுவதில் ஒளிவுமறைவற்ற தன்மையும் ஒரு தெளிவும் இருக்க வேண்டும். மேலும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் முதலீடு செய்யவும் போதிய வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்.

மின் துறையைப் பொறுத்தவரையில், நீங்கள் சற்று கவலை கொண்டிருப்பதை நான் அறிவேன். தமிழ்நாடு மின் வாரியம், மேலிருந்து கீழ் வரை நன்கு ஒருங்கிணைந்த கட்டமைப்பைக் கொண்ட ஒரு நிறுவனமாகும். மின் பயனீட்டாளர்களுக்கு, நம்பகமான, தரமான மின் சக்தியை வழங்கி வருகின்ற ஒரு நிறுவனம் என்ற தனிச் சிறப்பு இதற்கு உண்டு.

இந்நிதியுதவியை மீண்டும் பழைய அளவுக்கே வழங்கிட வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

வெவ்வேறு மின் பயனீட்டாளர்களுக்கான மின் கட்டணங்களை நிர்ணயித்தல், கட்டுப்பாடுகளை அகற்றி போட்டியை அறிமுகம் செய்தல், ஒரே படித்தான மின் கணக்கிடு முறை போன்ற மின் துறை தொடர்பான பிரச்சினைகள் அனைத்துமே சிக்கலானவையாகும். தொடர்ந்து நிலவிய வறட்சியையும், தண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாக விளைச்சல் வெகுவாகக் குறைந்ததையும் கருத்திற்கொண்டு பண்ணைத் துறையைப் போற்றிப் பாதுகாத்து சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். நாளாவட்டத்தில், தேசிய அளவில் உண்மையான கருத்தொற்றுமையை உருவாக்க இயலும் வகையில், துணைத்தலைவர் அவர்கள், தனது செல்வாக்கைப் பயன்படுத்தி மின் துறை தொடர்பான சிக்கல் வாய்ந்த பிரச்சினைகள் அனைத்தையும் குறித்து

கலந்தாய்வு நடத்துவதற்கான முன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

மிகச் சிறந்த திறமையை ஈர்க்கும் உலகின் மிகச் சிறந்த மாநகரங்களின் வரிசையில் சென்னைப் பெருநகரையும் சேர்க்க வேண்டுமென்பது என் அவா. இந்நோக்கத்திற்காகவே, சென்னைப் பெருநகருக்காக 2003–2004ஆம் ஆண்டில், ரூ.18,000 கோடி மூலதனச் செலவில், பத்தாண்டு முதலீட்டுத் திட்டம் ஒன்றை நான் தொடங்கினேன். இது நல்ல பயனை அளித்துள்ளது. இது குறித்து மீண்டும் புதியதாக ஒரு மதிப்பீடு செய்ததில் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிப் பணிகள் இன்னும் நிறையவே உள்ளன என்று நான் அறிகிறேன். டில்லி, மும்பை மாநகரங்களின் தேவைகளை நீங்கள் பரிசீலித்து வருகிறீர்கள் என நான் கருதுகிறேன். சென்னைப் பெருநகரம் புறக்கணிக்கப் பட்டு விடக்கூடாது. இத்திட்டத்தில், சென்னைப் பெருநகரமும் சேர்க்கப்பட வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன். சென்னையில், உலகத் தரம் வாய்ந்த பன்னாட்டு விமான நிலையம் ஒன்றைப் புதிதாக அமைப்பதற்கான இசைவை இத்திட்டக் குழு அளிக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு, குறிப்பாக, சென்னை மாநகரம் தகவல் தொழில்நுட்ப முதலீடுகளை பெரிய அளவில் ஈர்த்து வருகிறது. இதனைச் சமாளிக்கும் வகையில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கான திட்டங்களில் பெருமளவில் நாங்கள் முதலீடு செய்து வருகின்றோம்.

இதற்கு அரசு, ஏராளமாக முதலீடு செய்ய வேண்டியிருக்கும் என்பது உங்களுக்கே தெரியும். ஆனால், துரதிருஷ்டவசமாக, இந்த முயற்சிக்கு தமிழ்நாட்டுக்கு, குறிப்பாக, சென்னைக்கு வருவாய் உள்ளிட்ட எந்தவிதமான உதவியும் கிடைப்பதில்லை. இத்தகைய மாநிலங்களுக்கு அவற்றின் சாதனையோடு இணைந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதி நிதி கிடைக்கின்ற வகையில் இதற்குத் தீர்வு ஒன்றைக் காண வேண்டுமென உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலம் முழுவதற்குமான கட்டமைப்புப் பணி (Statewide Area Network) உள்ளிட்ட மின் ஆளுகைத் திட்டங்களையும் நாங்கள் செயற்படுத்தி வருகிறோம். இந்த மின் ஆளுகை முன் முயற்சிகளுக்குச் சிறப்பு நிதியுதவி அளிக்க வேண்டுமென உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சமூக நலத் துறையில் தமிழ்நாடு ஆற்றியுள்ள பணி மகத்தானது. கடந்த பத்தாண்டுகளில், 7ஆம் நிலையிலிருந்து மனித வள மேம்பாட்டுக் குறியீடு கடிதே விரைந்து 3ஆம் நிலைக்கு உயர்ந்துள்ளது. தமிழ்நாடு, புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளை நோக்கிய பாதையில் வெற்றி நடை போடுகிறது என்பதை உங்களிடம் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி யடைகிறேன். சத்துணவுத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம், குழந்தைப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, மகப்பேற்றின் போது தாய் இறப்பு விகிதத்தைக் குறைத்தல் போன்ற சிறப்பு முயற்சிகளுக்கு நான் மிக உயரிய முக்கியத்துவம் அளித்து வருகிறேன். இவற்றில் நாங்கள் வேகமாக முன்னேறி வருகிறோம்.

தேசிய குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில், பள்ளிக் குழந்தைகளுக்கான மதிய உணவுத் திட்டமும் அடங்கும். இத்திட்டத்திற்குக் கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று நான் அறிகிறேன். இந்தத் திட்டங்களில் தமிழ்நாடு, உலக அளவில் புகழ்பெற்று முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. அனைத்து சத்துணவுத் திட்டங்களுக்கும் சேர்த்து ஆண்டு ஒன்றுக்கு நாங்கள் ரூ.844.97 கோடி செலவு செய்கிறோம். ஆனால், மத்திய அரசிடமிருந்து எங்களுக்குக் கிடைக்கின்ற நிதியுதவி, வெறும் ரூ.201.17 கோடிதான். தொடக்கப் பள்ளியை மட்டுமே எடுத்துக் கொண்டாலும் நமக்கு ஆகும் செலவு, ரூ.418.77 கோடியாகும். ஆனால், நமக்கு அரிசிக்காக மட்டும் ரூ.48.98 கோடி நிதியுதவி அளிக்கப்படுகிறது. எங்களுடைய ஒட்டு மொத்தத் திட்டங்களுக்கும் முழு நிதியுதவி அளிக்க வேண்டுமென உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய குறைந்தபட்ச பொதுத் திட்டத்தின்கீழ், சில திட்டங்களுக்கான நிதியுதவி அதிகரிக்கப்பட்டுள்ளது என்று நான் அறிகிறேன். நிதி ஒதுக்கீடு இரட்டிப்பாக்கப்பட்டுள்ள தேசிய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிற்கு அளிக்கப்படும் நிதியுதவியைக் கணிசமான அளவிற்கு அதிகரிக்க வேண்டுமென உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழும் நிதி ஒதுக்கீடு கணிசமான அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளதை அறிந்து

நான் மகிழ்ச்சி அடைகிறேன். எனவே, தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிற்கு மேலும் கூடுதலாக ரூ.100 கோடி நிதியொதுக்கம் செய்ய வேண்டுமென உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ரூ.80 கோடி அளவுக்கு நிலுவையாகவுள்ள கோரிக்கைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்கே இத்தொகை தேவைப்படுகிறது.

2001ஆம் ஆண்டு மே திங்களில் நான் பதவியேற்ற போது, மிகவும் தொய்வுற்றிருந்த தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகள் தற்போது மிகவும் பிரகாசமடைந்துள்ளன. இந்த முயற்சியில் எங்களுக்கு உதவியளிக்க வேண்டியது அவசியம். திறம்பட செயல்படும் மாநிலங்களை தண்டித்து, பின்தங்கியுள்ள மாநிலங்களுக்கு சமத்துவம் என்ற பெயரில் வெகுமதி அளிக்கின்ற ஒரு போக்கு காணப்படுகிறது. இந்த வாதம், இதற்கு முன்பு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கலாம். நன்கு செயல்படும் ஏனைய மாநிலங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் விதத்தில், பின்தங்கிய மாநிலங்களுக்கு மேலும் மேலும் நிதிகளைக் குவிப்பது, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஆகாது என்பது என்னுடைய ஆய்ந்த கருத்தாகும். சிறப்புத் திட்ட நிதியுதவி என்ற பெயரில் அதிகரிக்கப்பட ரூ.1,600 கோடியின் நேர்விலும் இதுதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திட்டமிட்ட வளர்ச்சி என்பது, நன்கு செயல்படுகின்ற மாநிலங்களை பின்னுக்கு இழுக்கும் ஒரு நடைமுறையாகி விடக்கூடாது. அத்தகைய மாநிலங்கள் முன்னேற்றமடைய, அவற்றின் செயல் திறனை மேம்படுத்துவதுடன் நிருவாகச் சீர்திருத்த நடவடிக்கைகளையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாட்டிற்கான, வெளிநாட்டு நிதியுதவி பெறும் சில திட்டங்களைப் பற்றி இங்கே நான் குறிப்பிட விழைகிறேன்.

2001ஆம் ஆண்டு மே திங்களில் நான் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, தமிழ்நாட்டில் புதிய திட்டங்கள் எவையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. நாங்கள்தான் பெருமுயற்சி எடுத்து, உலக வங்கியிடமிருந்தும் பிற பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்தும் நிதியுதவி பெற்று செயற்படுத்தத்தக்க பெரிய வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கியுள்ளோம்.

சுகாதார ஏற்பாட்டு முறை திட்டம், வறுமைக் குறைப்புத் திட்டம், ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டம் மற்றும் துப்புரவுத் திட்டம், நீர் ஆதாரங்கள் ஒருங்கிணைப்புத் திட்டம் II, தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் III, மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று திட்டம் III ஆகியவை இவற்றுள் அடக்கம். இந்நிதி ஒரு சில மாநிலங்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்ற வகையிலும், தமிழ்நாடு போன்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில் இந் நிதியைக் குறைக்கப்படுகின்ற வகையிலும் புதிய உத்தி ஒன்று திடீரென்று வகுக்கப்பட்டுள்ளது. இது மாற்றியமைக்கப் பட வேண்டும். அனைத்து மாநிலங்களுக்கும் சம வாய்ப்பு அளிக்கப்படுகின்ற வகையிலும் நன்கு செயல்படுகின்ற மாநிலங்களுக்கு நிதிகள் மறுக்கப்படாதிருக்கின்ற முறையிலும் இந்தக் கொள்கை திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

'கிழக்கு மலைத் தொடர்' மற்றும் 'கடலோரப் பகுதிகள்' மேம்பாட்டுக்காக, சிறப்பு நிதியுதவி கோரி, முறையே ரூ.411 கோடி மற்றும் ரூ.265.50 கோடி செலவிலான செயற்குறிப்புகளை, மத்தியத் திட்டக் குழுவிற்கு நாங்கள் ஏற்கெனவே அனுப்பியுள்ளோம்.

***சமூக நலத் துறையில் தமிழ்நாடு ஆற்றியுள்ள பணி மகத்தானது. கடந்த பத்தாண்டுகளில், 7ஆம் நிலையிலிருந்து மனித வள மேம்பாட்டுக் குறியீடு கடிதே விரைந்து 3ஆம் நிலைக்கு உயர்ந்துள்ளது. தமிழ்நாடு, புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளை நோக்கிய பாதையில் வெற்றி நடை போடுகிறது என்பதை உங்களிடம் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். சத்துணவுத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம், குழந்தைப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, மகப்பேற்றின் போது தாய் இறப்பு விகிதத்தைக் குறைத்தல் போன்ற சிறப்பு முயற்சிகளுக்கு நான் மிக உயரிய முக்கியத்துவம் அளித்து வருகிறேன். இவற்றில் நாங்கள் வேகமாக முன்னேறி வருகிறோம்.***

மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுப்பதுடன், எங்களுடைய இயற்கை ஆதாரங்களைப் பாதுகாக்கவும், இந்தப் பகுதிகளின் உயிரின வாழ்க்கைச் சூழலைப் பராமரிக்கவும் உதவக் கூடிய இவ்விரண்டு செயற் குறிப்புகளையும் பரிசீலிக்க வேண்டுமென இத் தருணத்தில் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திட்டத்திற்கான நிதியாதாரங்கள் பற்றிய வினாவுக்கு வருகிறேன். மாநிலத்தின் நிதி நிலையைச் சீரமைப்பதிலும், எவ்விதக் குறைபாடுமின்றி மாநிலத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதியாதாரங்களை உருவாக்குவதிலும் நாங்கள் வெற்றி கண்டுள்ளோம் என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு எங்களுக்கு முழு ஆதரவு அளிக்கப்பட்டால், தமிழ்நாடு உயர் வளர்ச்சிப் பாதையை எட்டுவது திண்ணம்.

2005–2006ஆம் ஆண்டுக்காக, திட்ட ஒதுக்கீடு செய்ய நாங்கள் இலக்கு ரூ. 9,000 கோடிக்கு மேல் நிர்ணயித்துள்ளோம். இது சாத்தியமே என்று நிதியாதாரங்களின் மதிப்பீட்டிலிருந்து தெரிகிறது. ஆனால், இதற்கு, உங்கள் வழக்கமான மத்திய நிதியுதவியைப் பெருமளவில் உயர்த்தி முழு ஆதரவு நல்க வேண்டும். குறிப்பாக உங்களிடமுள்ள சிறப்பு ஒதுக்கீட்டிலிருந்து "மத்திய அரசின் ஏனைய நிதியுதவி" என்பதன் கீழ் சிறப்பு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்நாட்டிலேயே, தமிழ்நாட்டின் நிதிநிலை தர அளவீடுதான் சிறப்பாக உள்ளது. எனவே, பொதுமக்களிடமிருந்தும், வங்கிகளிடமிருந்தும் பெறுகிற கடன்களிலிருந்து ரூ.300 கோடி தமிழ்நாட்டிற்கு, கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆதரவைக் கொண்டு, தமிழ்நாட்டில் வளர்ச்சிப் பணிகளுக்கு ஒரு புதிய உத்வேகமூட்டுவதற்காக, எங்களால், 2005–2006ஆம் ஆண்டுக்கு மேலும் அதிக அளவில் திட்ட ஒதுக்கீடு செய்ய முடியும்.

**2005–2006ஆம் ஆண்டுத்திட்டம் குறித்து புதுதில்லியில் 30.11.2004 அன்று திட்டக்குழு துணைத்தலைவருடன் நடத்திய விவாதத்தின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.**

## உடும்பு

பல்லிகள் குடும்பத்தைச் சேர்ந்த உடும்பு ஒரு விந்தையான பிராணி. பிடித்த பிடியை விடவே விடாது. "உடும்புப் பிடி" என்ற சொற்றொடரே இதன் பிடியிலிருந்துதான் உருவானது. கோட்டை மதிலின் மேல் ஏற இதன் உடல் பகுதியில் கயிற்றைக் கட்டி விடுவார்களாம். மதில் சுவரின் உச்சியை அடைந்ததும் இது நன்றாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளும். பின்னர் அதன் உடல் பகுதியிலிருந்து தொங்கும் கயிற்றைப் பிடித்துக்கொண்டு வீரர்கள் கோட்டை மதில் சுவர் மேல் ஏறுவார்கள் என்று கூறுவதுண்டு. கிழக்குப் பகுதியிலுள்ள பல கண்டங்களிலும் தீவுகளிலும் இது பரவலாகக் காணப்படும். 20 செ.மீ. நீளத்திலிருந்து 300 செ.மீ. நீளமுடையவை வரை உள்ளன. பெரும்பாலானவை 120 செ.மீ. நீளமுடையவையே.

பெண் உடும்பு 7 முதல் 35 முட்டைகள் வரை இடும். தோலுறை கொண்ட பெரிய முட்டைகள் இவை. நிலத்திலுள்ள குழிகளில் முட்டைகளிட்டு விட்டு பெண் உடும்பு போய்விடும். முட்டை பொரிந்து குஞ்சு வெளிவர பல மாதங்கள் வரை ஆகும்.

இன்று இந்தக் குடும்பத்தில் மிகப் பெரிய உருவம் கொண்டது கொமோடோ டிராகன் எனும் இனம். இந்தோனேஷியாவில் கொமோடோ எனும் இதன் நீளம் 3 மீட்டர். எடை 130 கிலோ. இன்று உயிர் வாழும் பல்லியினங்களில் மிகப்பெரியது இதுதான். இதன் உறுதியான தோல் பழுப்பு அல்லது கறுப்பு நிறத்தில் இருக்கும். இதன் உணவு சிறிய மான்கள், பன்றிகள், இறந்த விலங்குகள் முதலியன.

நம்நாட்டில் பசுங்காடுகளிலும், பாலைவனப் பகுதிகளிலும் பலவகை உடும்புகள் உள்ளன. சாதாரண உடும்பின் உடல் நீளம் 175 செ.மீ. வரை இருக்கும். இதில் வாலின் நீளம் மட்டும் 100 செ.மீ. வரைஇருக்கும். உடலில் ஒரு சில மங்கலான கறுப்புக் கோடுகள் இருக்கும். தலைப் பகுதியிலுள்ள செதில்கள் பெரிதாக இருக்கும். இதன் பற்கள் கூர்மையாகவும், நாக்கு மிக நீளமாகவும் பிளவுபட்டுமிருக்கும்.

இந்திய பாலைவனப் பகுதிகளில் காணப்படும் பாலைவன உடும்பின் உடல் பச்சை கலந்த மஞ்சள் நிறத்திலிருக்கும். அதன் மேல் சாம்பல் வண்ணப் புள்ளிகள் இருக்கும். இதன் வால் சாட்டைப்போல் இருக்கும். பொந்துகள்தான் இதன் உறைவிடம். ★

# கோயில் மேலாளர் குடும்பத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிதி உதவி

அநியாயமான முறையில் படுகொலை செய்யப்பட்டு விட்டதால், வருவாய் ஏதுமின்றி தங்களது குடும்பம் வறுமையில் வாடுகிறது என்றும், தனது மகன் ஆனந்த சர்மா, தனது மகள் உமா ஆகியோர் தொடர்ந்து கல்வி கற்க வழியின்றி இருப்பதாகவும் தெரிவித்து, தாங்கள் தொடர்ந்து வாழ்க்கை நடத்துவதற்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை மனு விடுத்திருந்தார். இந்தக் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அவரது குடும்ப நிலையை நன்கு கவனத்தில் கொண்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய் வழங்க ஆணையிட்டு, அதனை 22.11.2004 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 24.11.2004 அன்று



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 24.11.2004 அன்று தலைமைச் செயலகத்தில், 3.9.2004 அன்று படுகொலை செய்யப்பட்ட காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜ பெருமாள் திருக்கோயிலின் மேலாளர் திரு.சங்கரராமன் அவர்களின் குழந்தைகள் தொடர்ந்து கல்வி கற்கவும், அவரது குடும்பம் தொடர்ந்து வாழ்க்கை நடத்தவும் ஏதுவாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5 இலட்சத்திற்கான காசோலையை அவரது மனைவி திருமதி. பத்மா அவர்களிடம் நேரில் வழங்கினார்கள்.

காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் மேலாளராகப் பணியாற்றிய திரு. சங்கரராமன் அவர்கள் 3.9.2004 அன்று அத் திருக்கோயிலின் உள்ளே உள்ள அவரது அலுவலகத்தில் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து, திரு.சங்கரராமன் அவர்களின் மனைவி திருமதி. பத்மா, தங்களது குடும்பத்தலைவர்

தலைமைச் செயலகத்தில் 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை கொலை செய்யப்பட்ட திரு.சங்கரராமனின் மனைவி திருமதி. பத்மா அவர்களிடம் நேரில் வழங்கினார்கள். அப்போது, அவரது மகன் ஆனந்த சர்மா, மகள் உமா ஆகியோர் உடனிருந்தனர். நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட திரு.சங்கரராமன் அவர்களின் மனைவி திருமதி. பத்மா, அவர்களது மகன் ஆனந்த சர்மா மற்றும் மகள் உமா ஆகியோர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு கண்ணீர் மல்க தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். ★



# புதிய வீராணம் திட்டம்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வை!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்கும் அரிய திட்டமான புதிய வீராணம் திட்டத்தின் வெற்றியால், இன்றைக்குச் சென்னை மாநகரத்தின் குடிநீர்ப் பற்றாக்குறை தீர்க்கப்பட்டுள்ளது; சென்னை மாநகர் முழுமைக்கும் மீண்டும் குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள்.

புதிய வீராணம் திட்டம், சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்கும் அரிய திட்டம் என்பது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அயராத உழைப்பாலும், குலையாத நம்பிக்கையாலும், தளராத முயற்சியாலும் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு, ஒரு திட்டத்தைத் தொலைநோக்குப் பார்வையோடும், உள்ளத்தின் உறுதிப்பாட்டோடும் செயல்படுத்தினால், அந்தத் திட்டம் எத்தகைய மாபெரும் வெற்றியைப் பெறும் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் புதிய வீராணம் திட்டம்.

இந்த அரிய திட்டத்தை அறிவிக்கும் போதே எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் எத்தனை பேர்! இதற்கு அடிக்கல் நாட்டும்போது தடுக்கத் துடித்தவர்கள் எத்தனை பேர்! இதனைச் செயல்படுத்த முனைந்த ஒவ்வொரு கட்டத்திலும் தப்புப் பிரச்சாரம் செய்தவர்கள் எத்தனை பேர், எத்தனை பேர்? "வீராணம் திட்டம் – வீணான திட்டம்" என்று எள்ளி நகையாடினர் சிலர்.

கடந்த சில தினங்களாகச் சென்னை மாநகரில் ஓரளவு மழை பெய்து வருகிறது. மழை வெள்ளத்தைக் காணும்போது நமது மனங்களில் மகிழ்ச்சி வெள்ளம் ஊற்றெடுக்கிறது. ஆனால், அதற்கு முன் இருந்த நிலைமை என்ன?



கடந்த பல ஆண்டுகளாக, குறிப்பாக, சென்ற 3 ஆண்டுகளில் அடுத்தடுத்து பருவ மழை பொய்த்ததனால், கடும் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுச் சென்னை மாநகரமே தண்ணீரின்றித் தவித்தது. இதனால், மாநகரின் மூன்று குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களிலும் மிகக் குறைவான நீர் இருப்பே இருந்தது. இதன் விளைவாக, 18.1.2003 முதல், ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வழங்கும் ஏற்பாட்டை அரசு அறிமுகப்படுத்த வேண்டியது ஆயிற்று.


வீராணம் ஏரி – சுத்திகரிக்கப்படாத நீர் உள்வாங்கும் அமைப்பு

சென்னை மாநகரில் ஏற்படக்கூடிய பூதாகரமான தண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டும் எனில், கூடுதலாக ஒரு நீர் ஆதாரம் தேவை என்பதை 1993–ஆம் ஆண்டிலேயே உணர்ந்த காரணத்தால், சென்னை மாநகரின் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறை பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண, கூடுதலாகத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த வேண்டும் என்று தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் புதிய வீராணம் திட்டத்தை அப்போதே அறிவித்தார்கள். இந்தத் திட்டத்திற்கு உலக வங்கியும் 1,638 கோடி ரூபாய் கடன் வழங்க ஒப்புக் கொண்டது. இந்த நிலையில்தான் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பில் புதிதாக அப்போது பொறுப்பேற்ற தி.மு.க. இந்தத் திட்டம் குறித்து உளப்பூர்வமாக ஆய்வு செய்து இருந்தால், இதன் மூலம் கிடைக்க இருக்கும் பலன்கள் குறித்து நன்கு உணர்ந்து, இந்தத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி இருக்கும். ஆனால், அவ்வாறு செய்தால் இதில் கிடைக்கும் பெயரும், புகழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்குப் போய் விடும் என்ற குறுகிய நோக்கத்துடன் இத்திட்டம் கைவிடப்பட்டது. 2001–ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், புதிய வீராணம் திட்டத்துக்கு புத்துயிர் அளித்து, 2003–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் புதிய வீராணம் திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

வடகிழக்குப் பருவமழை மீண்டும் ஒரு முறை பொய்க்குமேயானால், சென்னை மாநகரில் கடும் தண்ணீர் பிரச்சினை உருவெடுக்கும். அந்தநேரத்தில், சென்னைக்குத் தண்ணீர் வழங்க கூடுதலாக மேலும் ஒரு நீர் ஆதாரத்தை நாம் ஏற்படுத்தவில்லை என்றால், சென்னை மாநகரை விட்டே மக்களை வெளியேற்ற வேண்டிய ஒரு அவல நிலை ஏற்பட்டு விடும். ஒருபோதும், அப்படி நிகழ இடம் கொடுத்து விடக்கூடாது என்று உறுதி பூண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்பட ஆரம்பித்தார்கள். இதன் அடிப்படையில்தான் எதிர்க்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும் செய்த கடும் விமர்சனங்களையும் பொருட்படுத்தாது, புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் முடிவு செய்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அப்போது எடுத்த முடிவு, மிகவும் சரியானது என்பது இப்போது நிரூபணமாகி, எதிர்க்கட்சிகளின் சந்தேகங்களும், குறை கூறியோரின் கூற்றுகளும் தவறு என்று இன்று மெய்ப்பிக்கப் பட்டுள்ளது. இடையூறுகளைத் தகர்த்து, இடர்ப் பாடுகளைத் தவிடு பொடியாக்கி, புதிய வீராணம் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்படுத்தியதன் மூலம், 2004–ஆம் ஆண்டின் கோடையில் சென்னை மாநகரிலிருந்து மக்கள் வெளியேற வேண்டிய நிலைமை தவிர்க்கப்பட்டது.

வடகிழக்குப் பருவமழை முற்றிலும் பொய்த்துவிட்டது என்பது 2003–ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியிலேயே தெளிவாகி விட்டது. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளிலும் தண்ணீர் இருப்பு கடந்த 54 ஆண்டுகளில், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு, மிகவும் குறைந்து விட்டது. இதன் விளைவாக, 2003–ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியிலேயே சென்னை மாநகரில் குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்குவதை அறவே நிறுத்த வேண்டியதாயிற்று. இவ்வாறு டிசம்பர் இறுதியிலேயே குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்குவதை நிறுத்த வேண்டிய நிலைமை முன் எப்போதும் ஏற்பட்டதில்லை. சாதாரணமாக, டிசம்பர் திங்கள்

இறுதியில் மூன்று நீர்த் தேக்கங்களிலும், மேலும் சில மாதங்களுக்குக் குழாய் மூலம் தண்ணீர் வழங்கக் கூடிய அளவுக்கு நீர் இருக்கும். புதிய வீராணம் திட்டத்தை விரைந்து செயல்படுத்தி, அதன் பயனாக கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு, 2004–ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு நிலவும் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் மிகுந்த சாமர்த்தியத்துடனும், விவேகத்துடனும் சமாளித்தார்கள்.

சென்னை மாநகரில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடிநீர் கிடைப்பதை உறுதிப்படுத்துகின்ற வகையில், ஒரு தெரு கூட தவறாமல், நகரின் மூலை முடுக்குகளில் எல்லாம் கூட, நாள்தோறும் தவறாது லாரிகள் மூலம் தண்ணீர் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு அசாதாரண முயற்சிகளை மேற்கொண்டது. தொடர்ந்து பருவமழை பொய்த்ததால், சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளும் அறவே வற்றிப் போயின. கிணற்று வயல்களில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து போனது. கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா நீர் பெற முடியாத நிலைமை ஏற்பட்டது. இவற்றின் காரணமாக, மிக மோசமான தண்ணீர்ப் பற்றாக்குறையைச் சென்னை மாநகர் சந்தித்தது. ஆனால், வழங்கப்படுகின்ற தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டாலும், தண்ணீர்ப் பற்றாக்குறையின் கடுமையை மக்கள் உணரா வண்ணம், கிடைக்கின்ற நீர் குறை சொல்ல முடியாத அளவுக்கு முறையாகப் பகிர்ந்து வழங்கப்படுவதை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு உறுதி செய்தது. 2004 ஜூன் வாக்கில் சென்னை மாநகரில் இருந்து மக்களை வெளியேற்ற வேண்டியிருந்திருக்கும் என்பதுதான் அன்றைக்கு இருந்த எதார்த்த நிலை. கடுமையான எதிர்ப்புகளுக்கு இடையிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் மிகவும் துணிச்சலோடு, 2003 பிப்ரவரியில் புதிய வீராணம் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். 2004 ஜூன் வாக்கில் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று தென்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மூலம், பண்ருட்டி – நெய்வேலி ஊற்றுப் படுகைகளின் ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீரை எடுத்து, அதன் மூலம் 2004 ஜூன் மாதத்தில், சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 75 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொண்டுவர முடிந்தது. இந்த அளவு, நாள் ஒன்றுக்கு 90 மில்லியன் லிட்டராக மேலும் உயர்த்தப் பட்டது. இது சென்னை மாநகர மக்களின் துயரைப் பெரும் அளவுக்குத் தணித்தது. தண்ணீர் வழங்கல் 2004 ஜனவரியில் நாள் ஒன்றுக்கு 175 மில்லியன் லிட்டர் என்ற அளவிலிருந்து, 2004 ஜூன் மாதத்தில் 205 மில்லியன் லிட்டராக உயர்த்தப்பட்டது. இதனால், 2004 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சென்னையிலிருந்து மக்கள் வெளியேற வேண்டிய நிலை தவிர்க்கப்பட்டது.

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகள் அறவே வறண்ட கோடையிலும், தண்ணீர் வழங்கப்படும் அளவை உயர்த்திய அதிசயம் நிகழ்ந்தது என்றால், அதற்குக் காரணம் புதிய வீராணம் திட்டக் குழாய்களைப் பதித்து, ஆழ்துளைக்கிணறுகளில் இருந்து தண்ணீர் கொண்டு வர முடிந்ததுதான்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு புதிய வீராணம் திட்டத்தை மேற்கொண்டு, அதற்கான குழாய் அமைக்கும் பணிகளையும் உடனடியாகத் தொடங்கி, ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீர் கொண்டு வந்ததால்தான், தண்ணீர்ப் பஞ்சத்திலிருந்து சென்னை மாநகர மக்களைக் காப்பாற்ற முடிந்தது.



குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் – சுத்திகரிக்கப்பட்ட நீரேற்று நிலையம் – வடக்குத்து


நீர் கொண்டு செல்லும் தேனிரும்புக் குழாய்கள்


நீர் அழுத்தம் குறைக்கும் தொட்டி – காடாம்புலியூர்

பண்ருட்டி–நெய்வேலி ஊற்றுப் படுகையைச் சேர்ந்த ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுத்து, புதிய வீராணம் திட்டம் குழாய்கள் மூலம் 2004 ஜூன் மாதத்தில் கொண்டு வரப்பட்ட போதும்கூட ஒரு சிலர் "ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்பட்ட தண்ணீர்தான் வருகிறது ; வீராணம் ஏரியில் தண்ணீர் எதுவும் இல்லை; ஆகவே, இந்தத் திட்டம் தோல்வி அடைந்து விட்டது" என்று விமர்சிக்கத் தயங்கவில்லை. ஆனால், இந்த விமர்சனங்களைப் பொருட்படுத்தாது ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்பட்ட தண்ணீர் கோடையில் சென்னை மாநகருக்கு வழங்கப்படும் என்றும், பருவ மழை பெய்து வீராணம் ஏரிக்குத் தண்ணீர் வந்தவுடன், அங்கிருந்து புதிய வீராணம் திட்டம் மூலமாக சென்னை மாநகருக்கு, நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்படும் என்றும், 5.8.2004 அன்றே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அன்றைக்குக் கூறியதைப் போலவே, 13.10.2004 அன்று முதல், பண்ருட்டி – நெய்வேலி ஊற்றுப்படுகையில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்படும் தண்ணீரை நம்பியிராமல், முற்றிலும் வீராணம் ஏரியில் இருந்து மட்டுமே நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கும் பணி தொடங்கப்பட்டது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். தொடர்ந்து, வீராணம் ஏரியில் இருந்து தற்போது நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப் படுகின்றது. இந்தத் தண்ணீர் முழுவதும், சென்னை மாநகர மக்களுக்கு ஒருநாள் விட்டு ஒருநாள், குழாய்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டம் குறித்து கூறப்பட்ட இன்னொரு குற்றச்சாட்டு, ஏரியின் ஆயக்கட்டு விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், விவசாயிகள் பாதிக்கப்படும்படி விட்டுவிட மாட்டேன் என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். அன்றைக்குச் சொன்னதை, சொன்னபடி, இன்றைக்கு உறுதிப்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். வீராணம் ஏரியில் இருந்து தண்ணீர் எடுப்பதால், அந்த ஏரி ஆயக்கட்டுப் பகுதியில் உள்ள விவசாயிகளின் நலன் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு உறுதி செய்து இருக்கிறது. கல்லணையில் இருந்து கூடுதலாக விடுவிக்கப்படும் தண்ணீரே, சென்னை மாநகருக்கு இந்த திட்டம் மூலம் வழங்கப்படுகிறது. இவ்வாறாக, வீராணம் ஏரி ஓர் இடைப்பட்ட நீர்த்தேக்கமாகத்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, வீராணம் ஏரி ஆயக்கட்டுப் பகுதியில் உள்ள விவசாயிகள், எந்த வகையிலும் இந்தத் திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக எவரும் ஒரு போதும் கூற முடியாது.

வீராணம் ஏரி ஆயக்கட்டுப் பாசனம் எக்காலத்திலும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்ற நோக்கத்திலும் வீராணம் திட்டத்தின் மூலம் ஏரியில் நீர் இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஆண்டு முழுவதும் சென்னைக்கு தினசரி 180 மில்லியன் லிட்டர் என்ற அளவில், நீர் விநியோகம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலும் மற்றுமொரு திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி கொள்ளிடம் ஆற்றுப் பரப்பிலேயே, 6 நீர் சேகரிப்புக் கிணறுகளை அமைத்து, தினசரி 150 மில்லியன் லிட்டர் நீர் எடுத்து, சேத்தியாதோப்பில் உள்ள வீராணம் ஏரியிலிருந்து நீர் எடுக்கும் கட்டுமான அமைப்பு வரை, குழாய் மூலம் எடுத்துச் சென்று, பின்னர் சென்னைக்குக் கொண்டு செல்லும், 300 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வீராணம் ஏரியின் நீர் இருப்பு குறைவாக இருக்கும் காலங்களிலும், நீர் இருப்பு இல்லாத காலங்களிலும், கொள்ளிடம் ஆற்றுப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள கிணறுகளிலிருந்து நீர் எடுக்கவும், இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், வீராணம் ஏரியின் பாசனம் பாதிக்கப்படாதது மட்டுமல்லாமல், சென்னைக்குத் தினசரி குறைந்தபட்சம் 150 மில்லியன் லிட்டர் நீர், தொடர்ந்து எக்காலத்திலும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பண்ருட்டி –

நெய்வேலி ஊற்றுப்படுகையில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து நீர் எடுப்பதால், எவ்வித பாதிப்பும் இல்லை என்பது ஆதாரப்பூர்வமாக அறியப்பட்ட போதிலும், அந்த ஊற்றுப்படுகையில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து நீர் எடுக்கப்படுவது இதனால் தவிர்க்கப்படும்.

கடந்த அக்டோபர் மாதம் ஓரளவு மழை பெய்த போதும் கூட, சென்னைக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளிலும் போதிய தண்ணீர் இருப்புச் சேரவில்லை. மேலும், கிருஷ்ணா நதி நீரும் இன்னும் வந்து சேரவில்லை. இந்தச் சூழ்நிலையில், குழாய்கள் மூலமாகத் தண்ணீர் வழங்குவது என்பது, ஒரு தொலைதூரக் கனவாகத்தான் இருந்திருக்க முடியும். ஆனால், திட்டமிட்டவாறு நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீரை வழங்குகின்ற வகையில், புதிய வீராணம் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதனாலேயே, குழாய்கள் மூலம் 13.10.2004 முதல் சென்னை மாநகரத்தில் தண்ணீர் வழங்குவது சாத்தியமாகி உள்ளது.

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகள், முற்றிலும் வறண்டு போய், கிருஷ்ணா நதி நீரும் வந்து சேராத நிலையில், சென்னை மாநகரில் குழாய் மூலம் தண்ணீர் வழங்கும் ஏற்பாட்டை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் தொடங்கி வைக்க முடிந்தது என்றால், அதற்குக் காரணம், சென்னை மாநகர் வாழ் மக்களின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்கின்ற வகையில், தொலைநோக்குப் பார்வையோடு திட்டம் தீட்டி, புதிய வீராணம் திட்டத்தை உரிய நேரத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் நிறைவேற்றி முடித்ததுதான்.

புதிய வீராணம் திட்டம், மிகக் குறுகிய காலத்தில், சிறப்பான முறையில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. வட கிழக்குப் பருவ மழை பொய்த்து, குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளுக்குப் போதிய நீர் வராத போதிலும் கூட, இந்தத் திட்டம், சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும், நம்பகமான ஒரு நீர் ஆதாரமாக அமைவதை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மாஅவர்கள் உறுதிப்படுத்தி உள்ளார்கள்.

மக்களைப் பாதிக்கும் மாபெரும் பிரச்சினைகளுக்குப் பல்வேறு தீர்வுகளைச் சிந்தித்து, அவற்றில் ஒற்றைத் தீர்வை மட்டும் நம்பியிராமல், ஏற்புடைய தீர்வுகள் எல்லாவற்றிற்கும் செயல்வடிவம் தந்தால்தான், நிரந்தரத் தீர்வு நிச்சயமாகக் கிடைக்கும். ஆகவேதான், சென்னைப் பெருநகர் பகுதிக்கு, நாள் ஒன்றுக்கு தேவைப் படுகிற, 840 மில்லியன் லிட்டர் தண்ணீரை வழங்க இயலும் வகையில், தற்போதைய மூன்று நீர்த்தேக்கங்கள், கிருஷ்ணா நதி நீர், கிணற்று வயல்களில் இருந்து கிடைக்கின்ற நிலத்தடி நீர், தற்போது நிறைவேற்றப் பட்டுள்ள புதிய வீராணம் திட்டம் மற்றும் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம், ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை இந்த அவைக்கு மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விதண்டாவாதங்களைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல், வீணான சந்தேகங்களுக்கு இடம் கொடுக்காமல், தமிழகத் தலைநகரின் தாகத்தைத் தணிக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன், மக்கள் மீது முழு நம்பிக்கை வைத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்பட்டதன் விளைவாக, புதிய வீராணம் திட்டம் இன்று வெற்றிகரமான திட்டமாக ஆகியுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தளராத முயற்சிக்குக் கிடைத்த, தனிப்பெரும் பரிசுதான் புதிய வீராணம் திட்டத்தின் வெற்றி.

கடும் தண்ணீர்ப் பிரச்சினையால் சென்னை நகரம் பாதிக்கப்பட்டு, தவியாய்த் தவித்துக் கொண்டிருந்த நிலையில், அதிரடி மாற்றமாய், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தன்னிகரற்ற சாதனையால், சென்னை மாநகர மக்கள் குழாய்கள் மூலம் தண்ணீர் பெற்று, மன நிறைவு கொண்டிருக்கிறார்கள். இதற்கு அடிப்படையாக, புதிய வீராணம் திட்டத்தை, தொலைநோக்குப் பார்வையுடன் தீர்க்கமாய்த் திட்டமிட்டு, திறம்படச் செயல்படுத்தி, 'ஏற்றது ஒரு கருத்தை எனது உள்ளம் என்றால், எவர்வரினும் நில்லேன் அஞ்சேன்' – என்னும் உறுதிப்பாட்டோடு செயல்படுத்தி, இத்திட்டத்தின் வெற்றிக்கு வழி வகுத்து வரலாற்றுச் சரித்திரச் சாதனை படைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களைப் பொதுமக்கள் நன்றியுடன் மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

சென்னை மாநகர மக்களுக்குக்
குடிநீர் வழங்கும்
புதிய வீராணம் திட்டத்தின்
வெற்றி குறித்து
மாண்புமிகு பொதுப்பணி,
மதுவிலக்கு & ஆயத்தீர்வை
மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்
திரு. **ஓ.பன்னீர்செல்வம்** அவர்கள்
22.11.2004 அன்று
சட்டப்பேரவையில் அளித்த அறிக்கை.

# சதாவதானி செய்குத்தம்பி பாவலர்

## பிறந்தநாள் விழா

தமிழ் இலக்கண இலக்கியங்களில் தேர்ந்த ஞானம் பெற்ற தமிழ் அறிஞரான சதாவதானி செய்குத்தம்பி பாவலர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம், கோட்டாறு – இடலாக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

1907 மார்ச் 10–ஆம் தேதி சென்னையில் தமிழ் அறிஞர்கள் முன்னிலையில் சதாவதான நிகழ்ச்சிகள் செய்து பாராட்டுப் பெற்ற, சிறந்த தமிழறிஞராகிய பாவலர் அவர்கள் நபிகள் நாயக மான்மிய மஞ்சரி, திருக்கோட்டாற்று திருப்பத்தந்தாதி, திருமதீனத்தந்தாதி,



கோட்டாற்றுக் கலம்பகம், கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ், கல்வத்து நாயகம், இன்னிசை பாமாலை, நீதி வெண்பா, ஷம்சுத்தாசீன் கோவை போன்ற கவிதை நூல்களையும், தேவலோக பழிக்குற்ற வழக்கு, வேதாந்த விவகார பழிக்குற்ற வழக்கு போன்ற வசன நடை காவியங்களையும் எழுதியுள்ளார்.

பாவலர் சீரிய தமிழறிஞர் மட்டுமின்றி நாட்டின் விடுதலைப் போராட்ட வீரராகவும் திகழ்ந்தவர். அயல்நாட்டுத் துணிகள் புறக்கணிப்பு, தீண்டாமை ஒழிப்பு போன்ற இயக்கங்களில் தீவிரமாகப் பங்கேற்றவர்.

பாவலரது தமிழ்த் தொண்டினையும், நாட்டுப் பற்றினையும் சிறப்பிக்கும் வகையில் முன்னாள் தமிழக முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் 29.4.1984 அன்று பாவலர் வாழ்ந்த இடமான கோட்டாறில் தமிழக அரசு சார்பில் நினைவுமண்டபம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு, பின்னர் 26.9.1987 அன்று திறந்து வைக்கப்பட்டது.

நாட்டிற்கு உழைத்த நல்லவர்களை, சுதந்திரப் போராட்டத் தியாகிகளை, தமிழறிஞர்களைப் போற்றி பாராட்டும் வகையில் விழா எடுத்து கௌரவிக்கும் தமிழக அரசு சார்பில் சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்தநாள் விழா ஆண்டுதோறும் அரசால் கொண்டாடப்பட்டு வருகிறது.

2004–ஆம் ஆண்டில் சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்தநாள் விழா தமிழக அரசின் சார்பில்



அக்டோபர் திங்கள் 8–ஆம் நாளன்று கோட்டாறு–இடலாக்குடி சதாவதானி செய்குத்தம்பி பாவலர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் சதாவதானி செய்குத்தம்பி பாவலரின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து, பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் மற்றும் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. என். தளவாய் சுந்தரம் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். அப்போது அவர், “நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் தொண்டாற்றிய தியாகச் சீலர்களின் நிறைவான பணியை நினைவு கூறும் வகையிலும், அவர்களின் வரலாற்றை இளைய சமுதாயத்தினரும் அறிந்து, அவர்கள் காட்டிய நல்வழியைப் பின்பற்றி சமுதாயத் தொண்டாற்ற வேண்டும் என்ற நோக்குடன் தமிழறிஞர்களுக்கும், சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கும் விழாக்கள் எடுத்து அரசு கௌரவித்து வருகிறது.

அந்த வகையில் தமிழுக்கு மட்டுமல்லாமல் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் சேவை செய்த பாவலருக்குப் பெருமை சேர்த்திடும் வகையில் அரசு சார்பில் பிறந்தநாள் விழா கொண்டாடப்படுகிறது. பாவலரின் செயல்பாடுகளை, அவர் நாட்டுக்கு ஆற்றிய அரும்பணிகளை மாணவ சமுதாயம் முழுமையாகத் தெரிந்து பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில் அவரது பெயரில் அமைந்த பள்ளியில் விழா எடுக்கப்படுகிறது. நாடு நல்ல நிலைக்கு வரவேண்டும் என்பதற்காக தன்னையே அர்ப்பணித்தவர் பாவலர் என்பதால் இன்னும் 100 ஆண்டுகள் கடந்தாலும் பாவலருக்கு விழா தொடர்ந்து நடக்கும். ஜாதி, மதத்திற்கு அப்பாற்பட்டு சமதர்ம சமுதாயம் படைத்திடும் வகையில் பாவலரது சேவை திகழ்ந்தமையால் அவர் மறைந்தாலும், அவரது புகழும் பெருமையும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழுக்காகப் பாடுபட்ட சுதந்திரப் போராட்ட வீரர் பாவலரைப் பற்றி மாணவர்கள் நன்கு அறிந்து அவரது நல்ல கருத்துகளை உணர்ந்து நல்லவர்களாக ஒழுக்கச் சீலர்களாக திகழ வேண்டும்'' எனக் கூறினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றும் போது, “சதாவதானி என்று போற்றப்படும் செய்குத்தம்பி பாவலர் அவர்களால் குமரி மாவட்டம் மட்டும் பெருமை அடையவில்லை. தமிழ்ச் சமுதாயமே பெருமை பெற்றுள்ளது. சிறந்த தமிழ்ப் புலவராக மட்டுமின்றி சுதந்திரப் போராட்ட வீரராகவும், மதநல்லிணக் கத்திற்காகப் பாடுபட்டவராகவும் பாவலர் திகழ்ந்துள்ளார். அதுமட்டுமல்ல தீண்டாமையை ஒழிக்க தந்தை பெரியாருடன் இணைந்து பாடுபட்டவர் என அவரது வரலாறு தெரிவிக்கிறது. இப்படிப்பட்ட நல்லவர்களை நாம் மறந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் இது போன்ற விழாக்களை அரசு எடுத்து பெருமை சேர்த்து வருகிறது. நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் பாவலர் செய்த சேவைகளை மாணவர்களும் நன்கு அறிந்து அவர் வழியைப் பின்பற்றி நல்லவர்களாக வாழ்ந்து நாட்டுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்” என கேட்டுக் கொண்டார்.

திரு. எஸ். ஆஸ்டின், எம்.எல்.ஏ. அவர்கள், நாகர்கோவில் நகராட்சித் தலைவர் திருமதி. எம். மீனா தேவ் ஆகியோர் விழாவிற்கு முன்னிலை வகித்தனர். சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகத் தலைவர் திரு. ஏ. ஜஸ்டின் செல்வராஜ், மாவட்ட வேளாண் விற்பனைக்குழுத் தலைவர் திரு. வி. சுயம்புலிங்கம், அறங்காவலர் குழுத்தலைவர் திரு. ஆர். கிருஷ்ணதாஸ், மாவட்ட கல்வி அலுவலர் திருமதி. மேரி ஜெசி ரோச், சதாவதானி பாவலர் அறக்கட்டளை தலைவர் பாவலர் பி.ஏ. சித்திக் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

**– கு. தாணப்பா,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகர்கோவில்.

* * *

# அகில இந்திய ரக்பி கால்பந்துப் போட்டியில் பங்கேற்ற விளையாட்டு வீரர்களுக்கு ரொக்கப் பரிசு



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 26.11.2004 அன்று தலைமைச் செயலகத்தில், 5.11.2004 முதல் 7.11.2004 வரை நடைபெற்ற அகில இந்திய ரக்பி கால்பந்துப் போட்டியில் பங்கேற்று, தமிழ்நாடு காவல்துறை அணி இரண்டாம் இடம் பெற்றதைப் பாராட்டி, அணியின் விளையாட்டு வீரர்களுக்கு ரொக்கப் பரிசு மொத்தம் 3 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை நேரில் வழங்கினார்கள்.

ஒரிசா மாநிலத்தின் தலைநகரான புவனேஸ்வரில் 5.11.2004 முதல் 7.11.2004 வரை அகில இந்திய ரக்பி கால்பந்துப் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 16 அணிகள் கலந்து கொண்டன. இதில் கலந்து கொண்ட தமிழ்நாடு காவல்துறை அணியானது, ஒரிசா பேந்த்தர்ஸ், கல்கத்தா கிரிக்கெட், கால்பந்து கிளப் மற்றும் சட்டீஸ்கர் அணிகளுடன் லீக் முறையில் போட்டிகளில் விளையாடி, வெற்றி பெற்று, அரையிறுதிப் போட்டியில் கொல்கத்தா காவல் துறை அணியைத் தோற்கடித்தது. பின்னர் நடைபெற்ற இறுதிப்போட்டியில் தமிழ்நாடு காவல் அணி, இந்திய இராணுவ அணியை எதிர்கொண்டு இரண்டாம் இடத்தைப் பெற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி தமிழக காவல்துறை ரக்பி கால்பந்து அணி 15.2.2003 அன்றுதான் ஏற்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. இந்தக் குறுகிய காலத்தில் தமிழக காவல்துறை ரக்பி கால்பந்து அணி தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்றுப் பரிசுப் பெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது.

தமிழ்நாட்டில் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அகில இந்திய ரக்பி கால்பந்துப் போட்டியில் பங்கேற்று இரண்டாம் இடம் பெற்ற தமிழ்நாடு காவல்துறை ரக்பி கால்பந்து விளையாட்டு வீரர்கள் 10 பேர் மற்றும் ஒரு பயிற்றுநர், ஆக மொத்தம் 11 நபர்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபாய் வீதம் ரொக்கப் பரிசுக்கான காசோலைகளை 26.11.2004 அன்று நேரில் வழங்கி அவர்களைப் பாராட்டினார்கள்.

❖ ❖ ❖



# தமிழகத்தில் புதிய தொழிற் புரட்சி! புதிய வேளாண்மைப் புரட்சி!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

தமிழ்நாட்டின் மையத்தில் அமைந்து இருக்கும் மாவட்டமாகிய பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறுகிற இந்த அரசு விழாவில் இன்று நான் கலந்து கொண்டு உங்களை எல்லாம் காண்பதற்கும் உங்களோடு என் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்தது குறித்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மாவட்டத்தை திருச்சி மாவட்டத்திலிருந்து பிரித்து புதிதாக உருவாக்கிய பெருமை உங்கள் அன்புச் சகோதரியாகிய எனக்கே உண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள்.

1995–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் நாள் பெரம்பலூர் மாவட்டம் பிறந்தது. இந்த மாவட்டம் என்னால் தொடங்கப்பட்டது என்பதற்காகவே, அடுத்து தமிழகத்தை ஆட்சி செய்ய வந்தவர்கள் இந்த மாவட்டத்தைப் புறக்கணித்தார்கள். வறட்சியால் அடிக்கடி பாதிக்கப்படும் மாவட்டம் என்பதை அறிந்திருந்தும் பொருளாதாரத்தில் பின் தங்கிய மாவட்டம் பெரம்பலூர் மாவட்டம் என்பது தெரிந்திருந்தும், இந்த மாவட்டத்தை முந்தைய அரசு வேண்டும் என்றே புறக்கணித்து மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொண்டது.

2001–ஆம் ஆண்டு மே மாதம் நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றதும், இந்த மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகளில் மிகுந்த அக்கறை காட்டினேன். அதன் தொடர்ச்சியாக, பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி பெற்று வருகின்ற மாவட்டமாக இன்றைக்குப் பெரம்பலூர் மாவட்டம் விளங்கி வருகின்றது.

செய்வதைச் சிறப்பாகச் செய்ய வேண்டும்; அவ்வாறு சிறப்பாகச் செய்வதையும் விரைவாகச் செய்ய வேண்டும். இந்தக் குறிக்கோளையே முன் வைத்து உங்கள் அன்புச் சகோதரியின் அரசு செயல்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள்.



மக்களின் ஜீவாதாரப் பிரச்சினைகளில் கூட விரைந்து தீர்வு காண முடியாத தலைவர்களும், தீர்வு காண விரும்பாத தலைவர்களும் நம் நாட்டில் உண்டு.

ஆனால், மக்களுக்கான எந்தத் திட்டமும் தாமதம் இன்றி விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பது தான் உங்கள் அன்புச் சகோதரியின் விருப்பம்; இலட்சியம் !

அதனால்தான், எத்தனை விரைவாகத் திட்டங்களைச் செய்து முடிக்க முடியுமோ அத்தனை விரைவாகத் திட்டங்கள் செய்து முடிக்கப்படுவதை நான் கவனமாகக் கண்காணித்து வருகிறேன்.

அவ்வாறு விரைந்து செயல்பட்டு குறைந்த காலத்தில் நிறைவாகச் செய்து முடிக்கப்பட்டதே புதிய வீராணம் திட்டம். பல ஆண்டுகளாக சென்னை மாநகரத்தைப் பாதித்துள்ள கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க கூடுதலாக ஒரு நீர் ஆதாரம் தேவை என்பதை உணர்ந்து நான், 2003–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் புதிய வீராணம் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து, மிகத் துரிதமாகப் பணிகளை முடுக்கி விட்டு, குறுகிய காலத்தில் பணிகளை நிறைவேற்றச் செய்து, 13.10.2004 அன்று முதல் சென்னை மாநகர மக்களுக்குக் குழாய்கள் மூலம் வீராணம் தண்ணீர் கிடைக்கச் செய்தேன்.

720 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வீராணம் திட்டம் மட்டும் நிறைவேற்றப்பட்டு இருக்காவிட்டால், தண்ணீரே இல்லாத காரணத்தால் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரத்தை விட்டே மக்கள் காலி செய்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கும். அந்த நிலை ஏற்படாமல் தடுத்து நிறுத்தியது எனது தொலைநோக்குப் பார்வையும், துரித நடவடிக்கையும் தான்.

ஆனால், 'வீராணம் திட்டம் வீணான திட்டம்' என்று வீம்பு பேசிக் கொண்டிருந்தவர்கள், இந்தத் திட்டத்தால் நிரந்தரப் பயனில்லை என்று ஜோதிடம் கூறியவர்கள், இந்தத் திட்டம் முழுக்க முழுக்கத் தோல்வியான திட்டம் என்று அபாயச் சங்கு ஊதியவர்கள் – இவர்களது தடைகளை எல்லாம் மீறித் தான் புதிய வீராணம் திட்டம் இன்று மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது என்பதை யாரும் மறந்து விட இயலாது.

இந்த மகத்தான வெற்றிக்குப் பிறகும் முழு மன நிறைவு அடைந்து விடாமல் சென்னை நகரின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய மேலும் என்ன செய்யலாம் என்பதை ஆராய்ந்து இன்னும் ஒரு திட்டத்தை நான் நிறைவேற்ற எண்ணினேன். குறைவாக மழை பெய்யும் ஆண்டுகளில் வீராணம் ஏரியில் போதுமான அளவு நீர் இருக்காது. அப்போதும் சென்னை மாநகருக்குத் தண்ணீர் கிடைத்தாக வேண்டும் என்று தீர்மானித்து கொள்ளிடம் நீர்ப் படுகையில் உள்ள ஆற்றின் உட்பரப்பு நீரை எடுத்து, சேத்தியாத் தோப்புக்குக் கொண்டு சென்று, ஏற்கெனவே வீராணம் திட்டத்தின் கீழ் செயலாக்கப் பட்டிருக்கும் உள் கட்டமைப்புகள் மூலம் சென்னை நகருக்கு நீரேற்றம் செய்யும் திட்டம்தான் அந்தத் திட்டம் !

வீராணம் ஏரியில் போதுமான அளவு நீர் இருக்கும்போது வீராணம் ஏரியிலிருந்து நீர் எடுத்தும், வீராணம் ஏரியில் நீர் இல்லாத போது தற்போது செயல்படுத்த உத்தேசித்துள்ள திட்டமாகிய கொள்ளிடம் ஆற்றின் உட்பரப்பு நீரை 6 கிணறுகளில் இருந்து எடுத்தும், சென்னை நகரின்

குடிநீர்த் தேவைக்கு தொடர்ச்சியாக நாள் ஒன்றுக்கு 150 மில்லியன் லிட்டரிலிருந்து 180 மில்லியன் லிட்டர் வரை நீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட உள்ள இத்திட்டத்திற்கான அடிக்கல்லை இன்று நான் நாட்டியதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

புதிய வீராணம் திட்டத்தைப் போலவே புதிய வீராணம் விரிவாக்கத் திட்டமாகிய இந்தத் திட்டமும் விரைவில் நிறைவேற்றப்படும். 2005–ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் மொத்தப் பணிகளும் முடிக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய வீராணம் விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படுவதால், இப்பகுதியிலுள்ள விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்று, உண்மைக்குப் புறம்பான அச்சத்தை விவசாயிகளின் மத்தியில் ஏற்படுத்த ஒரு சிலர் முனைந்துள்ளனர். புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்தின் விவரங்களை மூடி மறைத்து, கொள்ளிடம் ஆற்றுப் பகுதியில் ராட்சத ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, நிலத்தடி நீர் உறிஞ்சி எடுக்கப்பட்டு, சென்னை நகருக்கு வழங்கப்படும் என்ற ஒரு பொய்யான பிரச்சாரத்தை, வேண்டும் என்றே ஒரு சிலர் மேற்கொண்டுள்ளனர். உண்மையில், இத்திட்டத்தின் கீழ், கொள்ளிடம் ஆற்றின் உட்பரப்பு நீரைச் சேகரிப்பதற்காக 6 நீர் சேகரிப்புக் கிணறுகள் அமைக்கப்பட்டு அதிலிருந்து தான் தண்ணீர் எடுக்கப்படும்.

கீழ் அணையில் (Lower Anicut) பாசனப் பருவத்தில் வினாடிக்கு 4,000 கன அடி என்ற வீதத்தில் மேற்பரப்பில் தண்ணீர் கிடைக்கும். கீழ் அணையின் ஆயக்கட்டு பகுதிகளுக்கு சாகுபடிக்கு அந்தப் பருவத்தில் எடுக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 3,000 கன அடி தான். எனவே, மேற்பரப்பில் உபரியாக உள்ள தண்ணீரின் பெரும் பகுதி, நீர் சேகரிப்புக் கிணறுகள் அமையும் ஆற்றின் உட்பரப்பில், சேமித்து வைக்கப்படுகிறது. சேமிப்பு கிணறுகள் அமையும் பகுதியின் உட்பரப்பில் மணல் பகுதியின் ஆழம் சுமார் 25 மீட்டர் என கணக்கிடப்பட்டுள்ளது. நீர் சேகரிப்புக் கிணறுகள் 20 மீட்டர் ஆழத்தில்தான் அமைக்கப்படும். எனவே, நீர் சேகரிப்புக் கிணறுகளில் இருந்து பெறப்படும் தண்ணீர், கொள்ளிடம் ஆற்றின் மணல் பரப்பில் சேகரிக்கப்படும் தண்ணீர் தான்; நிலத்தடி நீர் அல்ல.



கொள்ளிடம் ஆற்றின் மேற்பரப்பிலும், உட்பரப்பிலும் கிடைக்கப் பெறும் தண்ணீரின் அளவு நாள் ஒன்றுக்கு 2,360 மில்லியன் லிட்டர் என்று தொழில்நுட்ப வல்லுநர்களால் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் ஏற்கெனவே குடிநீர் வாரியத்தால் போடப்பட்டுள்ள கிணறுகளில் இருந்தும், தற்போது சென்னை குடிநீருக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள 6 நீர் சேகரிப்புக் கிணறுகளிலிருந்தும், நாள் ஒன்றுக்கு 350 மில்லியன் லிட்டர் தண்ணீர் மட்டும் தான் எடுக்கப்படும். அதாவது, நீர் இருப்பில் 14.8 சதவிகிதம் தான் எடுக்கப்படும். எனவே, விவசாய நிலங்களில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் நீர்

வற்றிவிடும் என்பதற்கோ, அல்லது தண்ணீர் உப்பு நீராக மாறிவிடும் என்ற அச்சத்திற்கோ, எந்தவித அடிப்படை ஆதாரமும் இல்லை.

இவ்வாறு, ஆற்றின் உட்பரப்பில் உள்ள தண்ணீரை எடுப்பதால், விவசாய நிலங்களில் உள்ள நிலத்தடி நீர் எந்த வகையிலும் பாதிக்கப்படாது என்பது, நிலத்தடி நீர் ஆய்வு இயக்ககம் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து உறுதி செய்யப்பட்ட பிறகுதான், இத்திட்டத்திற்கு எனது அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சென்னை மாநகர மக்களுக்குத் தடையின்றி குடிநீர் வழங்கிட முக்கியத்துவம் அளிக்கும் அதே வேளையில், விவசாயிகளின் நலன் எந்த விதத்திலும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதில் எனது அரசு மிகுந்த கவனத்துடன், கண்ணும் கருத்துமாக உள்ளது என்பதை இந்த வேளையில் அறுதியிட்டுத் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். விவசாயிகள் நலனைக் காப்பதில் வேறு எவரைக் காட்டிலும், அதிக அக்கறை கொண்டுள்ள எனது தலைமையிலான அரசு, விவசாயிகளுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாத வகையில் தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடிவெடுத்துள்ளது என்று நான் உறுதியிட்டுக் கூற விரும்புகிறேன். எனவே, வீண் வதந்திகளால் விவசாயிகள் எந்தவித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்ட மக்களாகிய உங்களைக் காண வந்திருக்கும் நான், இந்த மாவட்டத்திற்கு மாபெரும் வளர்ச்சித்திட்டங்களையும், மாவட்டத்தைச் சேர்ந்த அடித்தளத்து மக்களுக்கு நலத் திட்ட உதவிகளையும் வழங்குவதற்காக வந்திருக்கிறேன்.

இன்றைய தினம் பெரம்பலூர் மாவட்டத்தில் அனைத்து மக்களும் பயன் அடையும் வகையில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பாக, 96 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 8,570 முடிக்கப்பட்ட பணிகளைத் திறந்து வைத்துள்ளேன். 183 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 493 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன். மேலும், பல்வேறு துறைகளின் சார்பாக, 9 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை 20,025 நபர்களுக்கு வழங்க உள்ளேன். ஆக மொத்தம், 289 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்களைப் பெரம்பலூர் மாவட்டத்திற்குக் கொண்டு வந்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு எனது அரசு எப்பொழுதும் முன்னுரிமை தந்து வருகிறது.

“தமிழகத்தில் புதிய தொழிற் புரட்சியை நிகழ்த்தி வருவதைப் போலவே புதிய வேளாண்மைப் புரட்சியையும் எனது தலைமையிலான அரசு நிகழ்த்தி வருகிறது. அதன் ஓர் அங்கமாக தமிழ்நாட்டில் தரிசாக உள்ள சுமார் 50 இலட்சம் ஏக்கர் பயிரிடத்தக்க தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற விரிவான தரிசு நிலத் திட்டத்தை நான் அறிவித்தேன். மழையையே பெரிதும் நம்பியுள்ள பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்கு இத்திட்டம் பெரும் பயன் அளித்து வருகிறது.”

அதன் அடிப்படையில், எனது அரசு பொறுப்பேற்றதில் இருந்து, இந்த மூன்றரை ஆண்டு காலத்தில் இம்மாவட்டத்தில் குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக, 52 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

இந்த இனிய விழாவில் ஜெயங்கொண்டம், உடையார்பாளையம், குரும்பலூர், லப்பைகுடிகாடு பகுதிகளும், ஆண்டிமடம் மற்றும் ஜெயங்கொண்டம் ஒன்றியங்களைச் சேர்ந்த 240 குடியிருப்புகளும் பயன்பெறும் வண்ணம், 43 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு குடிநீர்த் திட்டங்களைத் திறந்து வைத்ததிலும்; 20 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்ற இருக்கும் பல்வேறு கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கும், சிறு மின்விசை மற்றும் தனி மின்விசைக் குடிநீர்த் திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டியதிலும் அகமிக மகிழ்கின்றேன்.

கிராமப்புற பொருளாதாரம் துரித வளர்ச்சி அடைய சிறந்த சாலைகள் இன்றியமையாதவை ஆகும். எனவே தான் சாலை மேம்பாட்டுக்கு எனது அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

1995–ஆம் ஆண்டு எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் தமிழகச் சாலைகளை உலக வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்தத் திட்டமிட்டு செயல்பட்டேன். அதன் பின் வந்த தி.மு.க ஆட்சி இதனைச் செயல்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் தற்போது என்னுடைய அரசின் சீரிய அணுகுமுறையால், 2,160 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டத்திற்கு உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு, சாலை மேம்பாட்டுப் பணிகள் துவங்கப் பட்டுள்ளன என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பெரம்பலூர் மாவட்டத்தில் 93.8 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை 145 கோடி ரூபாய் மதிப்பில் இருவழித் தடச் சாலைகளாக மாற்றுவதற்கும்; அரியலூரில் புறவழிச் சாலை



ஒன்று அமைப்பதற்கும்; புதிய மேம்பாலம் ஒன்று அமைப்பதற்கும் அடிக்கல் நாட்டியதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், 38 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்ட சாலை மேம்பாட்டுப் பணிகளைத் திறந்து வைத்ததிலும் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழகத்தில் புதிய தொழிற்புரட்சியை நிகழ்த்தி வருவதைப் போலவே புதிய வேளாண்மைப் புரட்சியையும் எனது தலைமையிலான அரசு நிகழ்த்தி வருகிறது. அதன் ஓர் அங்கமாக தமிழ்நாட்டில் தரிசாக உள்ள சுமார் 50 இலட்சம் ஏக்கர் பயிரிடத்தக்க தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற விரிவான தரிசு நிலத் திட்டத்தை நான் அறிவித்தேன். மழையையே பெரிதும் நம்பியுள்ள பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்கு இத்திட்டம் பெரும் பயன் அளித்து வருகிறது.

இம்மாவட்டத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் 41,000 ஏக்கர் தரிசு நிலம் மேம்படுத்தப் பட்டுள்ளது என்பதை அறிந்து நான் மன நிறைவு அடைகிறேன்.

மேலும் 6 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் தரிசு நிலங்களை மேம்படுத்தும் பல்வேறு பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியதில் அகமிக மகிழ்கின்றேன்.

பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்றைய தினம் நானே எனது கரங்களாலேயே அனைத்து பயனாளி களுக்கும் வழங்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும் நேரம் போதாது என்பதை நீங்களே அறிவீர்கள். எனவே, மேடையில் 10 பயனாளிகளுக்கு மட்டும் நலத்திட்ட உதவிகளை நான் வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அதிகாரிகளும், இப்போதே இங்கேயே வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பெறுகின்ற நீங்கள் அனைவரும் அவற்றை ஆதாரமாகக் கொண்டு, உங்கள் தொழிலை மேம்படுத்தி கடின உழைப்பால் முன்னேறி வாழ்க்கையில் வளம் பெற வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இந்த விழா மிகச் சிறப்பாக நடைபெறக் காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. விவேகானந்தன் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**14.12.2004 அன்று நடைபெற்ற**
**பெரம்பலூர் மாவட்ட அரசு விழாவில்**
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**
**ஆற்றிய உரை**

# கோ-ஆப்டெக்ஸ்



## துணிகளில் முதன்மை...
## சிறப்பிலே மேன்மை!
## உங்கள் கோ-ஆப்டெக்ஸ்!

- பட்டுப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- பருத்திப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- கூடுதல் தள்ளுபடி விற்பனைத் திட்டம்
- வாடிக்கையாளரை சிறப்பிக்கும் திட்டம்
- மாணவர்களுக்கான ஹாஸ்டல் செட்
- குறைந்த விலையில் பருத்தி பிரிண்டட் சேலைகள் குறிப்பிட்ட சில ஷோரூம்களில் கிடைக்கும்
- வட்டியில்லாத கடன் வசதியை பயன்படுத்திக் கொள்வீர்

**மேலும் விவரங்கள் அறிய அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அனுகவும்.**

Visit us at www.tn.gov.in Visit us at www.cooptex.com

**எண்ணமெல்லாம் துணிமணிகள் என்றால்... வாங்குவதெல்லாம் கோ-ஆப்டெக்ஸ்!**



# முக்கடல் சங்கமத்தில் அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழா

இயற்கை அன்னையின் அரவணைப்பில், இந்தியத் திருநாட்டின் தென்கோடி முனையில் அரபிக்கடல், இந்தியப் பெருங்கடல், வங்காள விரிகுடா ஆகிய முக்கடலும் முத்தமிடும் வரலாற்றுச் சிறப்பு மிக்க தலம் கன்னியாகுமரி.

குமரியன்னை தவக்கோலத்தில் நின்று அருள் பாலிக்கும் புண்ணியத்தலம் கன்னியாகுமரியில் ஆதவன் உதித்தலும் மறைதலும் ஒரு தலத்திலே நிகழ்வது தனிச்சிறப்பு.

குமரி அன்னையின் திருக்கோயிலும், வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் தவமிருந்து ஞானோதயம் பெற்ற ஸ்ரீ பாதப்பாறையில் உருவாக்கப்பட்ட விவேகானந்தர் நினைவாலயமும், வான்புகழ் கண்ட வள்ளுவனுக்கு கடல் நடுவே 133 அடி உயர சிலையும், 1,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த இராஜராஜசோழனால் உருவாக்கப்பட்ட குகநாதீஸ்வரர் ஆலயமும், பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபமும், தென் இந்தியாவிலேயே சிறந்த சிற்பக் கலையுடன் கட்டப்பட்ட புனித அலங்கார உபகார மாதா ஆலயமும், அண்ணல் காந்தியடிகள் நினைவு மண்டபமும் கன்னியாகுமரியின் பழம் பெருமையைப் பறைசாற்று கின்றன.

15.1.1937–இல் மகாத்மா காந்தியடிகள் கன்னியா குமரிக்கு வருகை தந்தபோது "கடலின் எதிரேயுள்ள குமரிமுனையிலிருந்து இதனை எழுதுகிறேன். முக்கடலும் கூடி உலகத்தின் இணையற்ற எழிற் காட்சியைத் தருகின்றன. ஏனெனில் இது கலங்களை அழைக்கும் கடற்கரையல்ல. இத்திரு நிலத்துக்குமரி அன்னையைப் போலவே சூழ்ந்துள்ள கடல் நீரும் கன்னித்தன்மை பெற்றவையே" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

"I am writing this cape in front of the sea, where three waters meet and furnish a sight unequalled in the world. For this is no port of call for Vessels, like the Goddess, the waters around are virgin" (15-1-1937 - Gandhi).

இத்தகையச் சிறப்பு வாய்ந்த குமரி முனையில் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் அருகில் தேசபிதா மகாத்மா காந்தியடிகளுக்கு நினைவுமண்டபம் எழுப்பப்பட்டுள்ளது. குமரி கடற்கரையில் 1948–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12–ஆம் நாள் மகாத்மா காந்தியடிகளின் அஸ்தி கடலில் கரைக்கப்படுவதற்கு முன்பு பொதுமக்கள் பார்வைக்காக வைத்திருந்து பூஜைகள் செய்யப்பட்ட இடத்தில் நினைவு மண்டபம் அமைக்க, அப்போதைய கேரள அரசின் சார்பில் திரு. ஆச்சார்யா கிருபளானி அவர்களால் 1954–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20–ஆம் நாள் அடிக்கல் நாட்டப்பட்டு, 1956–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30–ஆம் நாள் மேதகு முன்னாள் கேரள ஆளுநர் பி.எஸ். ராவ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

காந்தியடிகளின் சர்வ மத சமத்துவ கொள்கையின்படி மண்டபத்தின் முன் பகுதி கிறிஸ்தவர்களின் ஆலயத்தின்

தோற்றத்துடனும், நடுப்பகுதி இந்துக் கோவிலின் கோபுர அமைப்புடனும் உட்பகுதி ஜும்மா பள்ளிவாசல் அமைப்பாகவும் அனைத்து மதங்களையும் பிரதிபலிக்கும் வகையில் மண்டபத்தின் தோற்றம் வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் காந்தியடிகள் பிறந்த தினமாகிய அக்டோபர் திங்கள் 2–ஆம் நாள் பகலவனின் ஒளிக்கதிர்கள் பகல் 12 மணிக்கு மண்டபத்தின் தியானப் பகுதியின் உட்புறம் அமைந்துள்ள அஸ்தி பீடத்தின் மேல் விழுகின்ற வகையில் கட்டடக் கலையுடன் மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

அண்ணல் காந்தியடிகள் மண்டபத்தில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் 2–ஆம் நாள் மகாத்மா காந்தியடிகள் பிறந்தநாள் விழா தமிழக அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. விழாவிற்கு பொதுமக்களும், உள்நாட்டு – வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்து அஸ்தி பீடத்தின் மேல் விழுகின்ற அதிசய ஒளி காட்சியினைக் கண்டுகளித்து அண்ணலுக்கு அஞ்சலி செலுத்துவது வழக்கம்.

இவ்வாண்டின் அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழா தமிழக அரசின் சார்பில் அக்டோபர் திங்கள் 2–ஆம் நாள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் புகழஞ்சலி செலுத்தும் போது, ''அகிம்சை, அன்பு, அமைதி ஆகியவற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்து, உலகிற்கே வழிகாட்டிய உத்தமர் அண்ணல் காந்தியடிகளின் வழி நின்று சமதர்ம சமுதாயம் உருவாக்கிட இளைஞர்கள் உறுதியேற்க வேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டார்.



காந்தி மண்டபத்தில் உள்ள அஸ்தி கட்டடத்தின் மீது நண்பகல் 12 மணிக்கு அபூர்வ சூரிய ஒளி விழுந்தது. அபூர்வ சூரிய ஒளி காட்சியை தேச பக்திப் பாடல்கள் முழங்க ஆயிரக்கணக்கானோர் கண்டு களித்தனர்.

விழாவில் திரு. எஸ். ஆஸ்டின், எம்.எல்.ஏ., சிறுபான்மையினர் நல மேம்பாட்டுக் கழகத் தலைவர் திரு. அ. ஜஸ்டின் செல்வராஜ், கன்னியாகுமரி சிறப்பு ஊராட்சித் தலைவர் திரு. குமரி எஸ். ஸ்டீபன், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மாவட்ட குழுத் தலைவர் திரு. எம். நாகப்பன் அவர்கள், கதர் கிராமத் தொழில்கள் வாரிய உதவி இயக்குநர் திரு. சங்கரலிங்கம் ஆகியோர் உட்பட ஆயிரக்கணக்கானோர் அண்ணலுக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

முன்னதாக காந்தி மண்டபத்தில் பெண்கள் திரளாகக் கலந்து கொண்ட ராட்டையில் நூல் நூற்கும் நூற்பு வேள்வியும், குமரி மாவட்ட சர்வோதய சங்கம் சார்பில் சர்வ சமயப் பிரார்த்தனை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

– கு. தாணப்பா,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகர்கோவில்.

❖ ❖ ❖

# தன்னம்பிக்கை வேண்டும்!

முன்னொரு காலத்தில் மிகப்புகழ் பெற்ற எழுத்தாளர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் மௌலானா ஜாமி. இவர் பாரசீக மொழியில் பலப்பல காவியங்களை எழுதினார். அவை அழியாப் புகழ் பெற்றவை. அவரிடம் ஒரு வினோதமான வழக்கம் இருந்து வந்தது.

அதாவது வெளியிலிருந்து வீட்டுக்குள்ளே நுழைந்தவுடன் அவர் தன் வீட்டுக் கதவுகள் இரண்டையும் நன்றாக மூடித் தாழ்ப்பாள் போட்டுக் கொள்வார். அவர் வீட்டை விட்டு வெளியேறும் போது இரண்டு கதவுகளையும் நன்றாகத் திறந்து போட்டு விட்டுப் போவார்.

இவர் இவ்வாறு செய்வது எல்லாருக்கும் ஆச்சரியத்தை விளைவித்தது.

"இவர் என்ன பைத்தியக்காரரா ? இப்படி ஒரு மனிதர் செய்வாரா ?" என்று அவர்கள் எண்ணிக் கொண்டார்கள். பொறுக்க முடியாத நிலைமை உருவானதும் அவர்களில் ஒருவர் கேட்டார்.

நீங்கள் இப்படிச் செய்வதன் காரணம் என்ன என்று எனக்கும், என் போன்ற உங்கள் நண்பர்களுக்கும் புரிந்து கொள்ள முடியவில்லை.

'இப்படிச் செய்வது ?'

' வீட்டை விட்டு வெளியேறும் போது கதவைத் திறந்து போட்டு விட்டுப் போய் விடுகிறீர்கள்.

வீட்டுக்குள் வரும் போது கதவை மூடிக் கொண்டு உள்ளே இருக்கிறீர்கள் !'

'சரி, அதற்கு என்ன இப்போது ?'

'உங்களின் செயல் எங்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறது'

இப்போது மௌலானா ஜாமி சொன்னார்.

'நான் வீட்டுக்குள்ளே இருக்கும்போது அதற்கு உள்ளே இருக்கக் கூடிய மிகவும் விலை உயர்ந்த பொருள் நான்தான். அதனால்தான் கதவுகளை மூடிக் கொள்கிறேன்.



வெளியே செல்லும் போது வீட்டுக்குள் எந்த விலை மதிக்கத்தக்க பொருளும் இல்லை என்று கருதுகிறேன். அங்கிருக்கும் மற்ற பொருட்கள் என் முன் தூசுக்குச் சமானம்.

ஆகையினாலேயே நான் கதவுகளைத் திறந்து போட்டு விடுகிறேன்.'

கேட்டவர் சிலையானார்.

*தன் மதிப்பு தனக்கே தெரியும் – நீதிமொழி*

*"பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை*
*பெருமிதம் ஊர்ந்து விடல்"*

*– திருக்குறள் 979*

*'பெருமைக் குணம் என்பது அகங்காரமே இல்லாதிருப்பது. சிறுமைக் குணம் என்பது அகங்காரமே நடத்தையாக உள்ளது.*

***– "திருக்குறள் காட்டும் எளிய நீதிக் கதைகள்" நூலிலிருந்து.***

# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களிடம் **6.12.2004** அன்று தலைமைச் செயலகத்தில், சென்னைப் பெருநகரில் கட்டப்பட்ட கட்டடங்களை "வரன்முறைப்படுத்தும் சிறப்புத் திட்டத்தின்" கீழ், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினால் பெறப்பட்ட ரூபாய் 5 கோடிக்கான காசோலையை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர் திருமதி. ஜெயந்தி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள். வீட்டுவசதித்துறை அரசு செயலாளர் (பொறுப்பு) திரு.டி. ராஜேந்திரன், இ.ஆ.ப., மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் – செயலர் திரு.ஜி.சந்தானம், இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களிடம் **6.12.2004** அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள், தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின் (TNPL) சார்பில், **2003–2004**ஆம் ஆண்டுக்கான அரசுக்குச் சேர வேண்டிய ஈவுத் தொகை **6** கோடியே **72** இலட்சத்து **23** ஆயிரத்து **475** ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். அப்போது, தொழில்துறைச் செயலாளர் திரு. ரமேஷ்ராம் மிஷ்ரா, இ.ஆ.ப., உடனிருந்தார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களிடம் **6.12.2004** அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆர். விஸ்வநாதன் அவர்கள், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் **2003–2004**ஆம் ஆண்டுக்கு அரசுக்குச் சேர வேண்டிய ஈவுத் தொகை ரூபாய் **4** கோடியே **40** இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். இந்த நிகழ்ச்சியின் போது, எரிசக்தித் துறைச் செயலாளர் (பொறுப்பு) திரு. என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., உடன் இருந்தார்.



19–11–2004 அன்று, தேசிய ஒருமைப்பாடு தினத்தினையொட்டி தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் தலைமையில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டார்கள்.



மூதறிஞர் ராஜாஜி அவர்களின் 126ஆவது பிறந்தநாளையொட்டி, 10–12–2004 அன்று, சென்னை பாரிமுனை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



மகாகவி பாரதியாரின் 123ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள மகாகவி பாரதியாரின் சிலைக்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் 11–12–2004 அன்று மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு. கராத்தே ஆர். தியாகராஜன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத் தலைவர் திரு. ஆதிராஜாராம் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

# உலக வங்கி உதவியுடன் 597.15 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை (19–12–2004)

ஒரு மாநிலம் மனித வளத்தில் மேம்பட்டு இருக்க வேண்டும் எனில், அங்குள்ள மக்கள் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். இதனால் தான், "அனைவருக்கும் நல்வாழ்வு" என்ற இலக்குடன், மாநில மக்கள் அனைவருக்கும் சுகாதாரச் சேவைகள் அளிப்பதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழும் வகையில் எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில்தான், தன்னிகரற்ற தமிழகத்தைப் படைக்க நான் உருவாக்கிய 15 அம்சத் திட்டத்தில் 'சுகாதாரப் பாதுகாப்பு' ஒரு முக்கிய அம்சமாகச் சேர்க்கப்பட்டு, தமிழக மக்கள் அனைவரின் நலன் பேணுவதில், எனது தலைமையிலான தமிழக அரசு தனி கவனம் செலுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசு இவ்வாறு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக இந்தியாவிலேயே சிறந்த சுகாதாரக் குறியீடுகளை அடைந்த மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது. சிசு இறப்பு விகிதத்தைக் குறைக்க தமிழகஅரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன் மாதிரியாகத் திகழ்கிறது. மேலும், குடும்ப நலம், குழந்தைப் பேறு சார் நலம், குழந்தைகள் நலம், தடுப்பூசித் திட்டங்கள் மற்றும் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல் போன்ற பிரிவுகளில் தமிழ்நாடு பல சாதனைகளைப் படைத்துள்ளது. எய்ட்ஸ், தொழுநோய், காச நோய் மற்றும் பார்வைக் குறைபாடு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் சுகாதாரத் திட்டடங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது.

தமிழக மக்கள் அனைவருக்கும் தடையற்ற மருத்துவ சேவைகள் வழங்கவும், ஆண், பெண் மற்றும் குழந்தைகள் நலம் பேணி ஆரோக்கியமான வாழ்க்கையை அவர்களுக்கு வழங்கிடவும், எனது தலைமையிலான அரசு, உலக வங்கி நிதி உதவியுடன் 597.15 கோடி ரூபாய் மதிப்பில், 'தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம்' என்னும் மாபெரும் சுகாதாரத் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மக்களின் நல்வாழ்வுக்கு என இத்தகைய மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்த நிதி உதவி கோரி உலக வங்கி அணுகப்பட்டது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டும் என்று நான் மேற்கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாக ' தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம்' உலக வங்கியால் மதிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதனைச் செயல்படுத்த 110.83 மில்லியன் அமெரிக்கன் டாலர் அதாவது, இந்திய மதிப்பில் 502.95 கோடி ரூபாய் கடன் உதவி வழங்க உலக வங்கி தற்போது ஒப்புதல் அளித்துள்ளது. மாநில அரசின் பங்கான 94.20 கோடி ரூபாயுடன் சேர்த்து 597.15 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களின், குறிப்பாக பெண்கள், ஏழை எளியோர், பழங்குடியினர் ஆகியோரின் உடல் நலத்தை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டம் 2005–ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். இதற்கான ஒப்பந்தம் 2005–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உலக வங்கியுடன் செய்து கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 270 மாவட்ட, வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளின் உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். பேறுகால சிக்கல்களுக்கும் மற்றும் இளம் சிசுக்களுக்கான அவசர சிகிச்சைகளுக்கும் 24 மணி நேர சேவைகள் அளிக்க ஒருங்கிணைந்த பேறுகால மற்றும் சிசு கவனிப்பு மையங்கள் 62 மருத்துவமனைகளில் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின் மூலமாக தெற்கு ஆசியாவிலேயே முதன் முறையாக, தொற்று நோயல்லாத பிற நோய்களான உயர் இரத்த அழுத்தம், கருப்பை வாய் புற்று நோய் ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்தும் மற்றும் சிகிச்சை அளிக்கும் முன் மாதிரித் திட்டங்கள் தமிழகத்தில்தான் செயல்படுத்தப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. எளிதில் சென்று அடைய முடியாத இடங்களில் வசிக்கக் கூடிய மலைவாழ் பழங்குடியின மக்களை அணுகி உயர் சிகிச்சை அளித்து அவர்களது உடல்நலத்தைப் பேணும் வகையில் மருத்துவ வசதிகள் மேம்படுத்தப்படும். இவை தவிர, நெடுஞ்சாலை விபத்துகளில் அடிபட்டவர்களுக்கு உரிய நேரத்தில் முதலுதவி மற்றும் சிகிச்சை அளிக்கவும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகள் மனநிறைவு அடையும் வண்ணம் மருத்துவமனைகளின் சேவைத் தரத்தை உயர்த்துவதும் இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் மருத்துவமனைக் கழிவுகளைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்தும் திட்டமும் செயல்படுத்தப்படும்.

மேலும், இந்தத் திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைக்ளில், மகப்பேறு பிரிவு உள்நோயாளிகள், வெளி நோயாளிகள் பிரிவுகள், அறுவைச் சிகிச்சை பிரிவு, தீவிர சிகிச்சை பிரிவு ஆகிய பிரிவுகளுக்குத் தேவையான கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும். தீவிர சிகிச்சை, இரத்தசுத்திகரிப்புகளுக்கான (Haemodialysis) மருத்துவக் கருவிகள் உயிர்காக்கும் சுவாசக் கருவிகள் (Ventilators) எக்ஸ்–ரே மற்றும் அல்ட்ரா சோனோகிராம் போன்ற நவீன மருத்துவக் கருவிகள் இத்திட்டத்தின் கீழ் அரசு மருத்துவ மனைகளுக்கு அளிக்கப்படும்.

அவசரகால போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கு அவசரகால ஆம்புலன்சு ஊர்திகள் தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 385 வட்டாரங்களுக்கும் அளிக்கப்படும். அனைத்து மருத்துவமனைகளும் ஒருங்கிணைந்த சுகாதார தகவல் மேலாண்மைத் திட்டத்தின் மூலம் இணைக்கப்படும்.

அனைத்து பொது சுகாதார வசதிகளுக்கான கட்டமைப்பு வசதியை வலுப்படுத்துதல், ஆரம்ப, நடுத்தர மற்றும் உயர்நிலை மருத்துவ நிறுவனங்களிடையே கலந்தாய்வு தொடர்புகளை உருவாக்குதல், மருத்துவப் பணியாளர்களின் திறமையை உயர்த்தி சுகாதார வசதிகளைப் பெருக்குதல், மருத்துவ வசதிகளை அளிக்க தகவல் தொழில் நுட்ப வசதிகளைப் பெருமளவில் பயன்படுத்துதல் மற்றும் சென்றடைய முடியாத குக்கிராமங்களுக்கும், தேவையான அளவு மருத்துவ வசதிகள் இல்லாத பகுதிகளுக்கும் மருத்துவ வசதிகளை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் தமிழக மக்களுக்கு 'சுகாதாரப் பாதுகாப்பு' அளிப்பது என்றும் என்னுடைய தலைமையிலான தமிழக அரசின் கொள்கையை நிறைவேற்ற ' தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம்' பேருதவியாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ★



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள், 10.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில், தங்களது கல்விச் செலவினை மேற்கொள்ள போதிய நிதி வசதி இல்லாது தவித்த எம்.பி.பி.எஸ்., பல் மருத்துவம், செவிலியர், ஹோமியோபதி, பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றில் பயிலும் மாணவ மாணவிகள் 79 பேருக்கு, கல்வி நிதி உதவியாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் 19 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை நேரில் வழங்கினார்கள்.



# விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம்

❖ ❖ ❖

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆணை

❖ ❖ ❖

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று சுதந்திரம் அடைவதற்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்டு துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களான தங்களுக்கு, தமிழ்நாடு அரசு வழங்கும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம் வழங்கி உதவிட வேண்டுமெனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனு கொடுத்திருந்த திருநெல்வேலி, நீலகிரி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 6 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளத்தைச் சேர்ந்த திரு. எஸ். ஞான ஒளிவு, நீலகிரி மாவட்டம், நஞ்சநாடு கிராமத்தைச் சேர்ந்த திரு. பி.எம். குண்டன், திரு. ஜெ. ஹள்ளி கவுடர், திரு. எல்.காளு, திரு. சி. நஞ்சா கவுடர், மதுரை மாவட்டம், தும்பைப்பட்டியைச் சேர்ந்த திரு. வி. சோமய்யா ஆகிய விடுதலைப் போராட்ட வீரர்கள், தாங்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சுதந்திரம் பெறுவதற்காகப் போராடி, சிறையில் அடைக்கப்பட்டு துன்பம் அனுபவித்ததாகவும், அதனடிப்படையில் தங்களுக்கு மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம் வழங்கக் கோரி பல ஆண்டுகளாக கோரிக்கை மனுக்கள் கொடுத்த போதும் தங்களது கோரிக்கை இதுவரை ஏற்கப்படவில்லை என்றும் தெரிவித்து, மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம் வழங்கக் கோரி பல ஆண்டுகளாக கோரிக்கை மனுக்கள் கொடுத்த போதும் தங்களது கோரிக்கை இதுவரை ஏற்கப்படவில்லை என்றும் தெரிவித்து, மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியத்தை தங்களுக்கு வழங்கி உதவிட வேண்டும் என்றும் வேண்டி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை மனு அளித்திருந்தனர்.

இந்த மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவர்களது தியாகத்தைப் போற்றி மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியத்தை உடனடியாக வழங்கிட ஆணையிட்டார்கள். இதன்படி, இவர்கள் அனைவருக்கும் ஓய்வு ஊதியமாக மாதம் ஒன்றிற்கு 3,000 ரூபாயும், மருத்துவப் படியாக மாதம் ஒன்றிற்கு 15 ரூபாயும், ஆக மாதந்தோறும் மொத்தம் 3,015 ரூபாய் அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, சிறையில் அடைக்கப்பட்டு துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகத்திற்கு மதிப்பளித்து கௌரவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கிட ஆணையிட்டுள்ள இந்த ஓய்வு ஊதியத்திற்கான அரசு ஆணை, 4.12.2004 அன்று திருநெல்வேலி, நீலகிரி மற்றும் மதுரை ஆகிய மாவட்ட தலைநகரங்களில் அம்மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மேற்காணும் விடுதலைப் போராட்ட வீரர்களிடம் நேரில் வழங்கப்பட்டது. ❖

# தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில்

# வீரன் சுந்தரலிங்கம் பிறந்தநாள் விழா

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் வட்டம் கவர்னகிரியில் தமிழக அரசின் சார்பில் வீரன் சுந்தரலிங்கம் அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கு மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வெ. சந்திரசேகரன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. என். தளவாய்சுந்தரம் அவர்கள் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி பேசும்போது,

''இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட சுதந்திரப் போராட்டத் தியாகிகளை என்றைக்கும் மறக்க கூடாது என்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தியாகிகளுக்கு விழா எடுத்து வருகிறார்கள். 200 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நாட்டின் நிலைமையினை நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும். அனைத்து நோய்களையும் நாம் கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும். தமிழ்நாட்டில் ஆண்டுக்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் லிட்டர் இரத்தம் தேவைப்படுகிறது. ஆனால் நம்மிடம் 1.7 இலட்சம் லிட்டர் மட்டுமே இரத்தம் உள்ளது. தமிழக அரசு சுகாதாரத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது'' என்று தெரிவித்தார்.



பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளி களுக்கு ரூ.6 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி அவர்கள் ஆற்றிய உரையில்,

''தென் தமிழகத்தில் 96 கிராமங்களை உள்ளடக்கி, வாழ்ந்து மறைந்த வீரபாண்டிய கட்டபொம்மன் அவையில் சிறந்ததொரு தளபதியாகத் திகழ்ந்தவர் வீரன் சுந்தரலிங்கம் அவர்கள். தியாகிகள் பிறந்த மண்ணில் பெருமை சேர்க்க வேண்டும் என்று பல்வேறுத் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து செயல்படுத்தி வருகிறார்கள். தூத்துக்குடி மாவட்டத்தில் 42 ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுக்கான விடுதிகள் உள்ளன. இதில் 10 விடுதிகள் மட்டுமே வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதில் 6 விடுதிகளுக்கு புதிய கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் வீரன் சுந்தரலிங்கம் அவர்களின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து பேசும்போது,

''வீரன் சுந்தரலிங்கம் அவர்கள் தனது இளம் வயதிலேயே கபடி, வில் வித்தை, வாள் அம்பு எறிதல் போன்ற பல்வேறு விளையாட்டுகளில் திறமை படைத்தவராக இருந்துள்ளார். இது ஒரு குக்கிராமமாக இருந்தாலும் இன்று இந்தியாவில் உள்ள அனைவரும் உற்று நோக்கும் வகையில் அமைந்துள்ளது. இன்று நாட்டில் பலர் சாதித் தலைவர்களாக உள்ளனர். ஆனால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சாதிக்க வல்லத் தலைவராக விளங்குகிறார். வீரன் சுந்தரலிங்கம் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடும் இந்நாளில் சாதி சமய வேறுபாடு இன்றி அனைவரும் ஒன்றுபட்டு உயர்வோம் என உறுதி கொள்வோம்'' என்று கூறினார்.


BY

தமிழரசு
R.N.I.No.21446/70
RGN No.TN/PMG (CCR) 836/03-05, WPP-518

